



**ப்ரபட்டிக் ரெவலேஷன்**
கிம் மோ எஸ்டேட் போஸ்ட், தபால் பெட்டி எண்.333
ரிப்பப்ளிக் ஆப் சிங்கப்பூர் - 912742

**ப்ரபட்டிக் ரெவலேஷன்**

மனிதனைக் கட்டி வைக்கிற பாவத்தை
கண்டுபிடித்தார் என்று செயின்ட அகஸ்டின்
நினைத்தார். மரத்திலிருக்கும் கனி அல்ல,
பூமியில் நின்று இருந்த அந்த ஜோடிக்கு
உண்டான பாவ இச்சை என்று சொன்னார் அவர்.
சரியாகச் சொன்னாரா?

# மூல பாவம்



*சர்ப்பத்தின்*
*வித்தின்*
*உபதேசம்*

காதுள்ளவன் எவனோ, அவன் கேட்கக்கடவன்!

# ப்ரபட்டிக் ரெவலேஷன்

கிம் மோ எஸ்டேட்
தபால் பெட்டி எண்.333
ரிப்பப்லிக் ஆப் சிங்கப்பூர் - 912742
இண்டர்நெட் வெப்ஸைட் முகவரி
http://arriveat.com/propheticrevelation
இமெயில் முகவரி : doveagle@singnet.com.sg
Fax : (65) 8902301

முதல் தமிழ் பதிப்பு - 2015, டிசம்பர், 1000 பதிப்புகள்


இந்தப் புத்தகம், உலகம் முழுவதும், கடைசிகால செய்தியிலிருக்கும், விசுவாசிகளின் அன்பினாலும், தங்களின் காணிக்கைகளினாலும், உங்களுக்கு விநியோகம்பண்ணப்படுகிறது. இது 'பிராபடிக் ரெவலேஷன்' **(தீர்க்கதரிசன வெளிப்பாடு)** மூலமாக வெளியிட்டு ஜெபத்துடன் வழங்கப்படுகிறது. இந்த செய்தியில் அளிக்கப்பட்டுள்ள வார்த்தை உங்களுக்கு ஒரு ஜீவனுள்ள வெளிப்பாடாக மாறி நீங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தை சுமந்தவர்களாய் எல்லா மனிதர்களுக்கும் முன்பதாக நிற்கும்படியே இது வெளியிடப்பட்டுள்ளது.

இப்புத்தகத்தினுடைய கூடுதல் வெளியீடு கையிருப்பு இருக்கும் வரையில், "கடைசிகால செய்தியை" உண்மையாய் தேடுகிறவர்களுக்கு இலவசமாய்க் கொடுக்கப்படும்.

இவ்வூழியத்திற்கு காணிக்கை கொடுக்க விரும்புகிறவர்கள் பணமாகவோ 'செக்'காகவோ, மணி ஆடர் மூலமாகவோ, நேரடியாக ரிச்சர்டு கேன் அவர்களின் பெயருக்கு அனுப்பவும்.

இந்தப் புத்தகம் விற்கவோ அல்லது பணசேகரிப்புக்காகவோ பயன்படுத்தப்படக்கூடாது.

வெளியீடு : ரிச்சர்டு கேன்



தேவன் ஒளியாயிருக்கிறார், அவரில் எவ்வளவேனும் இருளில்லை (பாரம்பரியம் இல்லை) இது நாங்கள் அவரிடத்தில் கேட்டு உங்களுக்கு அறிவிக்கிற விசேஷமாயிருக்கிறது – 1யோ 1:5.

**இந்த புஸ்தகம் முக்கியமான உபதேசமாகிய மூலப்பாவத்தைக் குறித்து மெய்யான வெளிப்பாட்டைக் கொடுக்கின்றது.**

## எச்சரிப்பு

இந்த புஸ்தகம் உங்கள் சபையில் இருக்கும் பாரம்பரிய போதனைகளிலிருந்து உங்களைத் திருப்பி ஒருவிசை பரிசுத்தவான்களுக்கு ஒப்புவிக்கப்பட்டு விசுவாசத்திற்கு போராடும்படி உங்களை அசைக்கும்.

மொழிபெயர்ப்பாளர் : **பாஸ்டர் ஷாத்ராக் K.ஜோசப்**

இந்தப் புத்தகத்தை நீங்கள் பெற்றுக் கொள்வதற்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :


**பாஸ்டர் ஷாத்ராக் K. ஜோசப்**
**ரேமா ஜீவ ஊழியம்,**
ஷாலோம் வீதி, செந்தமிழ்நகர்,
சுகுணாபுரம் கிழக்கு, குனியமுத்தூர், கோவை – 641 008
தமிழ்நாடு, இந்தியா. செல் : +91-7402261037
இமெயில் : meetshadrachinholycity@gmail.com

# The amazing twins with different dads

THE mother was delighted when told she was going to have twins. But she wasn't so pleased when they were born, because one was white and the other was black.

It happened in West Germany – one of the rare cases of twins having different fathers. Only a handful of double-dad biths have been recorded in the last 150 years.

One was in Britain 13 years ago and the family – from London – had fought to keep its identity a secret. But they've had to make sacrifices.

The mother lived with one of the fathers, but they opted not to marry because they might have to disclose identity of the twins.

## PREVIOUS HUSBAND

The twins' fathers were the woman's previous husband and her lover, who she now lives with. They were conceived when she made love to both men on the same day.

But according to Dr Paul Terasaki, who has been called as an expert witness in more than 2,500 paternity cases, twins with different fathers can be conceived up to a month apart.

He made a major breakthrough in this remarkable field when a woman sued the alleged father of her twins in California last year.

Dr Terasaki, Professor of Surgery at the state university's medical school, was called in when the man denied the charge.

The doctor rejected the standard red blood cell test, using instead a method called tissue typing. And he discovered the twins had two fathers. He told the mother of his findings and she named a second man, who was found to be one of them.

## DISTINCTIVE AS FINGERPRINTS

So she dropped her suit against her former lover and married the other man in her life. "He knows one of the children isn't his, but he's supporting it," says Dr Terasaki.

The case was resolved because Dr Terasaki analysed antigens in white blood cells. There are countless permutations of antigens – which stimulate the production of anti-bodies – and everybody's pattern is as distinctive as fingerprints.

A child inherits half of each parent's pattern, so a father's identity can be proved conclusively.

But Dr Terasaki doesn't expect the method to uncover twins with different fathers again in the near future. He says the chances are millions to one against.

# Twins with two dads

PINE BLUFF (Arkansas), Mon. — A mother, who filed a paternity suit against her college boyfriend to win support for her twin sons, got a surprise when the results of blood tests came back — he fathered one twin but not the other.

Dr Sterling Roaf, the mother's obstetrician, said it may be the first time blood tests have proved that twins were conceived on separate occasions.

Dr Roaf said he had suspected the twins were conceived on separate occasions before their separate paternity was established by Dr G.L. Ryals, who conducted the tests at a laboratory in Burlington, North Carollina.

Doctors have known for years that a woman entering pregnancy can still conceive up to 60 days after her last menstrual period, Dr Roaf said.

So theoretically, twins could be conceived up to 60 days apart — a phenomenon called superfecundation.

"With fraternal (non-identical) twins, there are two eggs and two sperm cells which cause conception, as happened with these boys," Dr Roaf said.

"What most people don't know is that maybe more often than we think, these twins weren't conceived at the same time."

Dr Ryals testified in a court here last week that his tests showed that Larry Joe Turntine, 23, was the father of Irene Foote's son, Dedrick.

But he said there is almost no chance that Turntine is the father of the other twin, Cedrick.

Judge Fred Davis followed the doctor's findings in ruling that Turntine must pay Ms Foote US$4,300 (S$8,987) in child support and US$32 a week for Dedrick alone. — UPI



## முன்னுரை

“**மூலப் பாவம்**” என்ற தலைப்பின் **உபதேசத்தில்**, எனதுக் கருத்தை என் நண்பன் ஒருவர் எதிர்த்தார்.அவருக்கு பதில் தரும் வகையில், 1974ல் எழுதப்பட்ட “பதிலுரை” தான் “இந்த புத்தகமாக” மாறியது.

“**மனிதனின் வீழ்ச்சி**” ஒரு இயற்கை மரத்தின் கனியைப் புசித்ததினாலே ஏற்பட்டது என்பது பாரம்பரிய சபையின் கருத்தாகும். இந்த கருத்துக்கு என் நண்பன் பலமாகப் போராடினார். நான் 1971-ல் தேவ வார்த்தையின் வெளிச்சத்தின் வெளிப்பாட்டில் வழி நடத்தப்பட்டேன். அச்சமயம், இந்த இரகசியத்தை அச்சிட வாஞ்சையாய் இருந்தபடியால், இந்த வெளியீடு செப்டம்பர் 1981 ல் அச்சிடப்பட்டது. இந்த புத்தகத்தின் முந்தின வெளியீடுகளை வாசித்தவர்களின் நல்ல அபிப்ராயங்களினால் நான் உற்சாகப்படுத்தப்பட்டு, இந்த ஐந்தாவது திருத்தப்பட்ட வெளியீட்டை உருவாக்கியுள்ளேன். இது அடிப்படை உபதேசத்தை வாஞ்சிக்கிறவர்களுக்கு உதவும் என்ற நம்பிக்கையோடு வெளியிடப்பட்டுள்ளது.

இந்த புத்தகத்தை வாசிக்கின்ற - சத்தியத்தை தேடுகிறவர்கள் பயபக்திக்குரிய தேடுதலிலும், ஜெபத்திலும் தரித்திருந்து, **மூலப் பாவத்தின் சத்தியத்தை** அதின் படியே பார்த்து, புரிந்து கொள்ள வேண்டும் என்பதே எனது ஜெபம். **ஸ்தாபன பெயர்-கிறிஸ்தவர்களின்** ஆவிக்குரிய வாஞ்சை குறைவாய் இருப்பதினால், தேவ வார்த்தைக்குள் உற்று நோக்கத் தவறுகிறார்கள்.

இவர்கள் தங்களை ஏதோ ஒரு ஸ்தாபன சபை அல்லது

கிறிஸ்தவ அமைப்புகளோடு இணைத்துக் கொண்டு, அதிலே திருப்தி அடைவதால், **தேவ வார்த்தைக்குள்** இருக்கின்ற ஆவிக்குரிய உள்ளான பார்வை குறைந்தவர்களாய் உள்ளார்கள்.

எனவே, என் நண்பனே உன்னைக் குறித்து என்ன? அடிப்படைக் கூறு இருக்கின்ற அல்லது இல்லாத ஸ்தாபன சபைகளில், ஒரு கிறிஸ்தவனாக மாத்திரம் உன்னைப் பற்றிக் கொண்டிருக்கிறாயா ? எதுவானாலும்சரி. நீ இந்த வெளியீட்டிலுள்ள அனைத்து கேள்விகளிலும் உன்னை ஈடுபடுத்தி, கவனமாக உன்னை தேவ வார்த்தையின்படி "அவைகள் உண்டாயிருந்ததா" என்று ஆராய்ந்து பார்க்க விரும்புகிறேன். மேலோட்டமான "அறிவினாலும்", "அறியாமையினாலும்" தவறுகள் வருகின்றது என்று நினைவு கூறுங்கள். இவை, பாரம்பரிய சபையின் வேராக பிரசங்கிமார்களால் போதிக்கப்படுகின்றது. ஆனபடியால்,

“நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும், சத்திய வசனத்தை நிதானமாய் பகுத்து போதிக்கிறவனாயும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாய் இரு” - (II தீமோத்தேயு - 2:15).

இந்த **மூலப் பாவத்தின் உபதேசத்தை** நீங்கள் புரிந்து கொண்டால்தான், மெய்யாகவே இயேசுகிறிஸ்து **கன்னியின் வயிற்றில் பிறக்க வேண்டும் என்பதும், ஏன் தமது விலையேறப் பெற்ற இரத்தத்தை சிந்தி,** நம்மை ஆக்கினைத் தீர்ப்பிலிருந்து இரட்சித்தார் என்பதையும் பாராட்ட முடியும்.



**ரிச்சர்டு L.S. கேன்**
**எழுதியவர்**





**60,000-year-old skeleton shows primitive man could talk**

TEL AVIV — Archaeologists in Israel have unearthed a 60,000-year-old Neanderthal skeleton that indicates, for the first time, that the primitive hominids were anatomically able to talk.

Elsewhere in Israel, other scientists have turned up the skeleton of a more advanced hominid who was anatomically identical to present-day humans but who, paradoxically, lived 30,000 years before the Neanderthal.

This find seems to confirm a similar discovery last year whose validity and meaning have been questioned.

Together, the two most recent discoveries appear to answer some questions about human origins while raising others.

Among the tantalising possibilities is that Neanderthal man and the more advanced, anatomically modern human could talk to each other.

The latest Neanderthal discovery, made at Kebara cave in Israel by Israeli and French scientists, is that of a skeleton containing a hyoid bone, which lies between the chin and larynx.

The small, U-shaped bone anchors the muscles that move the tongue, lower jaw and larynx.

Never before had a Neanderthal skeleton been found with this key bone in place, said Dr Baruch Arensburg of the Department of Anatomy and Anthropology at Tel Aviv University.

Dr Arensburg is the chief author of a paper describing the discovery in Thursday's issue of the British journal, Nature.

In shape, size and position, he said, the Neanderthal hyoid bone is identical to that of modern humans and indicates that the anatomy of speech was the same in both, and that they could speak in the same way.

Whether they actually did is still unknown, Dr Arensburg and other scientists say, because it is unknown whether the Neanderthal brain could handle speech. — NYT.

**பாலிய இன்பமல்ல.** ஆதாமும், ஏவாளும் பாலிய ஐக்கியத்தின்பால் **ஜீவனுக்கு ஏதுவான காலத்தில் மாத்திரமே,** அந்த ஜீவ விருட்சத்தில் இருந்து பங்குபெற்று ஒன்று சேரும்படி வருவார்கள். அதுவே, தேவன் விரும்பத்தக்கதான குமாரர்களையும், குமாரத்திகளையும் கொண்டுவரக்கூடியதாயிருக்கும், ஆனால், ஏவாள் சர்ப்பத்தின் வஞ்சகமான பேச்சுகளைக் கேட்டு நன்மை-தீமை அறியத்தக்க (முரண்பாட்டு ஞானம்) விருட்சத்தால் மயங்கினாள் (ஆதி 3:6). அப்பொழுது ஸ்திரீயானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும் பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்பட்டதக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து புசித்து... (ஆதி 3:6). அவள் கண்டு, (புரிந்து கொண்டு) அந்த ஞானத்தை அவள் இச்சித்தாள். சர்ப்பத்துடன் அவள் விபச்சாரம் செய்யும்போது அவள் வஞ்சிக்கப்பட்டாள் என்பதைக் கூட அவள் அறியாமலிருந்தாள்.

வீழ்ச்சிக்குப் பிறகு, மனிதர்கள் சுகபோக பிரியர்களாய் இந்தநாள் வரை மாறிவிட்டார்கள். மிருகங்கள் பாலிய இன்பத்திற்காக ஒன்று கூடுவதை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? தங்கள் இனப்பெருக்கத்தின் நோக்கத்திற்காக மாத்திரமே ஒன்று சேருகின்றன. ஆனால், இன்றைய மனிதர்களைப் பாருங்கள். மிருகங்கள் போல அவர்கள் இருக்கின்றார்கள் என்று அடிக்கடி சொல்லப்படுகின்றது. ஆனால், மிருகங்களைக்காட்டிலும் மோசமாக நடக்கின்றார்கள்.

### 15. சர்ப்பத்தின் ஜோடி

தேவன் சகல சிருஷ்டிகளையும் ஜோடியாக படைத்தார் என்று அறிந்திருக்கிறோம். ஊரும் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பாம்பாக தேவன் சர்ப்பத்தை சபித்தபோது அவன் ஜோடி என்னானது?

அவனுடைய ஜோடியும் அவனோடு சேர்ந்து பாம்பின் குடும்பத்தின் ஜாதிக்குள் உற்பத்தி பண்ணும்படி சபிக்கப்பட்டுப் போனது. தேவன் கோராத்தாத்தான், அபிராமை மோசேயில் தலைமைக்கு விரோதமாய் எழும்பினதின் நிமித்தம் அழித்துப்போடும்போது அவர்களின் மனைவிகளையும் அவர்களோடு கூட அழித்தார். (எண் 16:27,31,32, தானி 6:24 வாசியுங்கள்).





# மனிதனின் வீழ்ச்சிக்கு காரணமாயிருந்த மூலப் பாவம் என்ன?

**1.** "இது **பாவ மன்னிப்பு** உண்டாகும்படி அநேகருக்காக சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய **என்னுடைய இரத்தமாய்** இருக்கிறது" (மத்தேயு - 26:28).

மனிதனின் வீழ்ச்சியானது, ஆதாமின் கீழ்ப்படியாமையினாலே ஏற்பட்டிருக்குமானால், **எதற்காக** இயேசுகிறிஸ்துவாகிய நபரின் குற்றமில்லாத விலையேறப்பெற்ற இரத்தம் நமக்கு இரட்சிப்பை பெற்றுத்தர சிந்தப்பட வேண்டும் ?

வேதம் சொல்லுகிறது,

> " இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும், பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்தது போலவும், எல்லா மனுஷரும் பாவஞ் செய்தபடியால், மரணம் எல்லோருக்கும் வந்தது போலவும் இதுவும் ஆயிற்று" - (ரோமர் : 5:12).

வேதத்தில் யாத்திராகமம் 20:5, 34:7, எண்ணாகமம் 14:18, உபாகமம்: 5:9 ல் பிதாக்களின் அக்கிரமத்தை மூன்றாம் அல்லது நான்காம் தலைமுறை வரைக்கும் விசாரிப்பேன் என்று தேவன் சொல்லியிருக்க, **ஏன்** பாவம் **எல்லா** தலைமுறை மேலும் விழ வேண்டும்?


இப்பொழுதும் நமது தகப்பன் ஆதாமும், தாய் ஏவாளும் செய்த பாவம், நான்கு சந்ததிக்கு மாத்திரமல்லாமல் எல்லா சந்ததியினருக்கும் விழுந்த அக்கிரமம் (அ) பாவம் என்னவாயிருக்கும்?

நீங்கள் இன்னும் இதை வாசித்து தியானம் செய்வீர்களானால், ஆதாமும், ஏவாளும் செய்த ஒன்று, ஒரு தலைமுறையிலிருந்து மற்றொரு தலைமுறையினருக்கும், அதற்குப்பின் இன்றுவரை உள்ள எல்லா சந்ததிக்கும் கடந்து வருவதை உங்களால் காண முடியும்.

**2.** **ஏன்** தேவன் வேறெந்த பொருள் இல்லாமல் தமது சொந்த **இரத்தத்தைத்** தெரிந்து கொண்டார்?

மனிதனின் வீழ்ச்சிக்குக் காரணம், ஆதாமும், ஏவாளும் வெறும் **இயற்கை மரத்தின் கனியைப்** புசிக்க அல்லது பங்கு பெறக் கூடாத தேவ கட்டளைக்குக் கீழ்படியாமல் போனதே என்று பாரம்பரியமும், ஸ்தாபன சிந்தையும் நிறைந்த போதகர்கள் ஜனங்களை நம்ப வைத்துள்ளார்கள்.

தடை செய்யப்பட்ட இயற்கை மரத்தின் கனியை புசித்ததே, மனிதனின் **வீழ்ச்சிக்குக்** காரணம் என்றால், **மீட்பும்** வேறொரு இயற்கை மரத்தின் கனியைப் புசிப்பதே என்று தேவன் அளித்திருப்பார், ஏனெனில், "வேறே சேதமுண்டானால், ஜீவனுக்கு ஜீவன், கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல், கைக்குக் கை, காலுக்குக் கால்" (யாத்திராகமம் : 21:23-25, வெளி: 13:10) என்பது அவர் **பிரமாணத்தின் தேவையாகும்.**




நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ள ஆதாமுக்கும், ஏவாளுக்கும் இன்னொரு இயற்கை மரத்தின் கனியைப் புசிக்க தேவன் அளிக்கவில்லை என்றால், மனித குலம் முழுவதும் விழுந்து போவதற்கு ஒரு இயற்கை மரத்தின் கனியைப் புசித்தது, காரணமாக இருக்க முடியாது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். இது முற்றிலும் தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் போனது மட்டுமல்லாமல், மனித வீழ்ச்சிக்கு, மீட்பு இயேசு கிறிஸ்துவின் **இரத்தம்** சிந்தப்படுவது **அவசியமானது** என்பது முக்கியத்துவப் படுத்தப்பட்டுள்ளது. **மனிதனுடைய இரத்தம், வீழ்ச்சிக்கு சம்பந்தப்பட்டிருக்க வேண்டும். இல்லை என்றால், மனிதர்களின் பாவங்களை மன்னிக்க, தேவனுக்கு வேறோரு நபரான** தம்முடைய ஒரே பேறான குமாரனின் இரத்தம் சிந்தப்படுவது தேவைப்பட்டிருக்காது. (எபிரெயர் - 9:22, மத்தேயு -26:28 - இரத்தத்திற்கு இரத்தம்). ஆகவே, மாறுபடும் மனிதர்களுக்குள் இருக்கும் பாவத்தினிமித்தம் உண்டான **மரணத்தின் இரத்தக் கறையின் சுபாவம்** கழுவப்பட, சுத்தமும் பாவமும்





எங்களை பின்பற்றக் கூடியவர்களுக்கு, இப்படிப்பட்ட ஒரு அறிவை பரப்பியுள்ளார்கள். எனவே, பாகால் மதங்களில் பால் ஆராதனை இருக்கின்றது. அது விபச்சாரத்திற்கு அடையாளமாக இருக்கின்றது. ரோமர் 1-ல் பவுல், மனிதர்கள் சிருஷ்டிகரைத் தொழுது கொள்ளாமல் சிருஷ்டியைத் தொழுது கொண்டார்கள் என்று சொல்லவில்லையா? இந்த நாள்வரைக்கும் பாலிய அனுபவங்களிலே **ஞானத்தைக்** கண்டடைய முடியும் என்ற சர்ப்பத்தின் பொய், தங்கள் ஜோடிகளை அடிக்கடி மாற்றிக் கொள்கிற ஆண்கள், பெண்கள், வாலிபர்கள் போன்றவர்களைப் பற்றிப் பிடித்துக் கொண்டிருக்கிறது.

"**இன்பம்**" என்கிற வார்த்தை (எபிரேயரில் "தாவா") என்பது ஏக்கம், இனிமை, விருப்பம், ரசிக்கத்தக்கதான, பேராசை, இச்சித்துக் கொண்டிருப்பது இந்த வார்த்தை நேரடியாக "உணவு", "வாஞ்சை", "ஞானம்" ஆகியவைகளோடு கட்டுப்பட்டுள்ளது. ஏவாள், (ஆதி 3:6) "அப்பொழுது ஸ்திரீயானவள் அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது." அது மாம்சீக பாவங்கள் சம்பந்தப்பட்டதாய் இருந்தது. அதாவது "மாம்சீக இச்சை, கண்களின் இச்சை மற்றும் ஜீவனத்தின் பெருமை" (1யோவான் 2:16).

## 14. பாலுறவின் ஐக்கியம்

எபி 13:4ன்படி விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயும், விவாக மஞ்சம் அசுசிப்படாததாயுமிருப்பதாக; வேசிக்கள்ளரையும், விபச்சாரக்காரரையும் தேவன் நியாயந்தீர்ப்பார் என்பது உண்மை. தேவன் ஆணையும், பெண்ணையும் மாம்சத்தில் வித்யாசப்பட்டவர்களாயும், ஆனால் ஒருவருக்கொருவர் அன்பாயிருக்கும்படி உண்டாக்கினார். அவர்களுடைய மாம்ச இணைப்பின் மூலமாக **அவர்கள் உற்பத்தி பண்ணும்படி, அவர்களுடைய பாலங்கங்கள் வித்யாசமாக சிருஷ்டிக்கப்பட்டது**. மிருகங்கள், செடிகள் போன்ற வேறுபட்ட ஜாதியிலும், ஆணும், பெண்ணும் இருப்பது போல அவர்கள் மாமிசத்தில் ஒன்று சேர்ந்து, அதினதின் ஜாதியின்படி பிறப்பிப்பதே **தேவனுடைய எண்ணமாக** இருந்தது. பாலங்கத்தின் நாளில் இருவரும் ஒரு மாம்சமாகி பிள்ளைகளைப் பெற்றெடுக்க வேண்டிய ஒரு காரியமாக இருக்க வேண்டியதாயிற்று. (ஆதி 2:24) ஆதியிலே தேவன் ஸ்திரீயை மனிதனோடு பரிசுத்த திருமணத்தில் இணைக்கும்போது, **உற்பத்தி செய்வதே அவர் முதல் நோக்கமே அன்றி,**

"விருட்சங்கள்" ஏவாளும், சர்ப்பமும், ஏவாளும் இயேசுகிறிஸ்துவும் என்று வாக்குவாதம் செய்கின்றன. இப்படிப்பட்ட தவறான போதனைகள் வேத வசனத்திலிருக்கும் சிலவாத்தைகளைத் தவறாக புரிந்துகொண்டதே அதற்குக் காரணமாயிருக்கின்றது. அதனிமித்தம் அவர்களுடைய வியாக்கியானங்களெல்லாம் நிலையற்று இருக்கின்றன.

(ஆதி 2:9) இரண்டு விருட்சங்கள் தோட்டத்தின் நடுவே அடுத்தடுத்து இருந்தது என்று சொல்லவில்லை. அதுமாத்திரமல்ல, தேவக்குமாரனாகிய இயேசுகிறிஸ்து, இன்னமும் இராதபடியினாலே அவள் ஏதேன் தோட்டத்தில் இருந்திருக்க முடியாது. ஆதி 2:9 இப்படி சொல்லுகிறது, "தேவனாகிய கர்த்தர், பார்வைக்கு அழகும் புசிப்புக்கு நலமுமான சகலவித விருட்சத்தையும் தோட்டத்தின் நடுவிலே ஜீவவிருட்சத்தையும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தையும் பூமியிலிருந்து முளைக்கப் பண்ணினார்".

இந்த **இரண்டு விருட்சங்களும்,** மனிதனின் சரீரத்தில் (தோட்டம்) நடு பாகத்திலுள்ள பால் அங்கத்தை ஆளுகை செய்கின்ற **இரண்டு பிரமாணங்களைக்** குறிக்கின்றது. இந்த ஜீவ விருட்சமென்பது, தெய்வீக வழி அல்லது ஜீவ பிரமாணமாகும். தெய்வீக நித்திய ஜீவனுக்கு தெய்வீக தேவன் தெய்வீக சத்தியத்தை கொடுத்ததாகும். நீதி 3-18 சொல்லுகின்றது "அவள் (அதாவது **ஞானம்** 13,19 வசனங்கள், சிருஷ்டிக்கும் தெய்வீக ஜீவ வார்த்தையின் அடையாளமாகும்....) அது தன்னை அடைந்தவர்களுக்கு ஜீவ விருட்சம். அதைப் பற்றிக் கொள்கிற எவனும் பாக்கியவான்"

## 13. இன்பம் - ஞானம்

ஆதி 3-6 சொல்லுகிறபடி, 'அப்பொழுது ஸ்திரீயானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும் புத்தியைக் தெளிவிக்கிறதற்கு தடை செய்யப்பட்ட விருட்சத்தின் கனியைப் புசிப்பது எப்படி ஒருவனை **புத்திமானாக்கும்**? "புத்திமான்" என்கிற வார்த்தை பகுத்தறிதலுடன் நியாயம் தீர்க்கும் வல்லமை என்று அர்த்தமாகும். இந்த வார்த்தை பயன்படுத்துவது ஆழமான கருத்துடையதாயிருக்கிறது. பாபிலோனிலிருந்து தோன்றிய எல்லா **பாகால் மதங்களும் "ஞானம்" என்பது தெய்வீக பிரமாணத்திலிருக்கும் ஆணுக்கும், பெண்ணுக்கும் உடைய உறவுக்கு வெளியில் வரும் பாலுறவின்** வல்லமையில் வரும் என்று





இல்லாத, **நித்திய ஜீவனுக்குரிய கிறிஸ்து இயேசுவின் இரத்தம்** தேவைப்படுகிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ( 1 யோவான் : 1:7, ரோமர்: 3:24-25 வாசிக்கவும்)

**3.** ஆதியாகமம் : 9-4, லேவி - 14:4, உபாகமம்:12:23, யோவான் - 6:53 இவைகளின் படி **இரத்தத்தில் ஜீவனுண்டு** அல்லது இரத்தமே ஜீவன். **மனிதருக்குள் "நித்திய ஜீவன்" ஆரம்பக் கட்டத்தின் நியமமாக இருந்தது. ஆனால் "மரணம்" உச்ச நிலையில் ஆளுகை செய்கின்றது**. (வாசிக்கவும்: ரோமர் : 5:12,14,17).

**ஏன்? எப்படி? தேவனுடைய உயர்வான படைப்பு - மனிதனின்** சரீரத்தில் சுத்தமான இரத்தத்திற்குள் முற்றிலுமான **வெளிப்பொருள்** (அதே இனத்தை சேர்ந்ததல்ல) அறிமுகப்படுத்தப்பட்டது. அது முதல் **மரணம்** மனிதனின் வலுவாக இருக்கிறது.

**எந்தக் கலப்பிட இனங்களும் தேவப் பிரமாணத்தில் மாறுபாடானது.** தேவன் தமது சிருஷ்டிப்பிலே, பூமியானது காய்கறிகளையும், மீன்களையும், பறவைகளையும், மிருகங்களையும் "அதின் அதின்" ஜாதியின்படியே பிறப்பிக்கக்கடவது என்கிற பிரமாணத்தை வைத்துள்ளார். (இந்தச் சொல் ஆதியாகமம் : 1:11,12,21,24,25ல் பத்து முறை சொல்லப்பட்டுள்ளது). **ஒரே ஜாதியை சேர்ந்ததை உற்பத்தி செய்யாமல் இருப்பது இந்த பிரமாணத்திற்கு விரோதமான செயலாகும்.** இது கர்த்தராகிய தேவனின் கண்களில் பாவமாகும். கலப்பிடம் மரணத்தின் காரணமாகின்றது. அது இன்னொரு ஜீவனை உற்பத்தி செய்ய முடியாது. மிருக இராஜ்ஜியத்தில், விஞ்ஞானம் குதிரையையும் கழுதையையும் ஒன்று சேர்த்தி கோவேறு கழுதையையும், சிங்கத்தையும் புலியையும் ஒன்று சேர்த்தி லைகரையையும், வரிக்குதிரையையும் பெண் கழுதையையும் ஒன்று சேர்த்தி சேடாங்கையும் உருவாக்கினது. இந்த எல்லா கலப்பினங்களும், மலட்டுத் தன்மை உடையதாய் (கனியற்றதும், ஜீவனை உற்பத்தி செய்யும் தன்மை இல்லாமை)இருக்கிறது. இவைகள் தேவனுடைய இயற்கை பிரமாணத்திற்கு விரோதமாய் இருக்கின்ற உற்பத்திகளாய் இருக்கிறபடியினால், அவைகள் இயற்கை ஜீவனை உற்பத்தி செய்ய முடியாததாய் இருக்கின்றது. ஆகவே, அவர்களுடைய ஜாதியில் இயற்கையே மரணத்தை (மலட்டுத் தன்மை) ஆளுகை செய்கின்றது. (இதன்மூலம் ஸ்தாபன சபைகளிலே மரணம் மாத்திரமே இருக்கின்றது என்று நம்மால் காணமுடிகிறது. அவர்கள், தேவனுடைய **சுத்தமான வார்த்தையை** மனிதனால் உண்டாக்கப்பட்ட கொள்கையோடும், கோட்பாடுகளோடும், பாரம்பரியங்களோடும் கலப்பிடம் செய்து ஆவிக்குரிய விபச்சாரத்தை செய்துள்ளார்கள்).

ஆகையால், மாறுபட்ட பாவ செயலினாலே **தன் இனத்தைச் சேராத** ஒரு பொருள் இரத்த அறைக்குள் அறிமுகப்படுத்தப்பட்டதின் நிமித்தமாக, **ஆவிக்குரிய ரீதியிலே மனித குலத்திற்குள் "மரணம்"** ஆளுகை செய்கின்றது. அந்தப் பொருள் சாத்தானின் அடிச்சுவடுகளை சுமந்து கொண்டு சர்ப்பத்தின் இரத்த அணுவாக இருந்தது. (அவன் பிசாசின் தூண்டுதலுக்குள் இருந்தவன்).

**குறிப்பு** :

ஆதாம், **தேவனுடைய குமாரனாக** இருந்தான். அவன் தன் இனத்தின் சாயலுக்கேதுவான **தேவ குமாரத்திகளையும், குமாரர்களையும்** தேவனுக்காகப் பிறப்பிக்க வேண்டியவனாக இருந்தான்.அவர்களுக்குள் பொய் சொல்லுதல், கொலைச் செய்வது போன்ற சாத்தானின் அடிச்சுவடுகளில் ஒரு பாகம் கூட இருக்க முடியாது அல்லது இருந்திருக்க கூடாது. மனிதன் மாத்திரமே தேவனுடைய சாயலிலும், ரூபத்திலும் சிருஷ்டிக்கப்பட்டவன். அவனுடைய சிருஷ்டிப்பு இரண்டு கட்டங்களை உடையதாக இருந்தது. ஆதியாகமம் - 1:26-28ஐ கவனமாக வாசிக்கவும். முதலாவது ஆதாம், ஆவியாய் இருக்கின்ற தேவ சாயலிலும், பரிசுத்த தூதர்களின் சாயலிலும் சிருஷ்டிக்கப்பட்டான். தேவன் அவனை மண்ணினாலே உருவமைத்த, பிறகு அவன் ஜீவாத்துமாவான பின்பு, அவன் தேவ ரூபத்திலும், பரிசுத்த தூதர்களின் ரூபத்திலுமிருந்தான். (ஆதியாகமம் - 2: 7). ஆதாம் ஆவியாய் சிருஷ்டிக்கப்பட்டவுடன், பூமியை அவன் நிரப்ப வேண்டும் என்கிற கட்டளை புறப்பட்டது. அதினால், தேவன் முதன்மையாக ஒரு ஆவிக்குரிய உருவ அமைப்பான தேவகுமாரனாக நின்று அவனுடன் இடைப்பட்டார் என்பதை இது காண்பிக்கிறது. எனவே. பாவம் வந்ததும், அவன் மீது "ஆவிக்குரிய மரணம்" சுமத்தப்பட்டது.

இரத்தத்தில் ஜீவன் உண்டு என்பது எவ்வளவு உண்மையானது ! எல்லா மனிதர்களும் பாவிகளாய் பிறந்து மாறுபட்ட குணமுடையவர்களாய் இருக்கின்றார்கள். நாம் எல்லோரும் பொய் சொல்லுகிறவர்களாயும், ஏமாற்றுகிறவர்களாயும், பேராசையுடையவர்களாயும், இருக்கின்றோம்.

எல்லாவிதமான தீமையான கிரியைகளை செய்கின்றோம். ஏனென்றால், சர்ப்பத்தின் சுபாவம் நம்முடைய இரத்தத்திற்குள் இருக்கிறது. பாவ சுபாவத்தினாலே பாவ ஜீவ வாழ்க்கை வாழ்கின்றோம். அந்த ஜீவன் இரத்தத்திற்குள் இருக்கின்றது. ஆகவே, தமது பரிசுத்தமான பாவக்கறை இல்லாத இரத்தத்தை நமக்காய் செலுத்தின இயேசு கிறிஸ்துவின் ஆவியினால் நாம் மறுபடியும் பிறக்க வேண்டும்.அவருடைய இரத்தத்தை நமது இருதயங்களில் செலுத்துவதினால், அவருடைய ஜீவன் நமக்குள் வெளிப்படப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகுதான் நம்மால் மாற முடியும்.





**அந்த நேரம்**. "நீங்கள் சாகவே சாவதில்லை, நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப் போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்றது" - (ஆதி 3:4, 5). அவள் அதை தன் சிந்தையிலும், இருதயத்திலும் எடுத்து அதைத் தன் மனதில் வைத்து அத்துடன் ஒன்றிணைந்தபோது ஆவிக்குரிய விபச்சாரம் செய்தாள். தேவன் தன் தெய்வீகக் கட்டளையை (சத்தியம்) **பொய்யுடன் கலப்பிடம் செய்யும்போது** அது **ஆவிக்குரிய விபச்சாரம்**. அதற்குப் பின் சர்ப்பத்துடன் மாம்சீக கிரியைக்குரிய விபச்சாரம் நடைபெற்று, உலகத்திற்கு **மரணம்** அறிமுகப்படுத்தப்பட்டது.

ஏவாள் ஆவிக்குரிய விபச்சாரம் செய்தது, (i) "நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்திலிருந்து" தேவனுடைய வார்த்தையின் தீண்டத்தகாத கனியின் ஒரு பாகத்தை, அவள் வெட்டும்போது (ii) அதை "தொடவும் கூடாது" என்று தேவன் வசனத்தை சேர்த்த பொழுது (iii) தேவனுடைய மாற்றப்படாத கட்டளையாகிய "நீ சாகவே சாவாய்" என்பதை மாற்றக்கூடிய கட்டளையாகி "நீங்கள் சாகவே சாவதில்லை" என்பதை அவன் மாற்றினபோது.

ஏவாள் செய்த அதே காரியத்தை அநேக கிறிஸ்துவர்கள் இன்றும் செய்கின்றார்கள் என்பது தெளிவாக இருக்கின்றது. மதக்குருக்கள், தங்களுடைய சொந்தக் கோட்பாடுகளையும், பாரம்பரிய கோட்பாடுகளையும் தேவனுடைய வார்த்தையோடு கூட்டுகின்றன. மற்றும் தேவ வசனத்தைத் தங்கள் கோட்பாடுகளுக்கும், வியாக்கியானங்களுக்கும் பொருந்துவதற்கு ஏதுவாய் வேத வசனங்களைப் புரட்டுகின்றனர். அவர்களுடைய போதனை, சத்தியத்தோடு ஒத்துவராதவைகளை நாம் கண்டிக்கும்போது, அவர்கள் வசனத்தின் ஒருசில பாகங்களை விட்டு விடுகின்றன அல்லது முற்றிலுமாக கவனம் செலுத்தாமல் போகின்றன.

## 12. நபர்களல்ல பிரமாணங்கள்

சிலர் கடைசிகால செய்தியை விசுவாசிக்கின்றவர்கள் தேவனுடைய வார்த்தையைக் குறித்து ஆவிக்குரிய **குறைபாட்டின்** நிமித்தம், லவோதிக்கேயா சபைக்கால செய்தியாளர் வில்லியம் மரியன் பிரன்ஹாம் போதனையை தவறாகப் புரிந்ததினாலே அந்தத் "தோட்டத்தின் நடுவே" இரண்டு "விருட்சங்கள்" இயேசுகிறிஸ்துவும், சாத்தானும் அல்லது இயேசுகிறிஸ்துவும், சர்ப்பமும், ஏதேன் தோட்டத்தில் அடுத்தடுத்து நின்று கொண்டிருந்தார்கள் என்று வலியுறுத்துகின்றன. மற்ற ஒருசிலர் அந்த

## 10. கலப்பிடம் - பெலனற்று - மரணம்

மிருகங்களுக்கும், மனிதர்களுக்கும் இடையில் பெரிய வித்தியாசம் இருக்கிறதென்று மனதில் வைத்துக் கொள்ளுங்கள். மனிதர்களுக்கு "**ஆவிக்குரிய ஆத்துமா**" உண்டு, ஆனால் மிருகங்களுக்கு அது இல்லை. மிருகங்கள் நேரடியாக மண்ணிலிருந்து சிருஷ்டிக்கப்பட்டது. ஆனால், மனிதனோ முதலாவதாக **ஆவியிலே** சிருஷ்டிக்கப்பட்டு **தேவ சாயலாக** இருக்கின்றான். **தேவனுடைய ரூபமாகிய** (Theophany) '**தியோபனி**' என்று சொல்லக்கூடிய மண்ணாகிய சரீரத்திற்குள்ளாக அவன் வைக்கப்பட்டான் (ஆதி 1-26, 27:2-7). கலப்பிட மிருகங்களுக்கு அவர்களுடைய "**மரணம்**" வெறும் **மாமிசமே** (மாமிச பெலனற்று போவது, கனியற்றுப் போவது, காய்ந்து போவது). ஆனால், மனிதனைப் பொறுத்தமட்டில், அவன் மண்ணான சரீரத்தைவிட அவன் விலையேறப் பெற்ற ஆத்துமாவின் மீது தேவன் அக்கரை உள்ளவராயிருக்கிறார். ஆகவே, மனிதன் மேல் "**மரணம்**" வந்தபோது அது **ஆவிக்குரிய மரணமாய்** இருந்தது (ஆவிக்குரிய பெலன் இழப்பது, கனியற்று போவது, காய்ந்து போவது). அவன் கனி கொடுக்கக்கூடியவனாக மாற்றுவதற்கு, தேவனுடைய பரிசுத்த ஆவி அவனை உயர்ப்பிக்க வேண்டியதாயிருக்கின்றது. (யோவான் 6:63, 1பேதுரு 3:18). தேவனுடைய வார்த்தையாக தண்ணீர் அவனை ஜீவனுக்கு ஏதுவாய் உயிர்ப்பித்து, ஜீவனுக்குரிய ஆவியின் **ஆவிக்குரிய கனிகளைக்** கொண்டு வரும்படி செய்கின்றது. இயேசு கிறிஸ்து இப்படி சொல்லவில்லையா? "இயேசு பிரதியுத்தரமாக ஒருவன் ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" - (யோவான் 3:5).

## 11. வேசித்தனம்

பிசாசினாலே பிடிபட்ட சர்ப்பம், ஏவாளை சோதிக்க வந்தபோது,. "தேவன் சொன்னது உண்டா?......." என்று கேட்டபோது, சந்தேகத்துக்குரிய ஒரு மந்திரத்தை அவள் மீது வைத்தான் (ஆதி 3:1). நம் யாவருக்கும் தெரிந்தபடி **தேவன் சொன்னார்.** தேவனுடைய வார்த்தையை நிலைக்குலைத்து, தவறான இடத்தில் வைத்து, சாத்தான் அதை வஞ்சகமாக மாற்றி, தேவன் சத்தியத்தை ஆரம்பத்தில் வைத்தது போல அல்லாமல், அதற்குத் தவறான வியாக்கியானத்தைக் கொடுத்தான். ஒரு அதிகாரத்துக்குரிய கட்டளையை சந்தேகப்படும் ஒரு கேள்வியாக மாறினது. சர்ப்பத்தின் வாத்தையை விசுவாசித்தபடி ஏவாள் முழுமையாகத் தள்ளபட்ட



**மூல பாவம்**

நமக்கு ஒரு புதிய இருதயமும், புதிய ஜீவனும் உண்டாயிருக்கும் (அவருடைய இரத்தத்தினாலே) கிறிஸ்து இயேசுவின் ஜீவன் நமக்கும் வருவதினாலே, நாம் புதுமையான வாழ்க்கை வாழ்கின்றோம். (இதைத்தான் பவுல் ரோமர் 7 மற்றும் 8ஆம் அதிகாரங்களிலே போதிக்கின்றார்). மெய்யாகவே இரத்தத்தில் தான் ஜீவனுண்டு, எனவே, கிறிஸ்து இயேசுவின் இரத்தம் சிந்தப்பட்டதினாலே நம்முடைய பாவங்களுக்கு கிருபாதார பலியாயிற்று.

**4.** ஆதலால் ஆண்டவர் தாமே உங்களுக்கு ஒரு அடையாளத்தைக் கொடுப்பார், "இதோ ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி, ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள்". (ஏசாயா : 7 : 14).

இயேசு கிறிஸ்துவினுடைய ஜெநநத்தின் விபரமாவது, "அவருடைய தாயாகிய மரியாள் யோசேப்புக்கு நியமிக்கப்பட்டிருக்கையில், அவர்கள் கூடிவருமுன்னே, அவள் பரிசுத்த ஆவியினாலே கர்ப்பவதியானாள் என்று காணப்பட்டது". (மத்தேயு - 1:18).

இயேசு கிறிஸ்து **ஏன்** சாதாரண **மனிதக் கருத்தரிப்பை பைபாஸ் செய்து கன்னியினால் கர்ப்பம் தரிக்க வேண்டும்**?

அநேக கிறிஸ்தவர்களுக்கு இந்த கேள்விக்கு உண்மையாகவே பதில் தெரிவதில்லை. இது இவர்களுக்கு “இயேசு கிறிஸ்து தேவ குமாரன்“ என்பது வெறும் சாட்சியாக மாத்திரமே தெரிகிறது.

நீங்கள் தீவிரமாய் முந்தினவைகளை படித்திருப்பீர்களானால், அதற்குரிய காரணம் உங்களுக்கு வெளிப்படையாக தெரிந்திருக்க வேண்டும்.

மனிதனுடைய **இரத்தம்** வீழ்ச்சியில் சம்பந்தப்பட்டிருந்தது. ஆகவே, தேவனுடைய மீட்பின் திட்டத்தில், அவர் சொந்த பிரமாணம் கேட்கின்ற **இரத்தத்தையே** தெரிந்து கொண்டார். (ஆதி - 9:6, யாத்:21:23-25, எபி - 13:12). மனிதனின் இரத்தம் தேவனுக்கு முன்பாக பாவம் நிறைந்ததாய் (மாசு பட்டதாய்) இருந்தபடியினால் இயேசு கிறிஸ்து சாதாரண மனித கருத்தரிப்பை பைபாஸ் செய்து கன்னியினால் பிறக்க வேண்டியதாயிற்று. இயேசு கிறிஸ்து சாதாரண மனித கருத்தரிப்பில் பிறந்திருந்தால், நிச்சயமாகவே, அவர் நம் “துர்க்குணத்தில் உருவாகியிருந்திருப்பார்” (சங் : 51:5) அப்பொழுது மனித குலத்தின் மீட்பு தோல்வி அடையாதிருந்திருக்க, தேவனுக்கு சுத்தமான கபடற்ற இரத்தமே **தேவைப்படுகிறது**.

பழைய ஏற்பாட்டில், ஆத்தும பரிகாரத்திற்கு, ஒரு சில கபடற்ற

மிருகங்களின் இரத்தம் செலுத்தப்படுவது தேவனுக்குத் தேவைப்பட்டது. ஆத்துமாவின் பரிகாரத்திற்கு இயேசு கிறிஸ்துவின் இரத்தம் ஏற்றுக் கொள்ளப்படத்தக்கதாய், உறுதியாக கபடற்றதாய் இருந்திருக்கிறது.(லேவி - 17:10-14). (வாசிக்கவும் : மத்: 27: 4, எபே - 2:13, ரோமர் - 3:24,25, 1 யோ - 1:7).

**தூஷணமான போதனை** : சில ஸ்தாபன போதகர்கள் ஆபத்தான நிலைமையில் நின்று கொண்டு இயேசு கிறிஸ்து மரியாளின் முட்டையிலும், தேவனுடைய வித்துவினாலும் பிறந்தார் என்று ஜனங்களை நம்பும்படி போதிக்கின்றார்கள்.

இயேசு தேவ மனிதனாக இருந்ததினாலும் ஸ்திரீயின் வித்தாக தீர்க்கதரிசனங்களினால் அறியப்பட்டிருந்து, பூமிக்குரிய வம்ச வரலாற்றில் இருந்ததினாலும், தேவ மனிதனாய் இருந்ததினாலும் தேவனுடைய விந்தணு மற்றும் மரியாளின் முட்டையின் மூலமாய் அவர் பிறக்க வேண்டுமென்று அவர்கள் விசுவாசிக்கிறார்கள். இப்பொழுது இது உண்மையாய் இருக்குமானால், பின்பு இயேசு கிறிஸ்து பாவம் நிறைந்த மாம்ச சாயலில் இருந்திருப்பார் (ரோமர் - 8:3, II கொ – 5:21). ஆகவே, ஏதேன் தோட்டத்தின் வீழ்ச்சியினால், எல்லா மனிதனும் பாவியாய் இருப்பது போல, அவரும் பாவியாய் பிறந்திருப்பார். மரியாளின் முட்டை இயேசுவின் சரீரத்தின் சிருஷ்டிப்பில் பங்கு பெற்றிருந்தால், இயேசுவுக்கு பாவம் நிறைந்த சுபாவம் இருந்திருக்கும்.

எனவே நிச்சயமாக அது அப்படியல்ல! மனிதாய் இருந்த இயேசுவின் சரீரம் தேவனுடைய சிருஷ்டிப்பு மாத்திரமே. தேவன் ஆண் விந்தின் அணு, முட்டை அணு ஆகிய **இவ்விரண்டையும் சிருஷ்டித்து**, மரியாள் மேல் நிழலிட்டு, கருவுற்ற **விதையை** அவள் கர்ப்பத்திலே நட்டினார். கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்ட மரியாள் பூமிக்கு இரட்சகரை கொண்டு வரும் ஒரு **தாயாக** நியமிக்கப்பட்டாள். ஒரு தாயாக, பரிசுத்தரை தாலாட்டவும், பால் கொடுக்கவும், வளர்க்க வேண்டியதாயிருந்தது. இறையியல் பதத்தில் “ஸ்திரீயின் வித்து” என்ற சொல் (ஆதி: 3: 15, ஏசா : 7:14). வேத வாக்கியங்களால் யூகிக்கப்பட்டுள்ளது. இது மனித **கருத்தரிப்பு** உண்டாவதை அல்ல தேவனுடைய சிருஷ்டிப்பைக் காண்பிக்கிறது (லூக் :1: 31-35).

இயேசுவின் சரீர சிருஷடிப்பில் மரியாளின் முட்டையும் சம்பந்தபடாமலிருந்தது. அவளுடைய பாவம் நிறைந்த இரத்தமும் அவருடைய இரத்தத்தை கறைப்படுத்தவும் இல்லை. (அவர் அவளுடைய கர்ப்பத்திலே குழந்தையாய் இருந்த பொழுது தாயின் வயிற்றிலிருக்கும் குழந்தைக்கு, அதின் சொந்த இரத்த சுற்றியோட்டு தொகுதி (Blood Circulatory System) உண்டு. தாயின் இரத்தம் சூழல் வித்தகம் (Placenta)





மனுஷன்" என்று சொல்லுகிறார். (2தெச 2:3) இயேசு, யூதாஸ்காரியோத்தைப் "பிசாசு" என்று சொல்கிறார் (யோவான் 6:70).

மற்றும் அவர்கள் நாட்களிலே வாழ்ந்த மதக் குருக்களை "உங்கள் பிதாவாகிய பிசாசினால் உண்டானவர்கள்" என்று கர்த்தர் அவர்களுக்கு சொன்னார் (யோவான் 8:44). ஆமாம், தேவனுடைய வார்த்தை மிகவும் தெளிவாக உள்ளது. அவர்கள் ஆவிக்குரிய விதத்தில் பிசாசின் பிள்ளைகள்! அவர்களுடைய பிதாவின் ஆவிக்குரிய மரபணுக்களை சுதந்தரித்து அவனுடைய பொல்லாத குணாதிசயங்களைப் **பெற்றுக் கொண்டார்கள்**. (அதாவது சாத்தான்).

## 9. விட்டுப்போன இணைப்பு

இந்த விட்டுப்போன இணைப்பு 'சார்லஸ் டாவின்சியின்' பரிணாமத்திற்குரிய கோட்பாட்டில் பொறுத்தப்படாது. மிருகங்கள் கீழான ஜீவ உருவத்தில் இருந்து தோன்றவில்லை அல்லது மனிதன் குரங்கிலிருந்து தோன்றவில்லை. வேதம் கூறுகிறது சிருஷ்டிகளின் வெவ்வேறு இனங்களும் தனித்தனியாக சிருஷ்டிக்கப்பட்டு மற்றவர்களோடு வித்யாசப் பட்டிருந்தது. சர்ப்பத்தைத் தவிர மற்ற எல்லா மிருகங்கள் அது ஆதியிலே சிருஷ்டிக்கப்பட்ட அதே உருவத்தில்தான் இருக்கின்றது. பறவைகளெல்லாம் தங்கள் குஞ்சுகளைக் கூட்டில்தான் வளர்க்கின்றது. தேனீக்கள் எப்பொழுதும் போல தேன் கூடுகளை கட்டுகிறது. நீர் நாய்கள் அணையைக் கட்டுகிறது. ஆனால், மனிதன் மாத்திரமே தன்னுடைய இனத்தின் அறிவைக் பெருகச் செய்ய முடிகிறது.

ஆதியாகமப் புஸ்தகத்தின்படி கீழான ஜீவராசிமுதல் மேலான் ஜீவராசிவரை தேவன் சிருஷ்டித்தார் என்பதைக் காண்கின்றோம். ஒரு அடையாளத்திற்கு குரங்கைப் படைப்பதற்கு முன்பதாக தவளையைப் படைத்தார். சர்ப்பத்தைப் படைப்பதற்கு முன்பாக மனிதக் குரங்கைப் படைத்தார். அதற்கு பிறகு கடைசியாக எல்லா சிருஷ்டிகளையும் ஆண்டு கொள்ளும்படி மனிதனைப் படைத்தார். அதற்குப் பின் சர்ப்பம் அது சபிக்கப்படுவதற்கு முன்பதாக அது சிருஷ்டிக்கப்பட்டு மூல சாயலில் இல்லாதபடியினால் அங்கே ஒரு விட்டுப்போன இணைப்பு "Missing Link" இருக்கின்றது.

தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருந்தான்". நோவா எப்படிப்பட்ட மனிதனாக இருந்தான் என்று இந்த வசனம் சொல்லுகிறது. ஆகையால், நோவா தேவனுடைய கண்களில் "கிருபை பெற்றவன்" என்பதில் ஆச்சரியப்படத்தக்கதல்ல. ஆதி 6-8-ல் [(Strong's Concordance) பார்க்கும் போது 2580 "**கிருபை**" என்கிற வார்த்தைக்கு எபிரேய மொழியில் "**சென்**" என்று சொல்லப்படுகின்றது. அதனுடைய அர்த்தம் தயவு, இரக்கம் விலையேறப்பெற்ற, இன்பமானது மற்றும் அதிலே 2603-ல் **சானான்** தலைமை உள்ளவனுக்கு இரங்குவது, தயவு செய்வது, தயவு கொடுப்பது, மன்றாடுவது] அவன் நீதிமானான மனிதன் மாத்திரமல்ல, அவன் பரிபூரணமானவனும், தேவனோடு நடந்தவனுமாயிருந்தான். எபிரேய மொழியில் "**பரிபூரணம்**" என்கிற வார்த்தைக்கு மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தை "**தம்மிம்**". அதின் அர்த்தம் என்னவென்றால் "**கறையில்லாமல்**", "**சுத்த இனம்**". இதனால் வேதவசனங்கள் தெளிவாக **நோவா "சுத்தமான சேத்தின் வம்சம்**" என்றும், அவன் கலப்பிடமில்லை என்பதைக் காட்டுகின்றது.

எப்படியோ நோவா ஒரு கலப்பிடம் அல்லது காயீனின் வம்சத்தில் வந்த ஸ்திரீயைத் திருமணம் செய்ததால், அவனுக்கு **3 குமாரர்கள்** மாத்திரமே பிறந்தார்கள். அவனுக்கு முன்பதாக இருந்த சேத்தின் முதற்பேரானவர்கள் எல்லாம் சேத்தின் வம்சத்திலுள்ள ஸ்திரீகளைத் திருமணம் செய்ததால், **குமாரர்களும், குமாரத்திகளும்** பிறந்தனர். இதற்கு 2 காரணங்கள் உள்ளன. **ஒன்று கலப்பிடத் திருமணம் எப்பொழுதும் மரபணுக்கள் கலைந்து போவது. அதின் விளைவாக இருக்கும்.** எனவே நோவாவுக்கு குமாரர்கள் இருந்தும், குமாரத்திகள் இல்லாமல் போனது. **ஆகவே, ஜலப்பிரவாகத்தின் நியாயத்தீர்ப்பின் மூலம் ஒரு புதிய அமைப்பைக் கொண்டுவருவது தேவனுடைய திட்டமாயிருந்தது. இரண்டாவது காரியம்** மனிதக் குலம் முழுவதையும் இதற்கு மேலும் நோவாவின் மூன்று குமாரர்கள் மூலமாய் வரக்கூடியதாய் இருக்க வேண்டும். (ஆதி 9:19)

**<u>8. சர்ப்பத்துடைய இயற்கை வித்து சாத்தானுடைய ஆவிக்குரிய வித்து</u>**

சாத்தானால் சிருஷ்டிக்கவோ அல்லது உற்பத்தி செய்யவோ முடியாது. ஆயினும் தேவன் சிருஷ்டித்ததாய் ஆள்மாராட்டமும், புரட்டவும் அவனால் முடியும். காயீன் ஒரு சர்ப்ப மனிதனாக இருந்தான் **மாமிசத்தில்** சர்ப்பத்தின் மகனாகவும் ஆனால், ஆவிக்குரிய விதத்தில் சாத்தானுடைய மகனாகவும் இருந்தான். அடையாளத்திற்கு பவுல் "கேட்டின் மகனாகிய பாவ





வழியாக குழந்தையின் இரத்தத்திற்கு நுழைவதில்லை).

ஆகவே, இந்த முழு மரபியலும் தேவனுக்கு மாத்திரமே சேர்ந்தது, என்பதைக் காண்கிறோம். தேவன் ஒரு தீர்மானத்திற்காக இயேசுவை ஒரு **கன்னியின் மூலம் பிறக்க செய்தார்.** அதாவது, மனிதனை மீட்டுக் கொள்ளும் வரிசையில் அவருடைய இரத்தம் சுத்தமும் பாவமற்றதுமாய் இருக்கிறது. எசே:36:26-27-ல் தீர்க்கதரிசனமாய் உரைத்தபடி மனந்திரும்பின ஆத்துமாக்களுக்கு ஒரு 'புது இருதயத்தையும்'' ஒரு 'புது ஆவியையும்' கொண்டு வருவதற்கு இது முற்றிலுமாய் ஒரு புதிய சிருஷ்டிப்பாயிருக்கிறது. தேவனுடைய உயர்தரமான திட்டத்தில் **இயேசு கிறிஸ்துவே தேவனுடைய முற்றிலுமான கருத்தரிப்பு**.

தேவன் தமது தீர்க்கதரிசிகள் மூலமாய் பேசின வாக்குத்தத்தங்கள் தீர்க்கதரிசனங்கள் நிமித்தம் தேவன் இரட்சகராய் சரியாக அடையாளம் கண்டு கொள்ளும்படி, வம்ச வரலாற்றின் சான்றிதழ்களை அளித்தார். அதுவே இயேசு கிறிஸ்துவின் வம்சவரலாற்றின் நோக்கம்.

**5.** ஏனெனில், மனிதனின் வீழ்ச்சிக்கு இரத்தம் சம்பந்தப்பட்டிருக்கு-மானால், **பால் உறவு** அதின் வழிவாசலாக இருக்க வேண்டும். பால் உறவு பாவத்தில் சம்பந்தப்படுவதில்லை **என்றால்,** ஆதாமும் ஏவாளும் தங்கள் **நிர்வாணத்தை மறைக்க ஏன்** அத்தி இலைகளை ஒன்று சேர்த்து ஆடைகளை செய்தார்கள்? (ஆதி 3:7) பின்பு, **ஏன் ஸ்திரீயின் பாலங்கம்** தேவனால் **சபிக்கப்பட்டு** அவள் கர்ப்ப-**வேதனையை பெருகும்படி** செய்தார்? (ஆதி 3:16).

ஒரு இயற்கை மரத்தின் கனியை புசிப்பதினால் பாவம் வந்தது என உங்களுக்குள் விசுவாசிக்-கிறவர்கள் (அது ஆப்பிள், பேரிக்காய் அல்லது எதுவாயிருந்தாலும்) எப்பொழுதாவது பாவத்தின் கிரியை வாய் சம்பந்தப்பட்டதாய் இருந்திருக்கு-மானால், ஏன் வாயை சபிக்காமல், பால் அங்கம் மறைக்கப்பட்டும், சபிக்கப்-பட்டதுமாயிருந்தது என்று **சிந்தித்தீர்களா**? ஆதாமும் ஏவாளும் தங்கள் வாய்களுக்கு **பதிலாக,**

**ஒரு சில கேலிச்சித்திரம் வரைகின்றவர்கள் மூல பாவத்தில் பாலுறவு சம்பந்தப்பட்டிருந்தது, என்று அறிந்திருந்தார்கள் போலத் தெரிகிறது.**



**"முதலாவது நாம் திருமணம் செய்ய வேண்டுமென்று நினைக்கிறேன்"**


தங்களின் **பால் அங்கங்களை** மூடியதே ஒரு நூதன செயலாக இருக்கவில்லையா? நன்மை தீமையின் அறிவைத் தரும் விருட்சத்திலிருந்து புசித்ததினாலே தங்கள் சரீரத்தின் பால்அங்கமே **குற்றம் உள்ள நபராக** இருப்பது அதைவிட தெளிவானது வேறு எதுவும் இருக்க முடியாது. தங்களுடைய குற்றமான பாகங்களை **மூடுவதற்கு** முயற்சி செய்தார்கள். "நீ நிர்வாணி என்று உனக்கு அறிவித்தவன் யார்?" **புசிக்க வேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தாயோ என்றார்**? (ஆதி 3:11) ஸ்தாபன சபைகள் உங்களை விசுவாசிக்க வைத்தபடியே, இது மெய்யாகவே ஒரு இயற்கை கனியாக இருந்திருக்குமானால், தேவன் **ஏன்** அந்த பெண் பால் அங்கத்தை சபிக்க வேண்டியதாயிற்று?

மனிதனின் பால் அங்கமானது சபிக்கப்படவில்லை, ஏனென்றால் ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை. ஏவாளோ மீறுதலுக்கு உட்பட்டவளாயிருந்தாள் (1தீமோ 2:14). ஆகவே, ஆதாமின் நிமித்தம் பூமியானது சபிக்கப்பட்டதாய் இருந்தது. அந்நாள் முதல் மனிதன் வேதனையில் பூமியை பண்படுத்தவும் முள்ளுக்கும் குருக்குக்கும் விரோதமாய் தன் உணவுக்காகப் போராடுகின்றான் (ஆதி 3:17-19).

6. ஆதி 3:15-ல் தேவன் சர்ப்பத்தை சபித்து பின்பு அவனிடம் சொன்னது.

"உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும், **அவள் வித்துக்கும் பகை** உண்டாக்குவேன்...... அவர் குதிகாலை நசுக்குவாய் என்றார்".

அதிகபட்ச கிறிஸ்துவர்கள் ஆதி 3:15ஐ ஆவிக்குரிய விதத்தில் "அவள் வித்து" என்பதை தீர்க்கதரிசனமாக "ஸ்திரீயின் வித்து" என்று காண்கிறார்கள். கன்னி மரியாளிடம் பிறந்த இயேசு கிறிஸ்து, தமக்கு தற்காலிகமாக உபத்திரவத்தை மாத்திரமே கொண்டு வரக்கூடிய சாத்தானை நொறுக்கி தோற்கடிப்பார். அவர்கள் இரண்டு **தீர்க்கதரிசனமாகிய** முதல் பாகத்தைப் பார்க்க தவறிப்போவதை (அல்லது) கண்டுகொள்ளாமல் போவதை தெரிந்து கொள்கிறார்கள். தேவன் சர்ப்பத்துக்கும் ஏவாளுக்கும், அவனுடைய வித்துக்கும், அவளுடைய வித்துக்கும் **பகையை** உருவாக்கி வைத்தார். **இரண்டு வித்துக்கள், இயற்கையும் மாம்சத்திற்குரியதுமாம்** (அநேக







விழுந்தார்கள். சேத்தின் மரபணு வகையில் சுத்தமான வம்சமாயிருந்தாலும், தேவனுடையப் பார்வையிலே, அவர்கள் இதற்கு மேலே நீதிமான்களல்ல. அவர்கள் விழுந்து போன தேவனுடைய குமாரத்திகளையும், குமாரர்களையும் காயீனின் வழியில் சர்ப்ப ஜாதியின் வழியில் போனவர்கள். தங்கள் **முற்பிதாவாகிய ஆதாமின் விசுவாசத்தை** விட்டவர்கள். ஆகவே, பேழைக்குள் தேவன் அவர்களை கொண்டு போக கடமைப்படவில்லை.

ஆனால் இந்த மாதிரி நிலையிலும் நோவா ஏறக்குறை 500 ஆண்டுகள் தேவனோடு நடந்து ஜீவிக்கத் தொடர்ந்தான். அவனுடைய குடும்ப பெயர் தொடர்வதற்கு, அவன் ஒரு குடும்பத்தை ஆரம்பிக்க வேண்டியதாயிருந்தது. இப்பொழுது எந்தக் கோத்திரத்திலும் தேவனுக்குப் பயப்படுகிற ஜனம் இருக்க வேண்டும். சந்தேகமில்லாமல், காயீனுக்குரியவர்களிலும் கலப்பிடமான வித்துக்களுக்கு மத்தியிலும் ஒரு சிலர் இருந்திருக்க வேண்டும். சேத்தின் வழியிலே நடப்பதற்கு சேத்துக்குரிய எந்த ஒரு ஸ்திரீக்கும் விருப்பமில்லையென்றால், நோவாவுடைய தேவனை ஆராதிப்பதற்கும், அவனுடைய முற்பிதாக்கள் செய்த சத்தியத்தின் வழியை பின்பற்றுவதற்கும் மற்ற ஜனங்களை அவன் தெரிந்து கொள்ள வேண்டியதாயிற்று. எப்படியோ அது தேவனுடைய அனுமதியின் திட்டமாயிருந்தது.

நோவா, சேத்தின் வம்சத்திலிருந்து ஒரு மனைவியை மணந்திருந்தாலும், தன் ஜீவனை அவன் மாசுப்படுத்தவில்லை. ஏனோக்கு நடந்தது போலவே தேவனோடு நடந்தான். பொதுவாயிருந்த எல்லா அக்கிரமங்களிலிருந்தும், பொல்லாப்புகளிலிருந்தும் தன்னை காத்து விலக்கிக் கொண்டான். இந்த ஒழுக்கக் கேடான இருளுக்கு மத்தியில் நோவாவுடைய வாழ்க்கை ஒளிமயமாகவும், நீதியினால் நிறைந்ததாயும் இருந்தது (ஆதி 6:9, 7:1).

**கவனிக்க வேண்டியவை**: வேதத்தில் தெளிவாக எழுதவில்லையென்றாலும், காயீனின் வம்சத்தில் வந்த லாமேக்கின் மகளாகிய நாமாவை, நோவாவே மணந்திருக்க வேண்டும் (ஆதி 4:22). மனிதனின் சரீரத்தின் வம்சமாக முக்கியப் பங்காக ஒரு ஸ்திரீ பெற்றிருந்தால் மாத்திரமே அவளுடைய பெயர் சொல்லப்படுகின்றது (மத் 1:5&16).

(ஆதி 6:9), "நீதிமானும் உத்தமனுமாயிருந்தான், நோவா

இதற்குக் காரணம் என்னவென்று நாம் உணர்கிறோம் என்றால், நோவா பிறப்பதற்கு முன்னதாகவே, காயீனுக்குரியவர்களின் கலாச்சாரம், சேத்துக்குரியவர்களை பலமாக பாதித்து நோவாவைத் தவிர மற்றவர்கள் எல்லாரும் காயீனுக்குரியவர்களின் வாழ்க்கை அமைப்பின் வலைக்குள்ளாக இழுக்கப்பட்டார்கள். ஆனால் நோவாவோ நீதிமானாக வளர்ந்து தேவனோடு நடந்து, சேத்துக்குரிய அவன் ஜனங்களுக்குள் தேவனுடைய கண்களிலே கிருபை பெற்று ஒரே ஒருவனாக இருந்தான்.

நோவா தன் மனைவியைக் கண்டடைய வேண்டிய நாள் வரும்போது சேத்தின் வழியிலே நீதியோடு நடக்கக் கூடியவர்கள் குறைந்து கொண்டு வந்தபடியினாலே அவர்களுக்கு மத்தியில் சேத்துக்கு ஒரு ஸ்திரீயைக் கூட அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை. அந்துப் பூச்சிக்கு மெழுகின் வெளிச்சம் அல்லது சில கிறிஸ்துவர்களுக்கு ஹாலிவுட்டில் ஈர்ப்பு எப்படி கவர்ச்சிகரமாயிருக்கின்றதோ அதுபோல, அதைக் காட்டிலும் காயினுக்குரியவர்களின் வழி அதிகமாயிருந்தது. வேதம் சொல்லுகின்றது, அப்பொழுதிலிருந்தே, அந்த சந்ததி அவ்வளவு மாசுப்பட்டதாயும், அக்கிரமம் நிறைந்ததாயும் இருந்தார்கள். அதனிமித்தம் தேவன் அவர்களை அழித்துப் போட்டார். ஏனோக்கின் வம்சமுதல் இந்தப் பெரிதானப் பொல்லாப்பின் காலக்கட்டம் ஆரம்பித்தது. அதிலே, காயீனின் வம்சம் யெகோவா என்கிற நாமத்தைத் தங்களுடைய ஆராதனைக்குள் கொண்டு வந்து தூஷித்தார்கள் (ஆதி 4:26). சேத்துக்குரியவர்களும் காயீனுக்குரியவர்களும் மெதுவாகக் கலப்பிடத் திருமணம் செய்ய ஆரம்பித்து, **கலப்பிடத்தைப்** பெற்றார்கள்.

அப்படிப்பட்ட கலப்பிடத் திருமணத்தினால், பிறக்கின்ற பிறப்புகளெல்லாம், பொதுவாகவே **அக்கிரமமும், பொல்லாப்பும்** நிறைந்தவர்களாய் இருந்தார்கள். ஆதாமின் வம்சத்தை அழிப்பதற்கு இது சாத்தானின் தந்திரமான செயலாகும். காலம் நீடிக்கும் போது, அந்த சந்ததியின் அக்கிரமமும், மாசின் காரணத்தினால், அவர்களுக்கு உண்டாகும் நியாயத்தீர்ப்பைக் குறித்து தீர்க்கதரிசனம் உரைக்கும்படி தேவன் ஏனோக்கை எழுப்பினார். (யூதா 14, 16). கொஞ்சம் கொஞ்சமாக பொல்லாதவர்கள் பெருகினபடியினாலே நோவா வம்சத்தோடு தேவன் அதற்கு ஒரு முடிவைக் கொண்டு வந்தார் (ஆதி 6:5,11).

நோவாவின் சொந்த சகோதரி, சகோதரர்கள் மற்ற குடும்பத்தினர் எல்லாம் உறவினர்களாயிருந்து அனைவரும், காயீனின் ஜனங்களின் விக்கிரக ஆராதனை, இச்சைக்குரிய வழிகள் மற்றும் பொல்லாத வழிகளினால் இழுக்கப்பட்டு அந்த பொல்லாத அக்கிரமத்தினாலே





கிறிஸ்துவர்கள் "உன் வித்து" என்பதிலே இடறுகிறார்கள்). ("**உன் வித்து**" என்பது "**சர்ப்பத்தினுடைய வித்து**" சர்ப்பத்துக்கும் ஒரு வித்து இருந்தது). ஏவாளுக்கு ஒரு மாம்ச வித்து இருந்தது. "அவள் வித்து" - **ஆபேல்**, அதைப் போன்று சர்ப்பத்துக்கு அவனுடைய மாம்ச வித்து இருந்தது. "அவன் வித்து" - **காயீன்**. தேவன் மேல் வைக்கும் விசுவாசத்திலே, அவர்களுக்கிடையில் பகை இருந்தது (பின்னிணைப்பு : 1 பார்க்கவும்).

7. ஒரு நபரின் **வம்சவரலாறு** ஆண் (தகப்பன்) வரிசையில் அடையாளம் கண்டு கொள்ளப்பட்டிருக்கிறது, ஏனெனில் ஆண் அணு **குருதிக் கோட்டில்** வருகின்றது. ஆனால், வேதம், **ஏன்** ஆதாமை **எல்லா ஜீவன்களுக்கும் தகப்பன்** என்று சொல்லாமல், அதற்கு பதிலாக ஏவாளை **ஜீவனுள்ளோர்க்கெல்லாம், தாய்** என்று கூறியுள்ளது? (ஆதி 3:20). ஆனாலும், **காயீன்** ஆதாமுக்கு குழந்தையாய் இருக்காமல், ஏவாளுக்கும், சர்ப்பத்திற்கும் உடந்தையாய் இருந்ததை இது காண்பிக்கவில்லையா? ஆதாம், ஏன் ஏவாளின் முதல் மகனை காயீன் எனப் பெயரிட்டான் என்று சற்று கவனியுங்கள். "**காயீன்**" என்றால் "**சேர்க்கப்பட்டவன்**" என்று அர்த்தம். ஏனென்றால் அவன் ஆதாமினால் ஜெநிப்பிக்கப்பட்ட மகன் அல்ல, அவர் வெறும் சேர்க்கப்பட்ட மகன் மற்றும் ஆதி 4:1 சொல்லுகிறபடி, ஆதாமும், ஏவாளும் ஒருமுறை மாத்திரமே ஒன்று சேர்ந்தார்கள், ஆனால், இரண்டு குழந்தைகள் பிறந்தது. இருந்தாலும் இது இருவரை இரட்டையர்கள் என்று சான்றிதழ்கள் (பதிப்புகள்) வைக்கப்படவில்லை. எப்பொழுதெல்லாம் இரட்டையர்கள் ஒரே தகப்பனால் பிறந்திருக்கிறார்களோ, அது முக்கியப் பங்காக வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது (படிக்கவும் ஆதி 25:24, 38:27).

**கவனிக்கவும்:**

பெரியதோ (அல்லது) சிறியதோ, நன்மையோ (அல்லது) தீமையோ, எல்லா ஜீவனும் தேவனால் வருகிறது. (ஏசா 45:7) அப்படியாக, கர்த்தரால் ஒரு மனிதனைப் பெற்றேன் என்று ஏவாளால் சொல்ல முடிந்தது. (ஆதி 4:1).


சந்தேகமின்றி, காயீன் ஆதாமின் வித்து இல்லை. அவன் உறுதியாகவே, **சர்ப்பத்தினுடைய வித்தாக** இருந்தான்.

8. தேவனுடைய **குணாதிசயத்தின்** அடிச்சுவடுகள் நீதியாய் இருக்கிறபடியினால், **தேவனுடைய குமாரனான** ஆதாமின் குமாரனாய் காயீன் இருந்திருப்பானேயானால் ஆபேலை **ஏன் கொன்று போட்டான்**? (ஆதி 4:8) தேவ நீதியானது காயீனுக்குள் அநீதியாய் மாறி ஜீவனைக் **கொலை செய்வதற்கும்,** அழிப்பதற்கும் மறைந்திருக்கக் கூடுமோ? (லூக் 9:56, ஆதி 18:23-28, 1யோவான் 3:15-16 வாசிக்கவும்) நினைவிற்கு ஒவ்வொரு வித்தும் தேவனுடைய பிரமாணத்தின்படி தன்தன் சொந்த இனத்தையே பிறப்பிக்கக்கடவது. (ஆதி 1:11, 12, 21, 24, 25, 26).

## ப்ரபட்டிக் ரெவலேஷன்

காயீனின் கொலைகார கிரியை தேவனிடத்திலிருந்து **வரவில்லையென்றால்,** பின்பு காயீன் அந்த அடிச்சுவடுகளை **யாரிடத்திலிருந்து** சுதந்தரித்துக் கொண்டான்? (1யோவான் 3:12) "பொல்லாங்கனால் உண்டாயிருந்து தன் சகோதரனை கொலை செய்த காயீன்".

கொலையின் மூலக்காரணனாய் இருந்த அந்தப் **பொல்லாங்கன் யார்**? "ஆதி முதலாய் பிசாசு மனித கொலை பாதகனாய் இருந்தான்" என்று இயேசு சொன்னார். (யோவான் 8:44). அவனே, கொலை பாதகத்தின் ஆவியையும் மற்றத் தீமையான அடிச்சுவடுகளையும், சர்ப்பத்தின் மூலமாய் காயீனுக்குள் நுழைத்தான்.





**காயீன், சர்ப்பத்தின் வித்து,**
**பொல்லாங்கனால் உண்டானவன்**
**(1யோவான் 312)**

**ஆதாம் பொல்லாங்கனால்**
**உண்டானவன் அல்ல.**
**ஆதாம் தேவனுடைய**
**குமாரனாயிருந்தான்.**

**சர்ப்பத்தின் வித்தின் தீமையான**
**குணாதிசயங்களாகிய**
**முகத்தோற்றம் மாறுதல்,**
**பொய் உரைப்பது, கோபம், கொலை,**
**பொறாமை, விபச்சாரம், வெறுப்பு, இச்சை**
**போன்றவைகள் அவனுடைய**
**சந்ததிக்கு கடந்து வந்தன.**



## மூல பாவம்



## 7. நோவா சுத்தமான சேத்தின் வம்சத்தின் முதல் பிறப்பு

வேத வாக்கியஙகளிலே எல்லா மரபணுக்களின் சான்றுதல்களும், நோர்த்தியான முறையில் சீராக அமைத்து வைக்கப்பட்டுள்ளது. தேவன் தமது புஸ்தகத்தை குழம்பிக் கிடக்கும் நிலையில் எழுதவில்லை. ஆதி 5-ஐ கவனியுங்கள். அது ஆதாமின் வம்சங்களின் புஸ்தகம் என்று அழைக்கப்படுகின்றது. 3வது வசனத்திலேயே ஆதாம், "**தமது சொந்த சாயலிலும் ரூபத்திலும் ஒரு மகனைப் பெற்றான். அவனுக்கு சேத் என்று பேரிட்டான்**" என்று சொல்லப்பட்டுள்ளது. ஆகவே முதல் பிறப்பு என்கிற சான்றுதலிலே அவன் ஆதாமின் சாயிலிலும் ரூபத்திலும் இருந்து சேத்தின் **நேரடி வம்சமாய்** இருக்க வேண்டும். (முதல் பிறப்பு மாத்திரமே பதிவு செய்யப்பட்டுள்ளது). இந்த சான்றிதழ் நோவாவின் பெயரிலே முடிவடைகின்றபடியினால் சேத்தின் சுத்தமான முதல் பிறப்பில் நோவாவே கடைசியாக இருந்திருக்க முடியும். அவனுடைய முதல் பிறப்பின் மகனும் மற்ற இரண்டு மகன்களும், அவன் கலப்பிடத் திருமணத்தில் உண்டானது, கலப்பினத்தைச் சேர்ந்தவர்கள் யாப்பேத் நோவாவின் முதல் பிறப்பாக இருந்திருந்தாலும், அவன் ஆதாமின் ரூபத்தையும், சாயலையும் பெறவில்லை. ஆகவே, அவனுடைய பெயர் ஆதாமின் வம்சவரலாற்றில் சேர்க்கப்படவில்லை. பாருங்கள், அவனுடைய பெயர் மற்ற இளைய சகோதரர்களுக்குப் பிறகு சொல்லப்படுகிறது. சேம், காம், யாப்பேத் (ஆதி 5:32). ஆகவே, நோவாவின் மூன்று குமாரர்களின் வம்சவரலாறு வித்யாசமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. பரிசுத்த வேதாகமம் அதை எப்படி பதிவு செய்துள்ளது என்பதை கவனியுங்கள் (ஆதி 9:19).

"இம்மூவரும் நோவாவின் குமாரர், இவர்களாலே பூமியெங்கும் ஜனங்கள் பரம்பினார்கள்".

(ஆதி 10:1) நோவாவின் குமரராகிய சேம், காம், யாப்பேத் என்பவர்களின் வம்ச வரலாறு, ஜலப்பிரளயத்துக்குப் பின்பு அவர்களுக்குக் குமாரர் பிறந்தார்கள.

நோவாவின் வம்ச வரலாற்றின் எந்த ஒரு சான்றிதழும் இங்கே இல்லை. ஏன்? ஏனெனில், சேத்தின் வழிக் கூறிய சாயலையும் ரூபத்தையும், அவனுடைய எந்தக் குமாரர்களும் பெறவில்லை. ஒரு வேளை, யாப்பேத்துக்கு இருந்திருக்குமானால், அவனுடைய பெயர் ஆதாமின் வம்ச வழியில் சேர்க்கப்பட்டிருக்கும்.

நோவாவுக்கு **500 வயதாய் இருந்த பொழுது,** அவனுடைய **முதல் குமாரன்** பிறந்தான் என்று கவனிக்க வேண்டும். அவனுக்கு முன்பதாக இருந்த ஆதாம் வம்சத்தில் இருந்த முதற்பிறப்புகள் எல்லாம் **190 வயதுக்கு** முன்பதாகவே பெற்றார்கள். **ஏன்** வயதிலே இப்படி ஒரு பெரிய பிளவு?



**மூல பாவம்**

**9.** காயீனின் **பொய்யைக்** குறித்து **என்ன**? "எனக்கு தெரியாது" (ஆதி 4:9). இது **எங்கிருந்து வந்தது**? யோவான் 8:44-ல் அதற்கு பதில் உள்ளது. பிசாசு பொய்களின் பிதாவாய் இருக்கின்றான்.

மற்றும் காயீனுக்கு தேவனை எதிர்த்து நிற்கத்தக்கதான **வன்முறையான கோபம்** அவனுக்கு எங்கிருந்து கிடைத்தது? "நான் என்ன, என் சகோதரனுக்கு காவலாளியோ?!"?.

இந்த இரண்டு அடிச்சுவடுகளையும் காயீன் காண்பித்தது மட்டுமின்றி, தன்னுடைய ஜீவனை மேலும் நிரூபிக்கும், **மனந்திரும்பாத** ஒரு சுபாவத்தையும் அவன் வெளிப்படுத்தினான். கொலை செய்த கிரியைக்கு முன்பாகவே, அதிகபட்சமாக கீழ்ப்படியாதவனாக இருந்திருக்க வேண்டும்.

10. **சேஷ்டபுத்திரபாகம் முதல் பேரானதற்கு** மாத்திரமே சொந்தமானது. (ஆதி 43:33, 48:8-19) முதல் பிறப்பாயிருந்த காயீன் ஆதி 4:1 மற்றும் லூக்கா 3:23-28ல் இயேசு கிறிஸ்துவின் வம்சவரலாறு **ஏன்** அறிவிக்கப்படவில்லை? (கவனிக்கவும் : ஈசாக்கின் முதல் பிறப்பாய் ஏசா தன் புத்திர சுவிகாரத்தை யாக்கோபுக்கு விற்றுப் போட்டபடியினால் இயேசு கிறிஸ்துவின் வம்சவரலாற்றில் அவன் குறிப்பிடப்படவில்லை. (ஆதி 25:29-34) ஆபேல் கொலை செய்யப்பட்டபடியினாலே அவனும் அந்த வரிசையில் வரவில்லை. (வம்சவழியை அது நிறுத்தினது) மற்றும் சேத் ஆதாமின் வம்சத்தின் சந்ததிகளைக் கொண்டு வரக்கூடிய மாற்று ஒருவனாக இருந்தான்).

ஆதாமிலிருந்து ஏனோக்கு ஏழாம் தலைமுறையாய் இருந்தான் என்று யூதா 14ல் சொல்லப்பட்டுள்ளது. ஆதாமின் மகனாக காயீன் இருந்திருப்பானேயானால், ஏனோக்கு ஏழாவதாக இருந்திருக்க முடியாது. ஆதாமிலிருந்து எட்டாவது பேராக இருந்திருப்பான் ஆகவே, வேதத்தில் எந்த இடத்திலும் காயீனை ஆதாமுடைய மகன் என்று குறிப்பிடவில்லை.

மேலே கொடுக்கப்பட்டுள்ள எல்லாக் குறிப்புகளிலிருந்து நிரூபிக்கக்கூடியது என்னவென்றால், தேவனுடைய பிரமாணம் மாத்திரம் உடைக்கப்படவில்லை. ஆனால், வீழ்ச்சி என்பது விபச்சாரத்தினாலே, **இரத்தம்** சம்பந்தப்பட்டதாய் இருந்து, சர்ப்பத்தின் **வித்தின்** பிறப்பிற்குக் காரணமாயிற்று (சாத்தானால் - பிடிபட்டவன் - காயீன்).

**காயீன் ஆதாமின் வித்தாக இருக்கவில்லை.** அவன் மெய்யாகவே வேத வாக்கியங்களை சொல்லுகிறபடி சர்ப்பத்தின் வித்தாக இருந்தான். (ஆதி 3:15, 1யோவான் 3:12). அவன் விபச்சாரத்தினால் பிறந்தவனாய் இருந்தான். அவன் சர்வ வல்லமையுள்ள தேவனால் நட்டப்படாமல், சாத்தானின் விதையாக இருந்தான்.

**ஏதேன் தோட்டத்திலே விபச்சாரத்திற்கு ஆரம்பம் உண்டானது.**


அந்த நாள் முதற்கொண்டு அசுத்தமான பாலுறவு எல்லா இடங்களிலும் மிதமிஞ்சிய விஷயமானது. சாத்தான் **மாறுபட்டவனாக** இருக்கிறான் (போராடுகிறான்).

பின்பு, இன்றைய உலகம் முழுவதையும் கம்பளியைப் போல போர்த்தியுள்ள மூன்று பெரிய தீமைகள் அவனிடத்திலிருந்த தோன்றியது. **முரண்பட்ட பாலுறவுகள், பொய்கள்** (வெண்ணிற பொய்கள்) பின்பதாக **கொலைகள்** - இவைகளெல்லாம் ஏதேன் தோட்டத்தில் வெளிப்படையாக இருந்தது அதன் பின்பு, அவைகளோடு தீமையான குணாதிசயங்களாக ஒவ்வொரு வம்சங்களிலும் சேர்க்கப்பட்டு அதிகரித்து வந்துள்ளது.

11. மனித குலத்தின் வீழ்ச்சிக்கு அந்த முதல் ஜோடிகள் **நன்மை-தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனி** ஒரு இயற்கை மரத்தின் கனியாயும் இருக்குமானால், மற்றுமில்லாமல் நித்திய ஜீவனில் பங்குபெற, **ஜீவ விருட்சம் ஒரு இயற்கை மரத்தின் கனியாய் இருக்குமானால்**, தேவன் அவைகளை அழித்துப் போடாததினால், இன்று அந்த **இரண்டு விருட்சங்கள் எங்கே**? (அவைகள் அழிக்கப்பட்டதற்கு வேதத்தில் ஆதாரங்கள் இல்லை). **அந்த மரங்கள் இயற்கை மரங்களாக இருக்குமானால்,** எங்கேயோ பூமியில் ஏதேன் தோட்டத்தின் பாகத்திலே இது இருக்கிறது என்பது நம்பப்படத்தக்கது. (ஆதி 2:10-14). அதினால் அதின் கனிகளில் மனிதன் பங்கேற்பதினால், நித்திய ஜீவன் உண்டாயிருக்கும் அல்லவா? a) அப்படியானால் ஜீவவிருட்சம் **எங்கே**? b) மற்றும் கிறிஸ்து மரித்து நமக்கு **ஜீவனைக்** கொடுக்கும்படி **ஏன் இரத்தத்தை** சிந்தினார்?

**கவனிக்கவும்** : எகிப்தின் புராண கதையிலே ஜீவ விருட்சம் என்பது அத்திமரமாக இருக்கின்றது.





**"....இரத்தம் சிந்துதல் இல்லாமல்**

**பாவ மன்னிப்பு இல்லை..."**

**கிறிஸ்துவும் அநேகருடைய**
**பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படிக்கு**
**ஒரேதரம் பலியிடப்பட்டு, தமக்காகக்**
**காத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு**
**இரட்சிப்பை அருளும்படி**
**இரண்டாந்தரம் பாவமில்லாமல்**
**தரிசனமாவார்"**
**- எபிரேயர் 9:22, 28**





கண்டறிவது கடினமல்ல.

தன் தாயுடன், காம் மாம்ச உறவில் பங்குபெற்ற பிறகு, தன் சகோதரருடன் அதை சொல்லுவதற்கு வெட்கப்படவில்லை. நீதி 30:20-ல் சொல்லப்பட்ட விபச்சார ஸ்திரீ, விபச்சாரம் செய்த பிறகு, தான் எந்த தவறும் செய்யவில்லை என்று சொன்னது போல அவனும் இருந்தான். அவன் **அந்த நேரத்தில்** மரித்த நிலைமை போல குடிபோதையில் நிர்வாணமாய் தன் கூடாரத்தில் படுத்திருந்த தன் தகப்பனுக்கு அவமானத்தைக் கொண்டு வருகிறோம் என்று அவன் நினைத்துப் பார்க்கவில்லை. (திராட்சரச குடிபோதை நோவாவுக்கு எவ்வளவு பெரிய **ஒரு ஐயோவை** உருவாக்கு-வதற்கு காரணமாயிற்று என்று உங்களால் பார்க்க முடிகிறதா?)

"சேமும், யாப்பேத்தும் வஸ்திரத்தை எடுத்து **பின்னிட்டு வந்து** தங்கள் தகப்பனுடைய நிர்வாணத்தை **மூடினார்கள்.** அவர்கள் எதிர்முகமாய் போகவில்லை...." இங்கே பயன்படுத்தப்பட்ட குறிப்பிட்ட சொற்றொடர், அந்த இரண்டு சகோதரர்கள் நடந்த விஷயத்தைக் குறித்து **வெட்கப்பட்டார்கள்** என்று சொல்லுகிறது. தங்கள் தகப்பனுடைய நிர்வாணத்தை மறைக்கும் பொழுது தங்கள் முகங்களைத் திருப்பிக் கொண்டார்கள்.

(h) "தோல்களின் மேல்", "வஸ்திரம்" என்கிற வார்த்தையின் சொற்றொடரைத் தேடிப் பார்க்கவும் அதை நீங்கள் கவனிக்கும் போது, "வஸ்திரம்" என்பது **மூடக்கூடிய ஒன்றாகும்.** (வெறும் துணியல்ல) (ஏசா 61:10. வஸ்திரத்தை "இரட்சிப்பு" என்று சொல்லுகின்றது, அப்படியென்றால், நம்முடைய பாவத்தினால் உண்டான நிர்வாணத்தை இரட்சிப்பு என்கிற வஸ்திரம் மூடுகின்றது போல் இங்கே நடந்த ஒரு அவமானத்தை அவர்கள் மூடினார்கள்) மற்றும் வேத வசனம் சொல்லுகிறது போல அந்த சகோதரர்கள் தங்கள் **இருவருடைய தோள்களின்** மேல் சுமந்தார்கள். (ஏசா 9:6-ல் "நமக்கு ஒரு பாலகன் பிறந்தார், நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார், கர்த்தத்துவம் அவர் தோளின் மேலிருக்கும்..." தோளின் மேல் என்று சொன்னால், பாரத்தை சுமப்பது, பொறுப்பை எடுப்பது என்றெல்லாம் அர்த்தமாகும்). ஆகவே இவர்கள் அந்த **அவமானத்தின் நிந்தையை மறைத்து சுமக்க வேண்டியதாயிற்று. இந்தப் பொறுப்பு** மிகக் கடினமாயிருந்தது. ஏனென்றால் "நோவா திராட்சரச மயக்கத்திலிருந்து எழுந்த போது", (நடந்த சம்பவத்தின் விழிப்புணர்வு பெறுகிறான்) தனக்கு காம் எவ்வளவு பெரிய **தீமை** செய்தான் என்று கண்டுபிடித்தான்.

(i) "........... தங்கள் தகப்பனுடைய நிர்வாணத்தைக் காணவில்லை", சேமும், யாப்பேத்தும் தங்கள் தகப்பன் குடிபோதையிலிருந்த போது தங்கள் தாயுடன் எந்த தவறான உறவில் பங்குபெறவில்லை என்று இந்த வார்த்தை நமக்கு **வலியுறுத்துகின்றது**.

போது அவர்கள் சத்தியத்தைப் புரிந்து கொள்ளவே முடியவில்லை. (யோவான் - 6) அவருடைய வார்த்தைகளை மாம்சத்தின்படி எடுத்துக் கொண்டு ஆண்டவர் அவர்களை தன்னினத் தின்னியாகவும் அல்லது மனித இரத்தத்தைக் குடிப்பவர்களாவும் இருப்பதற்கு அவர்களை துணிவூட்டுகிறார் என்று நினைத்தார்கள். மற்றப் பக்கத்தில் ரோமன் கத்தோலிக்கர்கள் இயேசு நாதரின் இறுதி விருந்து சடங்கை அவருடைய உண்மையான மாம்சம் என்றும் இரத்தம் என்றும் நம்பி இருக்கின்றனர்.

(e). 23வது வசனத்தை ஆராய்வோம், "அப்பொழுது சேமும் யாப்பேத்தும் ஒரு **வஸ்திரத்தை** எடுத்துத் தங்கள் **இருவருடைய தோள்மேலும் போட்டுக்கொண்டு...**" ஆதி 9:23.

இப்பொழுது இதற்கு பின்பு மறைந்திருக்கும் ஆவிக்குரிய அர்ததத்தை பொருட்படுத்தாமல், அது **அப்படியே** இருக்கிறது போல் வியாக்கியானம் செய்தால், நீங்கள் இந்தக் கேள்வியை சந்திக்க வேண்டியதாகும். "ஏன் சேமும் யாப்பேத்தும் தங்கள் **தகப்பனின் நிர்வாண சரீரத்தை** மறைக்கத்தக்கதான பெரிதும், லகுவானதற்கு பதிலாக, ஒரு **பெரிதும் கனமான வஸ்திரத்தை** எடுக்க வேண்டும்?" **அந்த வஸ்திரம்** உண்மையாகவே பெரிதும், மிகவும் கனமுள்ளதாய் இருந்திருக்க வேண்டும். இல்லையென்றால், அதை அவர்கள் சுமப்பதற்கு **இருவருடைய தோள்களை** பயன்படுத்தியிருக்க மாட்டார்கள்.

(f) மறுபடியும் இந்த இடத்தில் "**ஒரு வஸ்திரம்**" என்று சொல்லப்பட்டதே தவிர பெரிய வஸ்திரம் அல்ல. **ஒரு வஸ்திரம்,** சரீரத்தை மறைக்கக் கூடிய **ஆடையாயிருக்கிறது** (அரமைக்கிலிருந்து மொழி பெயர்க்கபட்ட வார்த்தை "MANTLE") ஆகவே இந்த இரண்டு மனிதர்களும் தங்கள் இரண்டு தோள்களினால் சுமந்து செல்லத்தக்கதாக ஒரு வஸ்திரம் இருக்குமானால், அது எவ்வளவு கனமுள்ளதாயிருந்திருக்க வேண்டும்? அது நோவாவோ அல்லது அவனுடைய ஏதோ ஒரு மகனில் ஒருவனோ போட்டிருந்த அலங்கோலமான வஸ்திரமாய் இருந்திருக்குமா? இல்லையென்றால், அது ஒரு சாதாரண வஸ்திரம் "MANTLE" ஒரு சாதாரண துணியாக இருந்திருக்குமானால், **இருவரும் தோள்களைப் பக்கம் பக்கமாக வைத்து பின்னாக நடந்து** போயிருக்க வேண்டும். நிர்வாணத்தை மறைப்பதற்கு இப்படி செய்திருப்பார்களானால், அது எவ்வளவு அறிவற்றதாயிருக்கும். (வேத விசுவாசிகள் சிந்திப்பார்களானால், விசுவாசிகளை ஏமாற்றும் பிரசங்கியார்கள் இருந்திருக்க மாட்டார்கள்).

(g). தேவன் உண்மையை மறைக்கவும், அதே நேரத்தில் வெளிப்படுத்தவும், ஒரு குறிப்பிட்ட சொற்றொடரைப் பயன்படுத்தின ஒருவன் உணரும் போது சத்தியத்திற்குரிய உண்மையான பார்வையைக்





# சர்ப்பத்தின் வித்தும் ஆதாமின் வித்தும்

ஆதாமையும், சர்ப்பத்தின் **இரண்டு வம்சங்களையும்** ஆராய்ந்து பார்த்தால், அதில் அநேக **வித்தியாசங்களை** நாம் காணலாம்.

**1.** (ஆதி 4:2) கூறுகிறது, காயீன் நிலத்தைப் பயிரிடுகிறவனாய் இருந்தான் .

சர்ப்பத்தைப் போலவே, ஆதாம் வேலைக்காரனாய் நிலத்தை பண்படுத்துகிறவனாயிருந்தான். மனிதன் நிலத்தை பண்படுத்த வேண்டுமென்று அவனுக்கு சொல்லப்பட்டது. (ஆதி:2:5). பூமியையும், பூமியிலுள்ள சகல சிருஷ்டிகளையும், மனிதன் தன் அதிகாரத்தின் கீழே ஆளுகை செய்ய வேண்டும் என்பது தேவனால் கட்டளையிடப்பட்டது. (ஆதியாகமம் 1:28) வீழ்ச்சிக்குப் பிறகு, ஆதாம் நிலத்தைத் தானே பண்படுத்த வேண்டியதாயிற்று (ஆதி:3-23). ஏனென்றால், தேவன் சர்ப்பத்தை சபித்து அதை ஊறும் பிராணியாக மாற்றியதால் ஆதாம் தன் வேலைக்காரனாகிய சர்ப்பத்தை இழந்தான் (பின்னிணைப்பு 2ஐ பார்க்கவும்).


சர்ப்பம், ஆதாம் ஏவாளுடன் ஏதேன் தோட்டத்தில் இருந்தது

இதற்கு மேலாக தெளிவாய் சர்ப்பம் ஆரம்பத்திலே என்னவாக இருந்தது என்பதை வேத வசனங்கள் காண்பிக்க முடியாது. இன்னும், சத்தியமானது, கல்விமான்களுக்கும், ஞானவான்களுக்கும் அது மறைக்கப்-பட்டுள்ளது. (ஏசா 29-14, 1 கொரி 1-19, லூக் 10-21) **எல்லா காட்டு**

**மிருகங்களிலும் சர்ப்பமானது மிக அறிவானதும், உயர்வான சிருஷ்டியாயும் இருந்ததை கவனிக்கவும். அவன் தந்திரமுள்ளவனாய் இருந்தான்.** அவன் அருவருக்கத்தக்கவனாக இல்லை. வயல்களிலிருந்த எல்லா சிருஷ்டிப்புகளிலும், **சர்ப்பம் மாத்திரமே ஆதாமோடும், ஏவாளுடனும், தொடர்புடையதான ஒரே மிருகமாயிருந்தது.**

(ஆதி 3-1) சந்தேகமில்லாமல் அவன் ஏறக்குறைய மனிதனைப் போல **நேராக** நின்று கொண்டிருந்த ஒரு **சிருஷ்டியாக** இருந்தான். சந்தேகமின்றி, தேவசாயலாகவும், அவர் ரூபமாக படைக்கப்பட்ட தேவகுமாரனான ஆதாமைப் போல் சர்ப்பமானது சிருஷ்டிக்கப்படவில்லை. (ஆதி 1:26) அவன் தேவ குமாரனான ஆதாமுடைய ஆளுகையின் கீழ்ப்பட்டு அவனுடைய கட்டளையின்படி செய்கிறவனாயுமிருந்தான். அவன் ஆதாமின் வேலைக்காரனாயிருந்தான். (ஏறக்குறைய 6000 வருடங்களுக்கு முன் - ஆதாமினுடைய வம்சம் (அ) நவீன வரலாற்று மனிதன் படைக்கப்படுவதற்கு முன்பே படைக்கப்பட்ட சர்ப்பமானது, பார்ப்பதற்கு அழகாகவும், வரலாற்றுக்கு முந்தைய மனிதனைப் போலவும் இருந்திருக்கிறது).

ஆகவே காயீன், தன் தகப்பனாகிய சர்ப்பத்தைப் போலவே நிலத்தை பண்படுத்துகிறவனாய் இருந்தான். ஆனால் ஆபேலோ, தன் தகப்பனாகிய ஆதாம், எப்படி மிருகங்களைத் தன் கரத்தின்கீழ் ஆளுகையில் வைத்திருந்தானோ, அப்படியே ஆடு மேய்க்கிறவனாக இருந்தான் (ஆதி 4 2).

**2.** **ஆபேல் தேவகுமாரனான** ஆதாமுடைய குமாரனாக இருந்தபடியினால், மனித வீழ்ச்சியின் **உண்மையான வெளிப்பாடு** உடையவனாயிருந்தான். அந்த வெளிப்பாடு அவனை தன் ஆடுகளின் முதலீற்றை பலியாய் தியாகம் செய்ய வைத்தது (ஆதி 4-4). அவன் தோட்டத்தில் என்ன நடந்தது என்பதை அறிந்திருந்தான். இது இரத்தம் சம்பந்தப்பட்டதினால் இரத்தம் சிந்தப்பட வேண்டும் என்பதை அறிந்திருந்தான். (ஆதாமும், ஏவாளும் உடுத்த, தோல்களினால் உடைகளை செய்ய சுமாராக இரண்டு மிருகங்கள் தேவனால் பலி கொடுக்கப்பட்டது.(ஆதி 3-21)

**சர்ப்பத்தின் மகனாக** இருந்த **காயீனுக்கு** ஆபேலைப் போன்ற அப்படிப்பட்ட வெளிப்பாடு இல்லை. அவன் நிலத்தின் கனியாகிய **காய் கறிகள், பழங்கள்,** மற்றும் **பூக்களை** போன்ற பலியை கொண்டு வந்தான் (ஆதி 4-3) இப்பொழுது **பாகால் ஆராதனையில்** காயீன் விட்டுச் சென்ற அடையாளத்தை காணலாம். **அது காயீனின் மதம்.**



**மூல பாவம்**

நீதிக்கு விரோதமாய் அவன் மனதை திருப்பி, அவன் வரம்பு மீறச் செய்து, நரம்பை தளரச் செய்து, சீர்கேட்டை கொண்டு வந்து, தன் மனைவிக்கும், தன் உறவுக்கும் எதிர்மாறான பல விளைவுகளைத் தன் வாழ்க்கையிலே கொண்டு வரக்கூடியதாயிருக்கின்றது.

சர்ப்பத்தின் சுபாவம் உடையவளாகவும், சேத்தின் சுத்தமான வம்சமாயிராத திருமதி. நோவா திருமணத்தின் கட்டை மீறுகிறவளாய் இருந்தாள். நோவா குடிவெறியின் நிலைக்கு முழுமையாய் போனது அந்த நாளில் காமுக்கும், திருமதி. நோவாவுக்கும் வெட்கப்படத்தக்கதான பாவக் கிரியைகளை செய்வதற்கு ஒரு வாய்ப்பு வந்தது.

(d) ஆதி 9:20-24ல் இந்த **முறைதகாப் புணர்ச்சியின்** முழு சம்பவத்தையும் அதிலும் 23வது வசனம் ஏற்றுக் கொள்வது மிகக் கடினமான ஒரு விஷயம். "நோவா பயிரிடுகிறவனாகி, திராட்சத் தோட்டத்தை நட்டினான்". அவன் திராட்சரசத்தைக் குடித்து வெறிகொண்டு, தன் கூடாரத்தில் வஸ்திரம் விலகிப் படுத்திருந்தான். அப்பொழுது கானானுக்குத் தகப்பனாகிய காம் தன் தகப்பனுடைய **நிர்வாணத்தைக் கண்டு,** வெளியில் இருந்த தன் சகோதரர் இருவருக்கும் அறிவித்தான். அப்பொழுது "சேமும் யாப்பேத்தும் ஒரு வஸ்திரத்தை எடுத்துத் தங்கள் இருவருடைய தோள்மேலும் போட்டுக் கொண்டு", பின்னிட்டு வந்து தங்கள் தகப்பனுடைய நிர்வாணத்தை மூடினார்கள். அவர்கள் எதிர்முகமாய் போகாதபடியினால், தங்கள் தகப்பனுடைய நிர்வாணத்தைக் காணவில்லை. நோவா திராட்சரசத்தின் வெறி தெளிந்து விழித்த போது தன் இளைய குமாரன் தனக்குச் செய்ததை அறிந்து" ஆதி 9:20-24.

காம் தனது தகப்பனுடைய நிர்வாண சரீரத்தை மாத்திரமே பார்த்தானென்று விசுவாசிக்கிறவர்கள் இந்த வசனத்தை வாசித்து, "சேம், யாபேத், நோவாவை மூடுவதற்கு ஒரு வஸ்திரத்தை எடுத்து அவர்கள் செய்யும் பொழுது அவர்களுடைய தகப்பனின் நிர்வாண சரீரத்தை பார்க்கக் கூடாதபடிக்கு பின்னிட்டு நடந்தார்கள்" என்று சொல்வார்கள்.

வேத வசனங்களை நீங்கள் 1,2,3ஐ புரிந்து கொள்வது போல இருக்குமானால், கிறிஸ்தவ உலகம் இவ்வளவு குழப்பமாக இன்று இராது. கல்விமான்களுக்கும், ஞானிகளுக்கும் மறைப்பதற்கு தேவன் சில இரகசிய வழிகளை தெரிந்திருக்கிறார். அதை எளிமையாயிருக்கும் குழந்தைகளுக்கும் மற்றும் சத்தியத்தைக் கற்றுக் கொள்பவர்களுக்கும் அவர் சத்தியத்தை வெளிப்படுத்துகிறார்.

கர்த்தராகிய இயேசு, தேவனால் தெரிந்து கொள்ளபட்ட யூத ஜனங்களுக்கு ஒரு மனிதன் அவருடைய மாம்சத்தைப் புசித்து, அவருடைய இரத்தத்தை, நித்திய ஜீவனுக்காக குடிக்கவும் வேண்டுமென்று சொன்ன

படுத்தியிருப்பானானால் அப்பொழுது காமின் பாலங்கத்தைச் சபித்திருப்பது நியாயமாய் இருந்திருக்கமல்லவா? தேவனுடைய வார்த்தை என்ன சொல்கிறது என்றால்; (யாத் 21:23-25).

"வேறே சேதமுண்டானால், ஜீவனுக்கு ஜீவன், கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல், கைக்குக் கை, காலுக்குக் கால், சூட்டுக்குச் சூடு, காயத்துக்குக் காயம், தழும்புக்குத் தழும்பு பழி கொடுக்க வேண்டும்" (யாத் 21:23-25).

ஆகவே, ஏன் கானான்? ஆதி 9:22-ல் "தேவன் கானானின் பெயரை காமின் பாவத்தோடு இணைத்து பேசுகிறார்".

"அப்பொழுது கானானுக்குத் தகப்பனாகிய காம் தன் தகப்பனுடைய நிர்வாணத்தைக் கண்டு, வெளியில் இருந்த தன் சகோதரர் இருவருக்கும் அறிவித்தான்".

(ஆதி 9:18) "பேழையிலிருந்து புறப்பட்ட நோவாவின் குமாரர், சேம், காம், யாப்பேத் என்பவர்களே. காம் கானானுக்குத் தகப்பன்".

தேவன் கானான் ஒரு பாவத்தினால் (அசுத்தமான பாவ இணைப்பு) உருவாக்கப்பட்ட வித்து என்பதை நமது பார்வைக்கு கொண்டு வருகிறார். (தன் தகப்பனுடைய நிர்வாணத்தைக் கண்டான்). கானான், காமும் தன் மனைவியாகிய திருமதி. காமுக்கும் பிறவாமல், காமும், தன் தாயாகிய திருமதி நோவாவுக்கும் பிறந்தவன். இது முறைதகா புணர்ச்சியின் செயல்பாட்டின் நிமித்தம் கானான் என்ற வித்தைக் கொண்டுவந்தது. ஜலப்பிரவாகத்திற்குப் பிறகு கானான், இராட்சதர்களை பொல்லாதவர்களை உருவாக்கினான். - (ஆதி 10:15-19). அவன் காயீனைப் போலவே சபிக்கப்பட்டவனும், கெட்ட வித்துமாயிருந்தான். எனவே, நோவா கானானை சபித்ததில் ஞானமிருந்தது. இதற்கு மேல் தெளிவு நமக்கு அவசியமில்லை. (காமுடன் முறைதகா புணர்ச்சியினால், கானானுக்குப் பிறகு நோவாவுக்கும், திருமதி. நோவாவுக்கும் இடையில் குழந்தையும் பிறக்கவில்லை என்பதை கவனிக்க வேண்டும்).

**கவனிக்கவும்**:

காமுடைய பேரனாகிய நிம்ரோத்தும், காமைப் போல முரண்பட்டவனாக இருந்தான். அவன் தன் சொந்த தாயாகிய செமிராமிஸை மணந்து கொண்டதை பூர்வகால சரித்திர சான்றிதழில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஜலப்பிரவாகத்திற்கு பிறகு நோவாவின் ஆர்வம் என்ன? இவ்வாறு பிரிவு (a)ஐ பார்த்து, அதில் சொல்லப்பட்ட வசனங்களையும் வாசித்து, ஒரு குடிவெறி ஒரு நபரை என்ன செய்யும் என்று பாருங்கள். அது ஒரு நபரை மட்டுப்படுத்துவது மாத்திரமல்ல, அவனுக்கு தரித்திரத்தை கொண்டு வந்து





**3.** காயீன் தன் **தகப்பனுடைய அடிச்சுவடாகிய கொலை, பொய்கள் வன்முறைக்குரிய கடுங்கோபம்,** போன்றவற்றை **சாத்தானிடமிருந்து** பெற்றுக் கொண்டு தன்னை வெளிப்படுத்தினான் (ஆதி 4: 8,9; யோவான் 8:44 வாசியுங்கள்).

**4.** ஆதி 4:16-24-ன் படி **காயீனின் வம்சாவளி** (அ) பரம்பரையினர் எப்படிப்பட்டவர்களாய் இருந்தார்கள் என்பதை குறிப்புகள் நமக்கு காண்பிக்கிறது.

மூன்றாம் தலைமுறைப் பேரன் லாமேக்கு இரண்டு மனைவிகளை எடுத்து பல திருமணத்தை வழக்கமாக்கி கொண்டான். (ஆதி 4-19) யாரிடம் இருந்து எங்கிருந்து அவன் இப்படி ஒரு வெளிப்பாட்டை பெற்றுக் கொண்டான் (ஆதி 2 23-24 ன்படி, தேவன் திருமணத்தை குறித்து தீர்க்கதரிசனமாக கட்டளையிட்டதை வாசிக்கவும்). லாமேக்கும், மூன்று தலைமுறைக்கு முன்பதாக இருந்த தன் தாத்தா காயீன் போல கொலை செய்தான் (ஆதி 4-23).

காயீனின் ஜனங்கள் சிறந்த ஜனங்களாய் இருந்தார்கள். உலகத்தின் காரியங்களில் ஞானமுடையவர்களாயும், கண்டுபிடிப்பாளர்களாயும், பெரிய பட்டணங்களையும், ஞாபகச் சின்னங்களையும், கட்டுகிறவர்களாயும், சிறந்த வியாபாரிகளாயும் இருந்தார்கள். (ஆதி 4 17-22)

**5.** "ஏனோஸ் சேத்துக்கு பிறந்த பிறகு, மனிதர்கள் தேவனுடைய நாமத்தை கூப்பிட ஆரம்பித்தார்கள்". (ஆதி 4-26)). வேதத்தை வாசிக்கிற அநேகரால் இந்த வசனம் தவறாக வியாக்கியானப்படுத்தப்பட்டுள்ளது. அப்பொழுது ஜனங்கள் கர்த்தருடைய நாமத்தை துஷணமாக கூப்பிட ஆரம்பித்தார்களென்று ஆதி யூத சான்றுகள் வழங்குகின்றன. இது **காயீனுடைய ஜனங்கள்** உண்மையான ஆவியின் ஆராதனையின் குறைவான அறிவிலிருந்து **வழிமாறினார்கள்** என்பதைக் காண்பிக்கிறது. தங்கள் தகப்பனாகிய காயீனிடமிருந்து இந்த **விக்கிரக வழிபாட்டைக்** கற்றுக் கொண்டார்கள். தங்கள் விக்கிரக ஆராதனைக்குள் யேகோவா தேவனின் பரிசுத்த நாமத்தை பயன்படுத்தினார்கள், என்று அந்த நாட்களின் விக்கிரக ஆராதனையின் சுவடுகள் கூறுகின்றன.

**6.** ஆதியாகமத்தின் 5 அதிகாரங்கள், 'நோவா' வரை **ஆதாமின் வம்சத்தை** சான்று பகர்கின்றது. அவர்கள் மிகவும் **எளிமையான ஜனங்களாய்**

இருந்தார்கள். தங்கள் ஆவியில் **உண்மையான ஆராதனையை** யெகோவோவுக்கு செலுத்தி **நிலைப்படுத்தினார்கள்.** அவர்கள் அனைவரும் முக்கியமாக **மேய்ப்பர்களாய்** இருந்தார்கள் என்று சரித்திரம் கூறுகிறது. இந்த ஆதாமின் வம்ச வரலாற்றில் **எந்த சாத்தானின் அடிச்சுவட்டின் சான்றுகளும் இருந்ததற்கு வெளிப்பாடு இல்லை.** ஏனென்றால், **ஒவ்வொரு முதல் பிறப்புகளும் தேவக் குமாரனான ஆதாமின் சுத்தமான இரத்தம்** நிறைந்த அவனுடைய குமாரனாய் இருந்தார்கள். முதல் பிறப்பு மாத்திரமே புத்திர சுவீகாரம் என்று சான்று கொடுக்கப்பட்டது. (பின்னிணைப்பு - 3 பார்க்கவும்) பலதார மணம், பொய்சொல்லுதல், கொலை செய்வது மற்றும் மாம்சத்துக்குரிய மற்ற எல்லாவிதமான பொல்லாத கிரியைகள் அங்கே இருக்கவில்லை. வீழ்ச்சிக்குப் பிறகு ஆதாம் மற்றும் அவனைச் சார்ந்த மக்கள் மீது பாவம் சுமத்தப்பட்டது. அவர்கள் பரம்பரையாக வரும் தீமையைப் பெற்றுக் கொள்ளவில்லை.

**கேள்விகள்**: காயீன் தன்னுடைய சந்ததிகளின் **தீமையான குணாதிசயங்களை** குறித்து நாம் என்ன சொல்ல முடியும்? அவர்கள் எல்லோரும் ஆதாமினுடைய ஒரே குலத்திலிருந்து வந்தவர்களாக இருந்திருந்தால், ஏன் காயீனும் அவனது பரம்பரையினருக்கும், சேத்தும் அவனது பரம்பரைக்கும் அவ்வளவு **பெரிய வித்தியாசம்** காணப்படுகிறது?. (ஒரே தகப்பன் ஆதாமாக இருக்கும்போது).





கொண்டு, அவன் அவளுடைய நிர்வாணத்தையும் அவள் அவனுடைய நிர்வாணத்தையும் பார்த்தால் அது பாதகம். "பார்த்தால்" அல்லது "பார்ப்பது" என்கிற வார்த்தை ஏதோ மாமிசக் கண்களில் பார்க்கக் கூடியதாய் இல்லை, அது பாலுறவைக் காண்பிக்கக் கூடியதாய் இருக்கின்றது. அப்படியானால், காம் தன் தகப்பனுடைய நிர்வாணத்தைக் கண்டான் என்று ஆதி 9 சொல்லுகிறது. அப்பொழுது, தகப்பனுடைய நிர்வாணம் என்றால் என்ன?

லேவி 20:11 "தன் தகப்பன் மனைவியோடே சயனிக்கிறவன் தன் தகப்பனை நிர்வாணமாக்கினபடியால்...."

இந்த வசனத்தின்படி, தகப்பனுடைய மனைவியோடு சயனித்தால், அது தகப்பனின் நிர்வாணமாகின்றது. அது தகப்பனை நிர்வாணப்படுத்துகின்றதும் அவமானப்படுத்தக் கூடியதாயிருக்கின்றது.

அப்பொழுது, காம் தகப்பனுடைய நிர்வாணத்தைக் கண்டான் என்று சொல்லப்பட்டிருக்குமானால், காம் தன் தாயுடன் சயனித்தான்.

**கவனிக்கவும்**; மோசே, ஆதியாகமம் புஸ்தகத்திற்கும், லேவியராகமம் புஸ்தகத்திற்கும் கதாசிரியராய் இருந்தபடியினால், "தகப்பனுடைய நிர்வாணத்தை **கண்டான்**" என்கிற சொல் மூலமாக காம் உறுதியாய் **தன் தகப்பனுடைய மனைவியோடு சயனித்ததை** நாம் மிக உறுதியாய் அறிந்து கொள்ளலாம்.

(c) காம, நோவா நிர்வாணமாய் தன் கூடாரத்தில் படுத்திருந்ததாலும், தன் இரண்டு சகோதரர்களுக்கும் அதைப் பற்றி சொன்னதாலும், தன் மகனாகிய கானானுக்கு சாபத்தை வரவழைத்தான் என்று நினைப்பது சரியான புரிந்து கொள்ளுதல் அல்ல. ஆதி 9:24 வாசிக்கவும். அதில் தெளிவாக காம் நோவாவின் **நிர்வாண சரீரத்தை வெறும் பார்த்தான்** என்று சொல்லப்படாமல் தனக்கு ஏதோ **ஒன்றை செய்தான்** என்று சொல்லப்பட்டு இருக்கிறது. தன் தாயுடன் சயனித்ததினிமித்தம் நோவாவுக்கு இலச்சை உருவாக்கினான். இது நோவா கானானை **சபிக்கும்படி** தூண்டியது.

ஆனால், நோவா ஏன் மற்ற குமாரர்களை சபியாமல், கானானை சபித்தான்? கானான் காமுக்கும், திருமதி. காமுக்கும் பிறந்திருப்பானானால், கானானை நோவா சபிப்பதில் நியாயம் இருந்திருக்குமோ? அல்லது நோவா காமை சபித்திருக்க வேண்டும். சாபம் நியாயமாய் இருந்திருக்குமானால் நோவா, தன் சரீரத்தை உற்றுப் பார்த்த கண்களையும், தன் குடிவெயில் நிர்வாணமாய் கிடந்தததை பரிசாயம் செய்த வாயை அல்லவா சபித்திருக்க வேண்டும். இல்லையென்றால், நோவா குடிவெறியில் கிடக்கும்போது, காம் தன்னுடன் தவறு செய்யும்படி அவனை வலுக்கட்டாயப்

"ஆப்பிள் என்றும், வேறொரு பழமென்றும்", "காம் தன் தகப்பனுடைய நிர்வாண சரீரத்தை உற்றுப் பார்த்து கேலி செய்தான் " என்றும் சொல்லுகிறார்கள்.

எனினும், இந்த சொல்லப்பட்ட 5 வசனங்கள் முறைதகாப் புணர்ச்சி என்பதைச் சுட்டிக் காட்டுகின்றது என்று அவர்கள் ஏற்றுக் கொண்டாலும் மற்ற சொல்லப்பட்ட வசனங்களை புரிந்துகொள்ளமுடியாத நிலையில் இருக்கின்றார்கள்.

கல்விமான்களுக்கும், ஞானிகளுக்கும் சத்தியத்தை இரகசியமான வரிகளிலே தேவன் மறைக்கின்றார். அநேக காரியங்களைக் குறிப்பிட்டு வேதத்திலிருந்து தெரியவைப்பது தேவனுடைய ஒரு வழியாய் இருக்கின்றது. (எபிரேயர், அரமைக் மற்றும் கிரேக்க மொழியிலும்) அவர் மாமிசக் காரியங்களைப் பயன்படுத்தி ஆவிக்குரிய காரியத்தைப் போர்த்திக் காண்பிக்கின்றார். இதை நீங்கள் உணர்ந்தால் வேதத்திலுள்ள புதுமையானக் கருத்துக்களை புரிந்து கொள்ள முடியும். ஆகவே, சொல்லுக்கு சொல்லை எடுக்காமல், அதற்கு மேற்பட்டு கவனிக்கவும்.

இப்பொழுது, நீங்கள் எதனை விசுவாசிக்கிறீர்கள் என்பதை முக்கியப் படுத்தாமல், நீங்கள் சிந்தித்து ஆராயத்தக்கதான சில காரியங்கள் இங்கு இருக்கின்றன. அதை நீங்கள் வெளிச்சத்தில் காணும்படி பரிசுத்த ஆவியானவர் உங்களுக்கு கிருபை தருவாராக.

(a) இதில் தெளிவாக சொல்லியதை நீங்கள் கவனமாக பாருங்கள். "நோவா **பயிரிடுகிறவனாகி, திராட்சத் தோட்டத்தை நட்டினான்,** அவன் **திராட்சரசத்தை குடித்து....** " **இந்த திராட்சரசத்தை செய்வதையும், குடிப்பதையும்** நோவா தன்னைப் **பழக்கப்படுத்திக்** கொண்டதினிமித்தம் தனக்கு வரக்கூடிய **சாபத்தை** இது **உறுதிப்படுத்துகின்றது.** கொஞ்சம் கொஞ்சமாக அவன் **குடிவெறியனாகி,** ஒருநாள் அவன் **குடிவெறியில் இருக்கும்போது** அவனுடைய மகன்களில் ஒருவன் தன் தகப்பனுடைய நிர்வாணத்தைப் **பார்த்தான்.** "அப்பொழுது கானானுக்கு தகப்பனாகிய காம், **தன் தகப்பனுடைய நிர்வாணத்தைக் கண்டு....**"

(b) லேவி 18:20-ல் பதிவு செய்யப்பட்ட பிரமாணங்களை வாசித்து பின் தொடரும் வார்த்தைகளையும், தொடர் மொழிகளையும் அதில் கவனிக்கவும், "நிர்வாணமாக்கலாகாது" (லேவி 18:6-8) "சயனிக்கிறவன்.... நிர்வாணமாக்கின-படியால்" (லேவி 20:11) மற்றும் "நிர்வாணத்தையும் **பார்த்தான்**" (லேவி 20:17).

**கவனிக்கவும்**; லேவி 20:17-ன்படி ஒருவன் தன் தகப்பனுக்காவது தன் தாய்க்காவது குமாரத்தியாயிருக்கிற தன் சகோதரியைச் சேர்த்துக்






# இரண்டு ஜனங்களின் கலப்பு மணம்

அந்நாட்களிலே ஜலப்பிரவாகத்திற்கு முன்பும், பின்பும் **இராட்சதர்கள்** இருந்தார்கள் என்று ஆதி 6-4 சொல்லுகிறது. (பின்னிணைப்பு 4 பார்க்கவும்) தேவபுத்திரர்களும் (சேத்தின் ஜனங்கள்), மனுஷ குமாரத்திகளும் (காயீனுடைய ஜனங்கள்), ஒன்று இணைந்து சஞ்சரித்ததால் உடல்ரீதியாகவும், அறிவுத்திறனுடைய இராட்சதர்கள் பிறந்தார்கள்.

எல்லா ஆதாமுடைய **முதற் பிறப்புகளும்** நோவா வரை குறிப்பிடப்பட்டதினால் (ஆதி 5) நோவாவைத் தவிர அவர்கள் மனைவிகள் தங்களுடைய **சொந்த குருதிக் கோட்டிற்குரியவர்கள்** (சேதுடைய) என்பதை உறுதிப்படுத்த முடியும். ஆயினும், மற்றவருடைய முதல் குமாரர்களும், குமாரத்திகளும், **விழுந்து போன** குமாரர்களும், குமாரத்திகளும் ஆனார்கள். தேவக் குமாரர்கள் (சேத்தின் ஜனங்கள்) மனிதக் குமாரத்திகள் (காயீனின் ஜனங்கள்) சௌந்தரியவான்கள் என்று தெரிந்து கொண்டார்கள் என்று வேத வசனங்கள் கூறுகின்றது. (ஆதி 6:2). சேத்தின் பெண்கள், காயீனின் வம்சத்தில் வந்த ஆண்கள் **உயரமானவர்-களாயும், வலிமை வாய்ந்தவர்-களாகவும்** இருந்ததின் நிமித்தம் திருமணம் செய்திருக்கலாம். காயீனின் ஜனங்களோடு ஒன்று இணைந்தோ அல்லது திருமணம் செய்தோ (அ) **ஒப்புமை இல்லாமல்** சரிவர ஜோடி சேராதது மாத்திரம் இன்றி, அவர்கள் காயீனுக்குரிய-வர்களின் **பொல்லாத வழிகளை** தெரிந்து கொண்டு தங்களை **மாசுபடுத்திக் கொண்டார்கள்.**



## ஜலப்பிரவாகம்

இந்த இரண்டு வம்சங்களும் **தொடர்ச்சியாய்** திருமணத்தில் ஒன்று இணைந்ததால் தேவன் இந்த உலகத்தின் அக்கிரமங்களை நியாயம் விசாரிக்க வேண்டியதாயிற்று. ஜலப்பிரவாகம் நோவாவின் காலத்திலே இருந்து, ஆனால் பூமியின் மேல் நியாயத்தீர்ப்புக்கு முன்பதாக சுத்தமான சேத்தின் முதல் பிறப்புகளும் போக வேண்டியதாயிற்று. (இது சுத்தமான விசுவாசத்தின், சிருஷ்டிப்புகளின் முதல் பேராகிய சபை வருமுன்னே உலகத்திலிருந்து எடுத்துக் கொள்ளப்படுவார்கள் என்பதற்கு இது ஒரு அடையாளமாயுள்ளது). எல்லா தேவ புத்திரர்களும் (சேத்தின் குமாரர்கள்) **நோவா மாத்திரமே நீதிமானாகவும் பூரண மனிதனாகவும் தேவனோடு நடந்தான்**. தேவனுடைய கண்களில் கிருபை பெற்றவனாகத் தன் குடும்பத்தோடுக் கூட ஜலப்பிரவாகத்திற்கு தப்பி தாண்டி போனவனாகவும் இருந்தான். (ஏன் முதல் பிறப்பான நோவா, ஜலப்பிரவாகம் என்கிற உபத்திரவத்திற்குள் போனான் என்பது கீழே கொடுக்கப்பட்டுள்ள தலைப்பில் விவாதிக்கப்பட்டுள்ளது.)

### சர்ப்பத்தின் வித்து ஜலப்பிரவாகத்தை கடந்து போனதா?

பேழைக்குள்ளாக "**எட்டு**" **ஆத்துமாக்கள்** இருந்தனர். அவர்கள் நோவா(சுத்தமான சேத்தின் வம்சம்). பின்பு திருமதி.நோவா, சேம், காம், யாபேத் மற்றும் அவர்களின் மனைவிகள் பேழைக்குள்ளாக காயீனின் நேரடி வம்சம் இருந்ததா? **சர்ப்பத்தின் சுபாவம்** ஜலப்பிராவகத்துக்கு பிறகு எப்படி வளர்ந்தது? அது **யார்** சுமந்து வந்தார்கள்?

**நோவா சுத்தமான சேத்தின் வம்சமாய்** இருந்ததினாலே மீதியாய் இருந்த மற்ற ஏழு நபர்களுக்குள்ளாகத்தான் அடையாளத்தைக் காண வேண்டும். ஆயினும், சுத்தமான சேத்துக்குரியவர்கள், காயீனுக்குரியவர்களின் வாழ்க்கை அமைப்புக்குள் பங்குபெற வழிநடத்தப்பட்டிருக்காமல் இருந்தார்கள். ஆனாலும், அவர்களின் இரத்தத்துக்குள்ளாக சாத்தானினால் பிடிபட்ட சர்ப்பத்தின் மரபணுக்களை அவர்கள் பெற்றுக் கொள்ளவில்லை. ஆதி 9:19 லிருந்து பூமியில் பிறந்த எல்லா நபரும் நேவாவின் மூன்று குமாரர்களான சேம், காம் மற்றும் யாபேத்தில் ஒருவரை அடையாளமாகக் காண்பது தெளிவாகிறது. நோவாவிற்கும் அவனுடைய மனைவிக்கும் வேறே எந்த குமாரனோ அல்லது குமாரத்திகளோ இருக்கவில்லை. "**வேத வாக்கியங்கள் பொய் உரைக்காது**". **நோவாவுக்கும் சேம், காம், யாபேத் மாத்திரமே இருந்தனர்.** ஆகையால், ஒரு நேரடி காயீனின் வம்சமோ, அல்லது சர்ப்பத்தின் வித்தோ பேழைக்குள் இருக்கவில்லை. (பின்னிணைப்பு: 5 பாருங்கள்)

ஆதியாகமம் 9:20-24-ல் காம், திருமதி நோவாவுடன் **முறை தவறி**





**புணர்ச்சியில்** ஈடுபட்டான்.

<u>**கவனிக்க வேண்டியவை :**</u> ஒரு மகன் தன் சிந்தையில் இச்சை இருந்தாலொழிய தன் சொந்த தகப்பனுடைய நிர்வாணத்தை நோக்கிப் பார்ப்பதும் (அல்லது, ஒரு வேளை ஒரு மகன் தன் சொந்தத் தாயின் நிர்வாணத்தைப் பார்ப்பதும்) பாவம் என்று சொல்லி விசுவாசிப்பது அதிகப்பட்ச நகைப்புக்கு இடமான காரியம் என்று நினைக்கிறார். ஆண்புணர்ச்சியைப் பொருத்தமட்டில், எப்படி ஒரு மனிதன் வெறித்தனமாகக் குடித்து தன் சரீரத்தின் ஒவ்வொரு அவயவம் வலுவற்று இருக்கும்போது, இன்னொரு மனிதனுடன் அப்படி ஒரு கிரியை எப்படி செய்ய முடியும்?. ஒருவேளை அப்படியிருந்திருக்குமானால், அது கற்பழிப்பாகத்தான் இருந்திருக்கும்.

இன்னும் மற்ற வேடிக்கையான கொள்கையும் உண்டு. ஒன்று, நோவா குடிவெறியில் இருக்கும்போது, காம் நோவாவின் ஆண்மையை போக்கினான். இன்னுமொன்று, காம் அல்ல, கானானே நோவாவுக்கு விரோதமாய் பாவம் செய்தான்.

இதிலொன்று புரிந்து கொள்வதும், பொதுவாகப் புறக்கணிக்கப்பட்ட கருத்து என்னவென்றால் காம் தன் தாய் திருமதி. நோவாவுடன் **முறையில்லாப் புணர்ச்சிக்** கொண்டான். இன்னும் இது மெய்யான வியாக்கியானம் மாத்திரமன்றி **மூலபாவத்தின் வெளிப்பாட்டுக்குரிய** பூரண தொடர்ச்சியைக் காண்பிக்கின்றது. **ஜலப் பிரவாகத்திற்கு பிறகு மனிதனுடைய வீழ்ந்து போனப் பாவ ஜென்ம சுபாவத்தையும்** அது நிரூபிக்கின்றது.

<u>**கவனிக்கவும் :**</u> ஒரு வேதமாணவன் சொன்ன ஒரு சொல், இந்தக் கதாசிரியரை ஆச்சரியப்பட வைத்தது. அவன் **முறைதகாப் புணர்ச்சியின்** இந்தப் போதனைக்கு அவன் எதிராக இருப்பவனும், மற்றும் காம் நோவாவின் நிர்வாண சரீரத்தை வெறும் இச்சையுடன் உற்றுப் பார்த்தான் என்கிறதை நம்புகிறவன். அவன் ஆச்சரியத்துடன், "என்ன? கேலி செய்யாதீர்கள், நோவாவைப் போல தேவ மனிதனின் மனைவியை இப்படிப்பட்ட ஒரு பாவ செயலை செய்ததாக எப்படி உங்களால் குற்றப்படுத்த முடிகிறது?" என்று கேட்டான். நிச்சயமாக வேதத்தைக் குறித்த ஞானம் அவனுடையத் தலைக்கு மேலாக கடந்து போய்விட்டது. அவன் அக்கிரமம் செய்யும் ஆண்களும், பெண்களும் மாத்திரமே பாவம் செய்வார்கள் என்று நினைத்திருக்கலாம். ஸ்தாபனப் போதனைகள் அவனுடைய சிந்திக்கும் பெலனை என்னவாய் மாற்றியிருக்கிறது? "பாலுறவு" என்பது அவனைப் போல அநேகக் கிறிஸ்தவர்களுக்கு, ஒரு அசுத்தமான வார்த்தையைப் போல் தெரிகிறது. ஆகவே, மனிதனுடைய வீழ்ச்சியையும், காமின் பாவத்தையும் அது

இரண்டு கால்களும் உண்டு, ஆனால் வால் இல்லை) பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு நாட்களில் மாத்திரமன்றி, நமது காலங்களிலும் இருக்கின்றார்கள். இவர்கள் அதிகபட்சமாய் பெரிதான கிறிஸ்துவ ஸ்தாபனங்களிலே இருக்கின்றார்கள். இந்த **"மத பாம்புகள்"** சத்தியத்தை அநியாயமாய் தங்களுடைய வேதாந்திர பட்டங்களுடனும், அது தங்களுக்கு சம்பாதித்து கொடுத்து ஆர்ச் பிஷப், ஹோலி ரெவரன்ட், ரைட் ஹானரபில், கார்டினல் போன்ற விசித்திரமான பட்டங்களைக் கொண்டு பிடித்திருக்கிறார்கள். உபதேசங்களுக்கு மனிதர்களுடைய கோட்பாடுகளைப் போதித்து ஆராதிக்கிறவர்களை வஞ்சித்து தாங்கள் விசுவாசிக்கிறோம் என்று சொல்லுகின்ற தேவனுடைய எல்லா வார்த்தைக்கும் விரோதமாக ஆவிக்குரிய விபச்சாரம் செய்ய வைக்கிறார்கள். இயேசு கிறிஸ்து இப்படி சொல்லி அவர்களை கடிந்து கொண்டார். "...ஒருவனை உங்கள் மார்க்கத்தானாக்கும்படி சமுத்திரத்தையும் பூமியையும் சுற்றித்திரிகிறீர்கள், அவன் உங்கள் மார்க்கத்தானான போது அவனை உங்களிலும் இரட்டிப்பாய் நரகத்தின் மகனாக்குகிறீர்கள்". (மத் 23:15) பாருங்கள்! இது போன்ற கிறிஸ்துவ அமைப்பிலுள்ள மதத் தலைவர்கள் தங்களை விட இரண்டு மடங்கு மோசமாயிருக்கின்ற பாதாளத்திற்கு உரிய (சாத்தானின்) பிள்ளைகளை உருவாக்குகின்றார்கள். தேவன் ஒருவரே என்று பிசாசுகள் நடுங்குகின்றன என்பதை நீங்கள் அறிந்திருக்கின்றீர்கள் அல்லவா? (யாத் 2-19ஐ வாசிக்கவும்) தேவ வார்த்தையை நம்புகிறோம் என்று அறிக்கை செய்து இரண்டு கால்களில் நடக்கின்ற அநேக பிசாசுகள் உண்டு. ஆனால், தேவனுடைய வாத்தையை முகத்திற்கு முகம் சந்திக்கும் பொழுது நடுங்குகின்றன. அவர்கள் வஞ்சிக்கிறவர்கள். அவர்கள் எல்லா நேரமும் தேவனுடைய வார்த்தைக்கு விரோதமாய் தங்கள் விஷங்களைக் கொண்டு சர்ப்பத்தைப் போலவே சீறுவார்கள்! இது போலவே ஆதி 3:15-ல் சர்வ வல்லமையுள்ள தேவன் தீர்க்கதரிசனம் உரைத்தது போலவே பிசாசு எல்லாக் காலங்களிலும் இருக்கும் உண்மையான **தேவக் குமாரர்களை** வஞ்சித்து அழிக்க வேண்டுமென்று தேடினான். ஆனாலும், அவரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் இவர்களுடைய விஷயங்களை கையில் எடுப்பதில் ஒரு பிரச்சனையும் இராது என்று இயேசு வாக்களித்தார் (மாற் 16:18).

### 6. ஆதி 9:20-24 - காமின் பாவம்

அநேக வேத மாணவர்க்கு இந்த ஒரு சில வசனங்கள் நீண்ட காலத்திற்கு இரகசியமாயிருந்து வருகிறது. அப்படி போன்றதில் காமின் பாவத்தைக் குறித்து மூன்று விதமான கருத்துக்கள் உள்ளன. அதில் ஏற்றுக் கொள்ளப்பட்ட **இரண்டு கருத்துக்களாவன,** 1. காம் தன் தகப்பனுடைய நிர்வாண சரீரத்தை **கூர்ந்து கவனித்தான்.** அதைத் தன் சகோதரரிடத்தில் பரிகாசம் செய்தான். 2. குடிவெறியிலிருந்த தன் தகப்பனுடன் **ஆண்-**





**புணர்ச்சியில்** ஈடுபட்டான் என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த கிரியை நோவா குடித்து, வெறித்து தன் கூடாரத்தில் நிர்வாணமாய் படுத்திருந்த போது சம்பவித்தது. காமும் திருமதி நோவாவும் **முறைகேடான பாலியல் செயலுக்கு** குற்றமுள்ளவர்களாய் இருந்தார்கள்.

**கவனிக்கவும்**: "தகப்பனுடைய நிர்வாணம்", "மறைக்கப்படாதவை" என்கிற பதத்தினை புரியாதவர்கள், நீங்கள் லேவி 18 மற்றும் 20 ஐ வாசிக்கவும். அவர் இந்த மார்க்கத்தின் கிரியைகளின் தடைவிதிக்கின்ற பிரமாணங்களும், முறைகேடான கிரியைகளை செய்கின்றவர்களுக்குரிய தண்டனைகளையும் கூறுகின்றது. லேவியராகமம் 18:8 மற்றும் 20:11-ன் படி **"உன் தகப்பனுடைய மனைவியை நிர்வாணமாக்கலாகாது** அது உன் தகப்பனுடைய நிர்வாணம்" அதுபோலவே, உபாகமம் 22-30 மற்றும் 1கொரி 5 1-யும் வாசியுங்கள். (பின்னிணைப்பு 6-ம் பக்கம் பார்க்கவும்).

ஆகவே, இருதிறத்தாரும் தவறான ஆவியை வெளிப்படுத்தினதை நாம் காணலாம், நேரடியாக பிசாசினால் சர்ப்பத்தின் மூலமாக மாத்திரமே அடிசுவடு வரமுடியும். ஆகவே, **திருமதி நோவா** சந்தேகம் இல்லாமல் **காயீனுக்கு உரியவர்கள்** அல்லது **கலப்பிடம்**. (ஒரு சில யூத புஸ்தகங்கள் அவன் காயீனுக்குரியவன் என்பதை நிரூபிக்கிறது) (CAINITE). காமின் தாயாக அவள் இருந்தபடியினாலே, சந்தேகமின்றி சர்ப்பத்தின் மரபணுவின் அடிச்சுவடுகளை அவன் மூலமாக சுதந்தரித்திருக்க வேண்டும்.ஆனால் காம் நேரடி காயீனுக்குரியவனாய் இராதபடியினாலே அவன் சர்ப்பத்தின் வித்தாயிராமல் **பாதி சேத்துக்குரியவனாய்** இருந்தான். அது போல சேமும் யாபேத்தும் கூட **சர்ப்பத்தின் அடிச்சுவடுகளை** பெற்றிருந்தார்கள்.

ஆனபடியினாலே, நீதிமானாகிய நோவாவும் (சேத்தின் நேரடி வம்சம்) காயீனுக்குரிய (அல்லது) கலப்பிட மனைவியும், **கலப்பிட இரத்தமுடைய** குமாரர்களை பெற்றதாய் நாம் காண்கிறோம். அவன் குமாரர்களும், காயீனுடைய ஸ்தீரிகளையும், கலப்பிட இரத்தம் நிறைந்த ஸ்தீரிகளை மணந்திருக்கலாம். ஏனென்றால், அக்காலத்திலே பூமியானது கலப்பிட ஜனங்களால் அதிகமாக பெருகியிருந்தது. அவர்கள் பூமியை அக்கிரமத்தினாலும், பொல்லாப்பினாலும், வன்முறையினாலும் நிரம்பியிருந்தார்கள். (ஆதி 6:1-13) காயீன் வம்சம்-மனுஷகுமாரத்திகள்-சௌந்தரியவான்களை (அதாவது பாலியல், கவர்ச்சி, வசீகரிப்பு, தற்காலத்திய 'யேசபேல்' காலம் போல) நினைவு கூறவும். இப்படிப்பட்ட சூழ்நிலைகள் நீடித்ததால், தேவனுடைய மெய்யான குமாரர்கள்-சேத்துக்குரியவர்கள்-மேற்கொள்ளப்பட்ட தங்கள் அணுக்கள் முழுவதும் முற்றிலும் கறைபட்டது.

**குறிப்பு** : ஜலப்பிரவாகத்திற்கு பிறகு நோவா குடித்து இருந்ததினாலே

அவனும் கலப்பிட வித்து என்று ஒரு சில கிறிஸ்துவர்கள் நம்புகிறார்கள்.

நோவா முற்றிலும் சேத்துக்குரியவன். குடிபோதை அப்படி எதையும் நிரூபிக்காது. குடிவெறி சுதந்திரமாக்கி கொள்கின்ற அடிச்சுவடில் வருகிற பொல்லாப்பு இல்லை. பழைய ஏற்பாட்டின் காலத்தில் இது பாவமென்றில்லாமல் வெறும் 'சாபம்' என்றே கணக்கிடப்படுகிறது. (ஏசாயா 5:22, 23 நீதி 23:19-21) புதிய ஏற்பாட்டின் காலத்தில் கிருபைக்குள்ளாக அதிகமாய் திராட்சரசம் குடிக்கின்றதை பரிசுத்த பவுல் சுட்டிக் காண்பிப்பதும் அன்றி, குடிகாரர்கள் தேவனுடைய இராஜ்ஜியத்தை சுதந்தரிப்பதில்லை என்று எச்சரித்தார்.

நாம் பரிசுத்தவான்களாக இருக்கின்றபடியால் நம்முடைய, சரீரங்கள் பரிசுத்த ஆவியின் ஆலயங்களாய் இருக்கின்றது. அதிகமான போதைப் பொருள்கள் சரீரத்துக்குள் அணுகும்போது, நம் சுயநினைவு இழந்து போவது மாத்திரம் இன்றி, சிறிது சிறிதாக சரீரத்திற்குள் உள்ள ஒரு சில உடற் நுண்கூறுகளை அழித்து விடுகின்றது. (எபேசியர் 5:18 1தீமோத்தேயு 3:3,8, கலாத் 5:16-26 1கொரி 6:9-20)

நோவா அதிகமாய் திராட்சரச மதுவை **அனுபவித்த பழக்கம்**, ஜலப்பிரவாகத்திற்கு முன்பாக இருந்த **கலப்பிட சந்ததி** நிமித்தம் அந்த பாதிப்பு அவர் மேல் வந்திருக்கக் கூடும். திராட்சரசம் செய்வதும் அதை குடிக்கும் பழக்கத்தை அங்கே இருந்து அவன் **பெற்றுக் கொண்டான்.** (ஆதாமின் ஜனங்கள் எளிமையானவர்களாய் இருந்தார்கள். ஆனால், சர்ப்பத்தை சார்ந்தவர்கள் நிலத்தைப் பண்படுத்த கூடியவர்களாயும், தங்களுடைய கற்பனையையும் உருவாக்கும் சிந்தைகளாலும் அநேக அறிவியல் சம்பந்தப்பட்ட வகைகளில் பெரிய சாதனைப் படைத்தவர்களாய் இருந்தார்கள்). நோவா ஜலப்பிரவாகத்திற்கும் பிறகு விவசாயியாக மாறி, நிலத்தைப் பண்படுத்தி திராட்சத் தோட்டத்தை நட்டினவனாய் மாத்திரமே இருந்தான் (ஆதி 9-20).

நோவா கலப்பிட வித்தாக இருந்திருப்பான் **என்றால்,** அவனுடைய தாய், ஒன்று காயீன் வம்சத்தின் ஸ்திரீயாகவோ அல்லது கலப்பிட வித்தாகவோ இருந்திருக்க வேண்டும். ஆனால், ஆதாமின் முதல் வம்சங்கள், நோவாவின் தகப்பனாகிய லாமேக்கில் முடியவில்லை. (ஆதி 5 வாசியுங்கள்). இது நோவாவின் மூன்று குமாரர்களோடும், யாபேத்தை தனிமைபடுத்தாமல், நோவாவோடு முடிவடைந்தது. மேலும், (யாபேத் மூத்தவனாய் இருந்தும், கடைசியாக இடம்பெற்றவனாய் கூறப்படுகிறான்.) அப்படியாக, நோவா சுத்தமான நீதியுள்ள முதற்பிறப்பின் கடைசியாய் இருக்கிறான். (பின்னினைப்பு 7ஐ பார்க்கவும்) (காயீனுடைய வம்சத்தைப்பற்றி ஆதி 4:16-22-ல் ஆராய்ந்து பாருங்கள். மற்றும் சர்ப்பத்தின்





தேடி கண்டுபிடித்துக் கொன்று போட்டதுபோல, யூதர்களும் இயேசுவைத் தேடிக் கண்டுபிடித்து கொன்று போட்டார்கள்.

ஆதி 3:15-ல் முன்னறிவித்தது போல இந்த வசனங்கள் (யோவான் 8:38, 44, மத் 13:38,39) **இரண்டு வித்துகளுக்கும்** இடையில் இருக்கும் **பகையை** குறித்து பேசுகின்றன. சில நேரங்களில் **கோதுமையாகவும், பதறாகவும்** அடையாளம் காட்டுகின்றன. இயேசு, யோவான் 8:38-ல் நான் **என் பிதாவினிடத்தில்** கண்டதை சொல்லுகிறேன். நீங்களும் **உங்கள் பிதாவினிடத்தில்** கண்டதைச் செய்கிறீர்கள் என்றார்; சொல்லும்போது எதைக் குறிப்பிட்டார்? (அதைப் போல யோவான் 8:23லும் "நீங்கள் தாழ்விலிருந்துண்டானவர்கள், நான் உயர்விலிருந்துண்டானவன், நீங்கள் இந்த உலகத்திலிருந்துண்டானவர்கள், நான் இந்த உலகத்திலிருந்துண்டானவனல்ல"). சுய நீதியும், மத சார்பில் யூதர்களாகிய தன் சத்துருக்களிடத்திலே, அவர் பேசிச்கொண்டிருக்கும் போது, அவர் சந்தேகமில்லாமல், தன் தகப்பனாகிய யாபேலினிடத்திலிருந்து கொண்டு புரிந்ததையும், யூதர்கள் தங்கள் தகப்பனாகிய சாத்தானிடத்திலிருந்து கொண்டு புரிந்ததையும் குறிப்பிட்டார். நிச்சயமாக, இப்பிரபஞ்சத்தின் தேவனாகிய சத்துருவினிடத்திலிருந்து அவர்கள் பெற்றுக் கொண்டது, தேவனுடைய சத்தியத்திற்கு விரோதமாயிருந்தது மாத்திரமன்றி கிறிஸ்துவுக்கு தங்களை சத்துருக்-களாகவும் ஆக்கிக் கொண்டார்கள். அதினிமித்தம் "பொல்லாதவனுடைய பிள்ளைகள்", "நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசினால் உண்டானவர்கள்" என்பது அவர்களை குறிப்பிடும். **சர்ப்பமானது பொல்லாதவனல்ல**, என்பதை நினைவுகூற வேண்டும். **வெறிபிடித்து** காயீனை பெற்றெடுப்பதற்கு பொல்லாங்கனால் அவன் பயன்படுத்தப்பட்ட ஒரு கருவியாக இருந்தான்.

யோவான் 8:41ன்படி, "பொல்லாதவர்களின் பிள்ளைகள்", "நாங்கள் விபச்சாரத்தில் பிறக்கவில்லை", "எங்களுக்கு ஒரு பிதாவாகிய தேவனுண்டு" என்று அவர்கள் தற்காப்பு செய்வதை கவனிக்கின்றோம். ஆனால் யூதர்கள், ஏவாளுக்கும், சர்ப்பத்திற்குமிடையில் ஏதேன் தோட்டத்தில் நடந்த விபச்சாரத்தைப் பற்றி அறிந்திருந்தார்கள் என்பதை நமக்கு தெளிவாய் காண்பிக்கின்றது. அது காயீனுடைய பிறப்பை உண்டு பண்ணினது. அவனுடைய **மதத்தின் உபதேசம்** மெய்யான தேவனுடைய வார்த்தையிலிருந்து உண்டாகும் மெய்யான வெளிப்பாட்டிற்கு முரண்பாடாய் இருந்தது. ஆகவே எல்லா காலத்திலும் பிசாசு தன் **மதசம்பந்தப்பட்ட "சர்ப்பத்தின் வித்தின்"** ஜனங்களை உருவாக்கி உள்ளான். அவர்கள் தேவனுடைய வார்த்தைக்கு விரோதமான எல்லாவிதமான போதனைகளையும் கொண்டுவந்தார்கள். இயேசு அவர்களை அழைத்து இதுபோன்ற "**விரியன் பாம்புகள்**" (இரண்டு கைகளும்,

உற்பத்தி செய்வதற்காக சிருஷ்டிக்கப்படவில்லை. ஆவிகளாயிருக்கிற-தினாலே அவர்கள் பாலுணர்வு இல்லாதவர்கள் (மாற் 12:25). வேத வசனங்கள் அவர்களை அடிக்கடி "நட்சத்திரங்கள்" என்று அழைக்கின்றனர். (யோபு 38:7, தானி 8:10, வெளி 1:16,20, 8:12, 9:1).

## 5. உடல் சார்ந்த (இயற்பியல்)

### கலப்பற்ற சர்ப்பத்தின் சந்ததி ஜலப்பிரவாகத்திற்குப் பிறகு கிடையாது

தங்களைத் தாங்களே தீர்க்கதரிசிகளென்று அழைத்துக் கொள்ளும் சிலர், ஜலப்பிரவாகத்திற்குப் பிறகு எட்டு பேருக்கு மேற்பட்டவர்கள் பேழையிலிருந்து வெளியே வந்தார்கள் என்று போதிக்கின்றனர். இதுபோன்ற ஞானமில்லாத போதகர்கள், **தேவனுடைய பரிசுத்த வார்த்தையைப்** பொருட்படுத்தாமல், தங்களது சொந்த வெளிப்பாட்டினாலே புறக்கணிக்கின்றனர். நோவாவும் தன்னுடைய குடும்பமும் பேழைக்குள் ஒரு வருஷமும் பத்து நாட்களும் இருந்தனர். (ஆதி 7:11, 8:14) ஆதி 8:18-ன்படி பேழைக்குள் சென்ற 8 பேரைத் தவிர பேழையை விட்டு வறண்ட நிலத்திற்கு வந்த ஒருவனுமில்லை. ஒரு போதனையின்படி **நோவாவின் மனைவி** காயீன் வர்க்கத்தை சேர்ந்த ஒரு மனிதனோடு விபச்சாரம் செய்து, அவனுடைய வித்தினால் பேழைக்குள் வருவதற்கு முன்னதாகவே கர்ப்பம் தரிக்கப்பட்டாள் என்றும் போதிக்கின்றது மற்றும் வேறொருவன், **நோவாவுக்கு** இரண்டாவது மனைவி இருந்தது. அவள் எங்கேயோ பேழைக்குள் ஒளிந்திருந்தாள் என்றும் அவள் காயீனின் இனத்தானாகிய ஒரு மனிதனோடு சேர்ந்து கர்ப்பம் தரிக்கப்பட்டாள் என்றும் போதிக்கின்றார்கள். மற்றவர்கள், **நோவாவின் மூன்று மகன்களின் மனைவிகள்** காயீன் இனத்தை சேர்ந்த மனிதர்களோடு விபச்சாரம் செய்து கர்ப்பம் தரிக்கப்பட்டார்கள் என்று போதிக்கின்றனர். ஆகவே, அவர்களுடைய "போதனையினால்", **சர்ப்பத்தின் கலப்பிடமில்லாத வித்தின் சந்ததி,** இந்த நாள் வரைக்கும் ஜனங்களுக்குள்ளாக இருக்கின்றது என்று நம்புகின்றனர். "வெள்ளை கிறிஸ்துவர்கள்" என்றும் "பிரிட்டிஷ் இஸ்ரவேலர்கள்" என்றும் தங்களாலே அழைத்துக் கொள்கிற சில பிரசங்கியார்கள் தங்கள் ஆதாம் இனத்தைச் சேர்ந்த "கலப்பிடமற்றவர்கள்" என்றும் "**கறுப்பாயிருக்கின்றவர்கள்**", "**யூதர்களும்**", சர்ப்பத்தின் வித்துகளின் சந்ததிகளென்று குறிகாட்டுகின்றனர். இது போன்ற போதனைகளுக்கு ஆதரவாக அவர்கள் யோவான் 8:37-44 மற்றும் மத் 13:38, 39 வேதவசனங்களை எடுத்து போதிக்கின்றனர். ஆனால், இந்த வேத வசனங்களில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தன்னைக் குறித்தும் தன் உபதேசங்களைக் குறித்தும் மதம் சார்ந்த யூதர்களின் மனப்பான்மையை குறித்தும் சொன்னார். அவர், அவர்கள் சரீரத்தின்படி சர்ப்பத்தின் வித்துக்கள் என்று சொல்லவில்லை. காயீன், ஆபேலுக்கு விரோதமான வெளிப்பாடு உடையவனாயிருந்து ஆபேலைத்



**மூல பாவம்**

கடைசி முதற்பிறப்பு லாமேக்கு ஆகும். லாமேக்கு இரண்டு மனைவிகளான ஆதாள், சில்லாள் அவர்களுக்கு மூன்று குமாரர்களும், ஒரு குமாரத்தியும் இருந்தனர். யாபால் லாமேக்கின் முதல் பிறப்பாக இருந்தான். "ஆதாள் யாபாலைப் பெற்றாள், அவன் கூடாரங்களில் வாசம்பண்ணகிறவர்களுக்கும் மந்தை மேய்க்கிறவர்களுக்கும் தகப்பனானான்" (ஆதி 4:20). இந்த வசனம், நமக்கு யாபாலுடைய வாழ்க்கை அமைப்பினால், ஆதாள் ஒரு சேத்துக்குரிய வம்சமாய் இருந்திருக்க வேண்டுமென்று, நம்மை நிச்சயமாக புரிந்து கொள்ளும்படி வழிநடத்துகின்றது. யாபாலின் அதிகாரப்பூர்வமான சேத்தின் குணாதிசயங்கள் ஆதாள் மூலமாக வந்திருக்கக் கூடும். அதற்கு எதிரிடையாக ஆதாளின் இரண்டாவது மகனான யூபால், காயீனின் அதிகாரப்பூர்வமான குணாதிசயங்களை சுதந்தரித்திருந்தான். "...அவன் கின்னரக்காரர் நாகசுரக்காரர் யாவருக்கும் தகப்பனானான்" (ஆதி 4:21). லாமேக்கின் மூன்று குமாரர்களும், சேத் வம்சத்தில் வந்த ஏனோக்கு தோன்றின சமயத்திலிருந்த சந்ததி ஆவார்கள். அக்கிரமமும், பொல்லாப்பும் நிறைந்த, இந்த இரண்டு ஜனங்களும், கலப்புத் திருமணம் செய்யத் தொடங்கினார்கள். அச்சமயம், தேவன் ஏனோக்கை அவர்களுக்கு விரோதமாய் தீர்க்க தரிசனம் உரைக்க எழுப்பினார்).

தேவன், நீதிமான்களையும், அக்கிரமக்காரர்களையும் ஒரே மாதிரியாக நடத்துவதில்லை. (ஆதி 18:23 சங் 1:5,6). ஆதலால், தேவனுடைய நியாயத்தீர்ப்பு ஊற்றப்படுமுன்னே, சுத்தமான நீதியுள்ள ஆதாமுடைய இரத்தத்தினால் பிறந்த முதற் பிறப்புக்களனைத்தும், பொல்லாப்பு நிறைந்த உலகத்தைவிட்டு கடந்துபோக நேர்ந்தது. 'மெத்தூசலா' ஜலப்பிரவாகத்திற்கு முன்பதாக மரித்த கடைசியானவரும், மூத்தவரும், பரிசுத்தமுள்ளவருமாயிருந்தவர்.

நோவா, ஒரு பரிசுத்த நீதியுள்ள முதல் பிறப்பாய் இருந்தாலும், உலக பிரகாரமாக இருந்த ஒரு ஸ்தீரியுடன், அந்நிய நுகத்தில் திருமணம் செய்தபடியினால் அவன், **ஜலப்பிரவாகத்தின் உபத்திரவத்துக்குள்** செல்லவேண்டியதாயிற்று என்று கூறலாம். ஆனாலும், தன் குடும்பத்துடன் ஜலப்பிரவாகத்திலிருந்து தப்பிக்க, தேவனுடைய கண்களில் கிருபைப் பெற்றவனாய் இருந்தான். (ஆதி 6:8-9) ('புத்தியில்லாத கன்னிகைகள் சீக்கிரம் வருகின்ற மகா உபத்திரவ காலத்தின் அலையில் பயணம் செய்கின்றவர்கள்' என்பதற்கு 'நோவா' ஒரு முன்மாதிரியாக இருக்கின்றான்)


## முடிவு

**தேவனுடைய மூலத் திட்டத்தில்,** ஆதாமும், ஏவாளும் தேவகுமாரர்களையும், குமாரத்திகளையும் தேவனுக்காக உற்பத்தி செய்ய

வேண்டியதாய் இருந்தது. (ஆதி 1 26-28, 2 21-24). ஆனால், **சாத்தான்** ஏவாளை வஞ்சிக்கும்படி **சர்ப்பத்தை** அனுப்பினான். அவன் தன்னுடைய **பொல்லாத அடிச்சுவடுகளை** சர்ப்பத்தின் வித்துக்குள்ளாக **நுழைத்து குருதிக் கோட்டை** புரட்டினான். அது ஏவாளின் முட்டைகளோடு ஒன்றிணைந்து 'காயீனை', அவனுடைய மகனாய் உருவாக்கியது. **காயீன் முழுமையான சாத்தானின் ஆவியின் குணாதிசியங்களையும், சர்ப்பமாகிய மிருகத்தின் குணாதிசயங்களையும், (இச்சையோடும், மாம்சரீதியாகவும்) சுமந்திருந்தான்.** (பின்னிணைப்பு 8-ம் பக்கம்), ஆகவே, **இரண்டு இரத்தக் கோடுகள்** அங்கே முன்னிலைப்படுத்தப்பட்டது. (காயீன், ஆபேலுக்கு பதிலாக இருந்த சேத்; சேத் என்றால் பதிலாக) இந்த இரண்டு குருதிக் கோடுகளும், ஜலப்பிரவாகக் காலமட்டும் வேறுபட்ட நிலையில் இருந்தது. சேத்தின் வம்சத்தில் நோவா, கடைசி முதற்பிறப்பாய் இருந்தான். அவன் மனைவி காயீனின் வம்சம் (அல்லது) கலப்பிடப்பிறப்பாய் இருந்து அவனுக்கு மூன்று பிள்ளைகளைப் பெற்றாள். யாபேத், காம், சேம் இம்மூவரும் நோவாவின் குமாரர்கள். இவர்களாகவே பூமியெங்கும் ஜனங்கள் பெருகினார்கள் (ஆதி 9:19)

### ஆகவே, மூலப் பாவம் என்றால் என்ன?

**சாத்தான் சர்ப்பத்தை** தன் உடைமையாக்கி அவனுடைய **வித்தை** ஏவாளுக்குள் விபச்சாரத்தினால் நட்டினான். இதன் வழியாக அவன் மனித குலத்துக்குள் தன்னுடைய பொல்லாத பாவ அடிச் சுவடுகளை நுழைத்தான். இந்த **சாபத்தின் வித்தினால்** மனிதகுலம் கறைபடுத்தப்பட்டது. சிருஷ்டிகராகிய தேவனோடு கூட இருந்த உறவு, ஆவிக்குரியரீதியிலும், மாம்சத்திற்குரியரீதியிலும் அடிமட்டத்திற்குத் தள்ளப்பட்டது. இது தான் **மூலப்பாவம்.** எல்லா மனிதர்களும், சாத்தானின் அடிச்சுவடுகளை, **நோவாவின் மூன்று குமாரர்கள் மூலமாக இந்த நாளில் பெற்றுக் கொண்டார்கள்.**







### 4. இராட்சதர்கள்

(Hebrew : NEPHILIM – நெப்பிலிம்) ஆதி : 6

அநேக வேத பண்டிதர்கள், பூமியின் ஸ்திரீகளும், விழுந்து போன தூதர்களும் ஒன்று சேர்ந்ததினால் உண்டானவர்கள் அந்த இராட்சதர்கள் என்று கருதுகின்றனர். எப்படியோ, விழுந்து போன தூதர்கள், பெண்களுடன் ஒன்று சேர்வதற்கு தங்களை ஆண்களுக்குள்ளாக நுழைத்துக் கொண்டது போலவும் அல்லது எப்படியோ தங்களை மனிதர்களைப் போல மாற்றிக் கொண்டதாக போதிக்கின்றனர். ஆனால் அவர்கள் கொடுக்கின்ற வசனங்கள், அவர்கள் சொல்லுகின்ற கருத்தை நம்பவைப்பதற்கு உறுதியான சான்றிதழ் போதுமானதல்ல. "தேவகுமாரர்கள்" என்கிற இந்தப் பட்டம் வேத வசனத்திலே எவ்விடத்திலும் தூதர்களை காண்பிக்கக் கூடியதல்ல. எப்படி திரித்துவக் காரர்கள் மத் 28:19-ன் ஒரே வசனத்தை தங்களுக்கு ஆதரவாக வைத்துக் கொண்டு, புதிதாய் வந்தவர்களுக்கு பிதா, குமாரன், பரிசுத்தாவியின் நாமத்தினால் ஞானஸ்நானத்தைக் கொடுப்பது போல, இந்த வேதபண்டிதர்கள் யோபு 1:6ல் சொல்லப்பட்ட அந்த ஒரே வசனத்தை பயன்படுத்துகிறார்கள். "தேவ குமாரர்கள்" என்பது தேவ தூதர்களைக் குறிக்கின்றது என்று அந்தக் கோட்பாட்டை ஆதரவாக எடுத்துக் கொள்கிறார்கள். அநேக ஜனங்கள் இந்த வசனத்தை தவறாக பயன்படுத்தி, வியாக்கியானப்படுத்தி ஏதோ தூதர்கள் சடுதியாய் ஒருநாள் பரலோகத்திலே தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பு வந்து நின்றது போல முடிவு செய்கின்றார்கள். யோபு 1:6 என்பது சாதாரணமாக வாசித்து புரிந்து கொள்ளும் விஷயமல்ல. (யோபு 2:1, 38:7). அநேக வேத பண்டிதர்கள், பூமியிலுள்ள ஸ்திரீகளும் தூதர்களினிமித்தம் உருவாக்கப்பட்ட வழி தோன்றுதலாய் இருக்கின்ற **இராட்சதர்களை** அழிக்கவே ஜலப்பிரவாகம் உண்டானது என்று போதிக்கின்றனர். அதுமட்டுமின்றி, இந்த விழுந்து போன தூதர்கள் தங்களுடைய பாவத்தினாலே "மாறுபட்டு பாலியல்களுக்குள்ளே" ஈடுபட்டு தூதர்கள் தங்களால் பூமிக்கு இராட்சதர்களைக் கொண்டு வந்ததினிமித்தம் தேவனால் காவலில் வைக்கப்பட்டு நியாயத்தீர்ப்புக்கென வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று கருதுகின்றனர். (யூதா 6, IIபேதுரு 2:4) இந்தக் கருத்து மெய்யாக இருந்திருக்குமானால், **பேழைக்குப் பிறகு எப்படி இராட்சதர்கள்** இருந்திருக்க முடியும்?

தேவகுமாரர்கள் என்கிற பட்டம் தேவனுக்கும் மனிதருக்கும் உண்டாயிருக்கும் ஒரு விசேஷித்த உறவினால் அவருடைய பிள்ளைகள் என்பதைக் காண்பிக்கின்றது. சேத்துக்குரிய ஜனங்கள் அப்படிப்பட்டவர்களாய் இருந்தார்கள், "**அப்பா**", "**மகன்**" என்கிற பட்டம் வெறும் ஒரு **உறவை** மாத்திரம் காண்பிக்கிறதல்ல, **உற்பத்தி செய்யும்** தன்மையையும் காண்பிக்கிறது. "பலுகிப் பெருகி..." ஆனால், தேவதூதர்கள்

## 3. சேத்தின் சுத்தமான முதல்பிறப்பின் பட்டியல்

ஆதாம் மற்றும் ஏவாள் ⟶ ஆபேல் (காயினால் கொலை செய்யப்பட்டான்)

↘

**சேத்** + தங்கை

**ஏனோஸ்** + சேத்தின் வம்சவழியின் மனைவி

**கேனான்** + சேத்தின் வம்சவழியின் மனைவி

**மகலாலெயேல்** + சேத்தின் வம்சவழியின் மனைவி

**யாரேத்** + சேத்தின் வம்சவழியின் மனைவி

**ஏனோக்கு** + சேத்தின் வம்சவழியின் மனைவி

**மெத்தூசலா** + சேத்தின் வம்சவழியின் மனைவி

**லாமேக்கு** + சேத்தின் வம்சவழியின் மனைவி

**நோவா** + காயினின் வம்சவழியின் மனைவி , கலப்பிட மனைவி

சுத்தமான சேத்தின் கடைசி முதல் பிறப்பு → நோவா

3 குமாரர்கள் — கலப்பிட வித்துக்கள் — கலப்பிடங்கள்

↓ யாப்பேத் ↓ காம் ↓ சேம்

அதனால், ஜலப்பிரவாகத்திற்குப் பிறகு தேவன், மனுஷஜாதியான சகல ஜனங்களையும் அவர் **ஒரே இரத்தத்தினாலே** தோன்றப்பண்ணி, பூமியின்மீதெங்கும் குடியிருக்கச்செய்து, முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார்.-(அப் 17:26) (அதாவது, ஒரே **குருதிக் கோட்டில்** [வம்சங்கள்] நோவாவினாலும், தன் மனைவியினாலும்).

தன்னுடைய பெரிதான திட்டத்தில் உலகத் தோற்றத்திற்கு முன்பதாக நியமிக்கப்பட்ட தேவனுடைய சித்தம் இவரால் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது. "அதேனென்றால் சிருஷ்டியானது அழிவுக்குரிய அடிமைத்தனத்தி-னின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுடைய பிள்ளைக்குரிய மகிமையான சுயாதீனத்தைப் பெற்றுக் கொள்ளும் என்கிற நம்பிக்கையோடே, அந்தச் சிருஷ்யானது சுய இஷ்டத்தினாலே அல்ல, கீழ்ப்படுத்தினவராலேயே மாயைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது" - (ரோமர் 8:20,21).





# சர்ப்பத்தின் வித்தின் உபதேசம்

"அப்பொழுது தேவனாகிய கர்த்தர் **சர்ப்பத்தைப்** பார்த்து: நீ இதைச் செய்தபடியால் சகல நாட்டு மிருகங்களிலும் சகல காட்டு மிருகங்களிலும் சபிக்கப்பட்டிருப்பாய், நீ உன் வயிற்றினால் நகர்ந்து, உயிரோடிருக்கும் நாளெல்லாம் மண்ணைத் தின்பாய்; உனக்கும் ஸ்திரீக்கும், **உன் வித்துக்கும்** அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார்" (ஆதி 3:14-15).

### மிருகங்களின் மேல் மனிதனின் ஆளுகை

ஆரம்பப் புஸ்தகமாகிய ஆதியாகமம், வானம், பூமியின் சிருஷ்டிப்பைக் குறிக்கிறது. தேவனுடைய சிருஷ்டிப்பில் மனிதன் கடைசியாக இருந்தான் மற்றும் மனிதன் தேவசாயலிலும், ரூபத்தின்படியேயும் சிருஷ்டிக்கப் பட்டான். தேவகுமாரனாகிய ஆதாமை "பலுகிப் பெருகி, பூமியை நிரப்பு, அதை ஆண்டு கொள் என்று" சொன்னது மட்டுமன்றி, ஆனால், பூமியின் மேலுள்ள ஜீவராசிகளையும் அவன் ஆளுகை செய்ய வேண்டும் என்று தேவனால் பொறுப்புக் கொடுக்கப்பட்டிருந்தான். ஆதலால், தேவனுடைய எல்லா சிருஷ்டிப்பிலும் ஆதாம் உயர்ந்தவன் என்று உணர்கிறோம். (ஆதி 1:26-28)


### உற்பத்தி பிரமாணம்

எல்லா ஜீவராசிகளும், அது தாவரங்கள் அல்லது மிருக ஜீவனாயிருந்தாலும், **தங்கள் ஜாதியின்படி விதையை பிறப்பிக்க வேண்டுமென்று** தேவன் **கட்டளையிட்டதை** ஆதி 1:11-12 மற்றும் 24-ன் படி நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆகவே, இரண்டு வேறுபட்ட மிருக ஜாதிகளைக் **கலப்பிடம்** செய்வது **தேவனுடைய உற்பத்தி பிரமாணத்திற்கு விரோதமான** செயலாகும். (இந்த தேவனுடைய பிரமாணத்தை மனதில் வைத்துக் கொள்ளுங்கள். அதன் பின்பதாக இன்று இருக்கும் எல்லா மனிதர்களும், மனித ஜாதியும், சர்ப்ப ஜாதியும், கலப்பிடம் ஆனதின் நிமித்தம் கொண்டுவரப்பட்ட பாவம் ஏன், எப்படி கடந்து வந்தது என்பதை புரிந்து கொள்ளமுடியும்).

### உயர்ந்த இயற்கை விருட்சங்களும் உணவுக்கு நல்லது

எல்லாவற்றையும் தேவன் சிருஷ்டித்ததினால் முதலாவது ஓய்வுநாளில் இளைப்பாறினார். தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின்

மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார்? மனுஷன் ஜீவாத்துமாவானான் (ஆதி 2:7). அதன் பின்பு, தேவன் ஆதாமை ஏதேனில் உள்ள ஒரு தோட்டத்தில், அதைப் பண்படுத்தும்படி வைத்தார். ஆதாம் புசிக்கும்படி, **நிலத்திலிருந்த எல்லா விருட்சங்களிலும்** நல்ல உணவை வளரும்படி தேவன் செய்தார். வேறு **இரண்டு விருட்சங்களும் குறிப்பிடப்பட்டுள்ளது.** அவைகள் **'ஜீவவிருட்சங்களும்'**, **நன்மை தீமை அறியத்தக்க விருட்சங்களும்** ஆகும். **மாம்ச சிந்தையோடு** ஜனங்கள் இந்த **இரண்டு விருட்சங்களும்,** இயற்கை கனிதரும் விருட்சங்கள் என்று **மாம்சீக வியாக்கியானத்தைக்** கொடுப்பார்கள். ஆனால், நன்மை-தீமை அறியத்தக்க கனி ஒரு இயற்கை விருட்சமாக இருந்திருக்குமானால், ஆதி 2:9-ல் தேவன் கூறின அவருடைய சொந்த வார்த்தைக்கு **முரண்பாடாக** இருந்திருக்கும். **கனிகொடுக்கிற எல்லா விருட்சங்களும் புசிப்பதற்கு நல்லதாய் இருந்தது.** ஆகவே, ஜீவ விருட்சமும், நன்மை-தீமை' அறியத்தக்க விருட்சமும் இயற்கையானதாய் இல்லாமல் வேறொன்றாய் இருந்தது. ஏனெனில், அவைகள் **நிலத்திலிருந்து** வளரவில்லை. (ஆதி 2:9).



**தோட்டத்தில் நடந்த சம்பவத்தின் மாம்ச வியாக்கியானம்**

## மாம்சீகவியாக்கியானம்

மாம்சசிந்தையுடைய ஜனங்கள் தங்களுடைய மாம்ச வியாக்கினங்களை தனிப்பட்டக் கருத்தாகவும், சபையின் உபதேசமாகவும், மனிதர்களின் பாரம்பரியங்களாகவும் (அல்லது) ''எனது சபை வேறு வழியை போதிக்கிறது'' என்பதை அஸ்திபாரமாக வைத்துள்ளனர். தேவ வார்த்தையின் இரகசியத்தைப் புரிந்துகொள்ள, இப்படிப்பட்ட குழந்தைத்தனமாக சுபாவங்களை விட்டுவிட்டு கற்றுக்கொள்ள, முதிர்ச்சி உடையவர்களாய் இருக்க வேண்டும்.

## சொல்லியல்பை புரிந்து கொள்ளுதல்

நீங்கள் தயவாய் கவனிக்க வேண்டியவை என்னவென்றால், **(மூலப்பாவத்திற்குரிய உபதேசம்) சர்ப்பத்தின் வித்தின் உபதேசம்** என்பது, உருவாக்கப்பட்ட கதையோ, புராணக்கதையோ அல்ல. ஆனால், அது சரித்திரப்பூர்வமான சான்றிதழ்கள் உடையதாய் இருக்கின்றது. அப்படி, குறிப்பிட்ட சொற்றொடராகிய இவைகள் எல்லாம், வேதத்தில் உள்ள ஒரு குறிப்பிட்ட சம்பவத்திற்கு, நம்மை திசை திருப்பக்கூடியதாய் இருக்கிறது. ஒரு





மானால், பின் ஏன் நிலமாக பண்படுத்தப்பட வேண்டியதாயிருந்தது? இந்தக் கேள்வி ஒரு சிலரின் மனதிலே இருக்கின்றது.

வேதமானது ஒரு பூரணப்பட்ட பூமியையும், அதிலே இளைப்பாறும் ஒரு தோட்டத்திலே, ஆதாமும், தன் மனைவியும் சாவகாசமாக அதை சுற்றி வந்து தங்கள் பொழுதைக் கழித்துக் கொண்டு, ஒன்றும் செய்யாமல், நித்தியமாய் சுகபோகமாய் வாழும் பார்வையை நமக்கு கொடுக்கவில்லை. ஆகமட்டும், மனிதன் பாடுபடுவதற்கு அவசியமில்லாமல் இருந்தாலும் தேவன் வேலை செய்வது போல (தொடர்ந்து வேலை செய்து வருகிறார்) அவனும் வேலை செய்ய வேண்டியதாய் இருந்தது. அவன் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி சகல சிருஷ்டிகளையும் ஆண்டு கொள்ள வேண்டும் என்று கட்டளையிடப்பட்டது.

வேத வசனங்களில் தேவன் ஏழாம் நாளிலே தமது எல்லா வேலையிலிருந்தும் ஓய்ந்திருந்தார் என்று வாசிக்கின்றோம். பிர 3-ம் அதிகாரம் எல்லாவற்றிக்கும் ஒரு காலமுண்டு என்று சொல்லுகிறது. சூரியனானது எல்லா காலங்களையும் ஒழுங்குபடுத்தக் கூடியதாயிருக்கிறது. நமது ராஜாவாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின், வருகின்ற **ஆயிர வருட அரசாட்சியில்** தெரிந்து கொள்ளப்பட்ட, அவருடைய மணவாட்டிக்கு (மனைவி) வேலையிருக்கும். **புதிய வானம், புதிய பூமியிலும்** எல்லோருக்கும் வேலை இருக்கும். **தன்னுடைய சிருஷ்டிப்பின் திட்டத்தில், வேலை என்பது எப்பொழுதும் பங்கு பெற்றிருக்கிறது.**

ஆதாமுக்கு பூமியை கீழ்ப்படுத்துவதற்கு கட்டளையிடப்பட்டது. பூமியானது கீழ்ப்படுத்தப்படுவதற்கு முன்பதாக, அதைப் பண்படுத்த வேண்டியதாயிருந்தது. தேவனுடைய குமாரனாயிருந்த ஆதாம் பூமியிலுள்ள அனைத்து சிருஷ்டிகளின் மேலும் அதிகாரமுடையவனாயிருந்தான். பூமியை நேரடியாக அவன் பண்படுத்தும்படி சிருஷ்டிக்கப்படவில்லை. அவன், தேவனுடைய பிள்ளையாயும், மகனுமாய் இருக்கின்றான். பூமியை பண்படுத்துவதற்கு தனக்கு அடங்கியுள்ள சர்வ ஜாதியும் சிருஷ்டிக்கப்பட்டது. ஆனால், ஆதாமின் மேல் பாவம் சுமத்தப்பட்ட போது, அவன் தன்னுடைய அதிகாரத்தையும், தன் எல்லா சலுகைகளையும் இழந்தான். தன்னுடைய சர்வ ஜாதியின் வேலைக்காரனையும் இழந்தான். இப்பொழுது, தனது உணவைப் பெற்றுக்கொள்வதற்கு ஆதாம் தாமே நிலத்தை பண்படுத்துவது மட்டுமன்றி, தேவனுடைய சாபத்தினால் நிலத்தில் முளைத்த முட்களுக்கும், குறுக்களுக்கும் எதிராகவும் பண்படுத்த வேண்டியதாயிற்று.

(யோவான் 1:14, அப் 13:33) ஆகவேதான், மரியாளின் முட்டைகள் எந்தவிதத்திலும் சேராதபடிக்கு **பாவமில்லா சுபாவத்தை** கிறிஸ்து இயேசுவின் சரீரத்தில் கொண்டுவரும்படி ஒரு தனிப்பிறப்பை எடுத்தது மெய்யான வெளிப்பாடாய் இருவருக்கும் உள்ளது. அந்த முழு மரபணுக்களும் தேவனுக்கு மாத்திரமே சேர்ந்ததாயிருக்கிறது. அதில் கொஞ்ச அளவுகூட மரியாளின் விழுந்து போன சுபாவத்திற்கு உண்டானதல்ல.

ஆதி 3-ல் சொல்லப்பட்ட **இரண்டு வித்துக்களையும்,** ஏவாளும் சர்ப்பத்தின் உறவையும் **தொடர்புக்குரிய** விளக்கத்தை நாம் மறைக்கவோ, தவிர்க்கவோ முடியாது. அதில்தான், **மூலப் பாவத்தின்** உண்மையான உபதேசத்தின் வெளிச்சத்தைப் பெறுகின்றோம். அதுவே, மனிதனின் வீழ்ச்சியைக் கொண்டு வந்தது. ஸ்திரீயின் பிள்ளைப் பேற்றிலே உண்டாகும் **பிரசவ வேதனையிலும்** மற்றும் தன் **ஆசை** புருஷனைப் பற்றியிருந்து, இனி அவன் அவளை ஆண்டு கொள்ளுவான் என்ற விஷயத்தைக் குறித்து ஆவியினால் எழுதப்பட்டதை நாம் இழக்க முடியாது. அவருடைய தெய்வீக நியாயத்திர்ப்பிலே, அந்தக் குற்றத்திற்கான தண்டனையை தேவன் கொடுத்தார். பிள்ளைப் பெறுவதின் **வேதனையை** ஏன் தேவன் கூட்டினார்? **"கர்ப்ப வேதனை"**, **"உன் ஆசை"** என்கிற வார்த்தைகளை பயன்படுத்துவதின் நோக்கம் என்ன? ஆவியின் பகுத்தறிதல் இருக்கக்கூடிய எவனும் ஆதி 3-ம் அதிகாரம் முழுவதும் எதைப் பற்றி சொல்லியிருக்கிறது என்று அவனால் பார்க்கவும், புரிந்து கொள்ளவும் முடியும்.

இக்காலத்து நவீன பண்டிதர்களுக்குள் பெரிதான ஆவிக்குரிய குருட்டாட்டம் இருக்கின்றது. ஸ்திரீயின் வித்து (வாக்குத்தத்த வித்தாய் இருந்தது) தீர்க்கதரிசனமாக இயேசு கிறிஸ்துவைப் பற்றியது என்று அவர்கள் ஒப்புக் கொள்கிறார்கள். ஆனாலும், சர்ப்பத்திலிருந்து வருகின்ற வழிதோன்றலைப் புறக்கணிக்கின்றார்கள் (அவர்கள் **நிலையாய் நிலையற்று** இருக்கின்றார்கள்). தேவனுடைய வார்த்தை தெளிவாக ஸ்திரீக்கும், சர்ப்பத்துக்கும், **இருவருக்கும்** தங்கள் தங்களுடைய வித்துக்குள் இருக்கின்றது என்று சொல்லப்பட்டு இருக்கும்போது சர்ப்பத்துக்கு வித்து இருந்ததை எப்படி இவர்களால் புறக்கணிக்க முடியும்?

## 2. நிலத்தை பண்படுத்துவது

ஏதேன் தோட்டம், அது இளைப்பாறும் **பரதீசாய்** இருந்திருக்கு-





பக்கம் சத்தியத்தை மறைப்பதினாலும், மறுபக்கத்தில் வித்தியாசப்பட்ட அடையாளங்கள் போன்ற பேச்சினாலும் (அல்லது) வார்த்தைகளினாலும் சத்தியத்தை வெளிப்படுத்துவது தேவனுடைய வழியாகும்.

ஆதி 2:9-ன் இரண்டாம் பாகத்தை பாருங்கள். "...தோட்டத்தின் நடுவிலே ஜீவவிருட்சத்தையும், நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தையும் பூமியிலிருந்து முளைக்கப்பண்ணினார்". இது உங்களுடைய கவனத்தை திருப்பக்கூடியதாய் வெளிப்படும் சொல்லாக இருக்கின்றது. இந்தக் குறிப்பிட்ட சொற்றொடர் நாம் புரிந்துகொள்வதற்கு பலவிதமான இயல்புகளையும் அத்துடன் தொடர்புடைய சொல்லியல்புகளையும் நாம் ஆராய்ந்து அறிய வேண்டும். ஆகவே, சர்ப்பத்தின் வித்தின் உபதேசத்தைப் புரிந்து கொள்ள, முதலில் கீழ்காணும் சொல்லியல்புகளாகிய 'ஜீவவிருட்சம்', நன்மை-தீமை அறியத்தக்க விருட்சம்', 'தோட்டத்தின் நடுவே, 'புசி' மற்றும் 'கனி' போன்ற வார்த்தைகளுக்கு அர்த்தங்களை அறிய வேண்டும்.

'**விருட்சம்**' என்ற வார்த்தை வேதத்தில் பல பொருள்களை வித்தியாசப்படுத்த **அடையாளமாகப்** பயன்படுத்தப்படுகிறது. இதை நம் ஆண்டவராகிய இயேசு **தேசத்திற்காய்** பயன்படுத்தினார் (லூக் 21-29) ஆனால், அவர் பெத்சாயிதாவிலே குணமடைய செய்த **குருடனுக்கு** அதை பயன்படுத்தினார் (மாற்கு 8-24) பழைய ஏற்பாட்டிலே ஒரு **ராஜாவுக்கு** அது பயன்படுத்தப்பட்டுள்ளது. (தானி4-10) **ஞானம்** (நீதி 3-18) மற்றும் அநேகம் உள்ளன. இங்கே ஆதி 2 மற்றும் 3-ல் '**விருட்சம்**' என்கிற வார்த்தை **இரண்டு** வித்தியாசப்பட்ட காரியங்களுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஒரு குறிப்பு 'பூமியிலிருந்து முளைத்த'-இயற்கைவிருட்சங்கள் மற்றும் இன்னொரு குறிப்பான "தோட்டத்தின் நடுவே" என்பவை, ஆனால் அவைகள் என்ன? ஆகையால், வேதத்தில் உள்ள எல்லா விருட்சங்களும் இயற்கையான விருட்சங்கள் அல்ல, மற்றும் ஒரே மாதிரியான விருட்சங்களும் **அல்ல.**

அதேபோல் '**தோட்டம்**' என்ற வார்த்தை '**இயற்கைத் தோட்டம்**' என்று பொருள்பட அவசியம் இல்லை. அது **ஆத்துமாவை** அடையாளம் காணக்கூடியதாய் இருக்கின்றது. (எரே 31-12) **சந்நிதி** (ஏசா 65-3) அல்லது **மனிதனுடைய சரீரம்** (உன்னதப்பாட்டு 4-8) 'தோட்டம்' என்பதற்கு இயற்கையாகவோ, அடையாளமாகவோ (அல்லது) ஆவிக்குரிய விதத்திலோ அதன் அடிப்படை அர்த்தத்தின் **உள்ளடக்கம்** என்பது **1.விதையானது நட்டப்பட்டு தன்னைத்தான் உற்பத்திசெய்யும் இடமே**; **2.பொதுவான மகிழ்ச்சிக்கு பயிர்சாகுபடி செய்யும் இடம்.** ஏதேன் தோட்டம் ஒரு இயற்கைத் தோட்டம். ஆதி 2-9-ல் கூறப்பட்டுள்ளத் தோட்டம் அந்த ஏதேன் தோட்டம் அல்ல.

'**புசி**' என்ற வார்த்தை அநேகருக்கு பொதுவாக, உணவை வாயின் மூலம் உட்கொள்ளுவது' என்று அர்த்தமாம். '**புசிப்பது**' என்றால் '**பங்குபெறுவது**' (நீதி 30-20) அந்த வார்த்தைக்கு நல்ல அர்த்தத்தைக் கொடுக்கின்றது. அது ஒரு விபச்சார ஸ்திரீ, விபச்சாரத்தில் ஈடுபட்டிருந்தாள் மற்றும் அவள் ஒரு தீமையும் செய்யவில்லை என்று அவள் சொல்கிறதை சொல்கிறது (அது அவள் சொந்த புருஷனில்லாமல் வேறொரு மனிதனோடு சயனித்தாள்) (சங் 127:2 நீதி 1:31, 13:2, எரேமியா 15-16, ஓசியா 10-13, யோவான் 6-56 இவைகளை வாசிக்கவும்).

**கவனிக்கவும் :**

'புசி' என்ற வார்த்தைக்கு மற்ற செயல்பாடுகளுக்கு, எபிரேய பாஷையிலே அதின் அர்த்தம் 'சயனிப்பு (ஸ்ட்ராங்ஸ் கன்காடன்ஸ் ஆதி 3-3, '**நகா**' என்ற சொல் மூல பாஷையிலே 'தொடக்கூடாது' என்று சொல்லப்பட்டுள்ளது. ஆதி 2:17ல் தேவன் ஆதாமுக்கு சொன்னதோடு ஒரு வார்த்தையை 'ஏவாள்' கூட்டுகிறாள். '**நகா**' என்றால் ஒரு ஸ்திரீயோடு **சயனிப்பது)** உண்மையாக 'உணவு என்ற வார்த்தை எபிரேய மொழியிலே ('மாக்கள்') என்கிற வார்த்தை, 'புசி' என்ற வாாத்தையோடு இணைக்கப்பட்டுள்ளது மற்றும் ஆதி 3-6ல் இந்த இரண்டு வார்த்தைகளும், ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்டு மறைப்பதற்கும், அதே நேரத்தில் மூலப் பாவத்தைக் கொண்டுவந்த அந்தக் கிரியை இன்னது என்ற இரகசியத்தை வெளிப்படுத்துகிறது.

வேதத்தை வாசிக்கின்ற ஏறக்குறைய எல்லோரும் 'கனி' என்கிற வார்த்தை 'ஆப்பிள்' மற்றும் 'பேரிக்காய்' போன்ற **இயற்கை** பழமாகும். எப்படியிருந்தாலும், வேத வசனத்தின்படி '**கனி**' என்ற வார்த்தை (எபிரேய பெரி) இயற்கை கனியாய் மாத்திரம் அழைக்கக்கூடியதல்ல (ஸ்டராங்ஸ் கன்காடன்ஸ்), ('கனி') (உபாகமம் 28-4, சங் 127:3, நீதி 18:20, லூக் 1:42 வாசியுங்கள்) ஆதலால் 'கனி' என்கிற வார்த்தை ஒரு போதும் 'இயற்கை கனிக்கு' **சொல்லப்படமாட்டாது**.

இப்பொழுது சர்ப்பத்தின் வித்தின் உபதேசத்திற்கும், பின்பு மனிதன் தன் ஆதி மேன்மையிலிருந்து விழுந்தான் என்று பின்னணி கிடைத்துள்ளது.

## சர்ப்பம்-நிமிர் நேரான சிருஷ்டி

"தேவனாகிய கர்த்தர் உண்டாக்கின சகல காட்டு ஜீவன்களைப்பார்க்கிலும் சர்ப்பமானது தந்திரமுள்ளதாயிருந்தது..." (ஆதியாகமம் 3:1)

'சர்ப்பம்' என்கிற வார்த்தை எபிரேய வார்த்தையாகிய 'நக்காஷ்' லிருந்து தோன்றியது. அதன் பின்பு அது கீழ்காணும் அர்த்தங்கள் உடையதாய் இருக்கிறது. 'சீரு', அதாவது 'மந்திரத்தை மறைவாக பேசுதல்', 'சூனியக்காரன்'- சூனியத்தைப் பயன்படுத்துவது' அனுபவத்தினால் கற்றுக்





## பின்னிணைப்புகள்

1) **ஆதி 3:15-லுள்ள இரண்டு இயற்பியல்களும், இயற்கை வித்துகளும்.** "வித்து" என்கிற வார்த்தை எபிரேய மொழியில் "ஜேரா" என்று சொல்லப்பட்டுள்ளது. அதின் அர்த்தம், "வித்து, கனி, செடி, சந்ததி" ஆகும். மற்றும் அது "ஜாரா" என்னும் வார்த்தையிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. இதின் அர்த்தம் "பெறு", "கருத்தரிப்பு" இதே வார்த்தை கிரேக்க மொழியில் "ஸ்பர்மா", இதன் அர்த்தம் "விதைக்கப்பட்டவை ஜீவ அணு, பிள்ளைகள், வழிமரபு, சந்ததி, பின்சந்ததி, வழி தோன்றல்" ஆகும். (Refer : Lamsa Translation, "Posterity" Amplified Translation, New Berkely Version, "offspring")


விஞ்ஞான பூர்வமாக, ஒரு ஸ்திரீக்கு வித்து இருக்க முடியாதது என்பது ஏற்றுக் கொள்ளப்படத்தக்க விஷயம். ஆனாலும், ஆதி 3:15 நமக்கு சொல்லக்கூடிய "உன் வித்து" என்பது சர்ப்பத்தினாலே தந்திரமாய் நுழைக்கப்பட்டதாயிருந்தது. ஆனால், ஆதாமினாலே (ஸ்திரீயின் வித்து) அவள் கர்ப்பம் தரிக்கப்பட்டாள். ஏவாள், ஆதாமின் சரீரத்திலிருந்து வந்தபடியினால் அவள் ஆதாமின் பங்காக இருந்தாள். ஆகவே, ஆதாமுடைய வித்து உரிமையோடு ஏவாளின் வித்தாயிருந்தது. அது ஆபேல் ஆதாமில் உண்டாகாத காயீன், அவளுடைய வித்தாக எவ்விதத்திலும் இருந்திருக்க முடியாது. எனவே, ஏவாள் கர்த்தரால் ஒரு மனுஷனை பெற்றேன் என்று மாத்திரமே சொல்ல முடிந்தது. (ஆதி 4:1) "பெற்றேன்" என்றால் "கிடைத்தது" ஆங்கிலத்தில் "Gotten". அதன் வேறு அர்த்தம் "Received". காயீன் சர்ப்பத்தின் வித்தாக இருந்தான். ஏவாளை வஞ்சிப்பதினால், சர்ப்பமானது ஆதாமின் தோட்டத்திற்குள் (உன் 4:12, 16, 5:1, 6:2) அனுமதியின்றி இயற்பியல் வித்தை நுழைத்தான். ஏவாளும நன்மைத்தீமை அறியத்தக்க கனியை புசித்ததினாலே, தனது கர்ப்பத்திலிருந்து மரணத்தின் கனியை உற்பவித்தாள்.

**கவனிக்கவும் :**

இயேசுகிறிஸ்து, மரியாளுக்கும், யோசேப்புக்கும் மாமிச உறவில் பிறந்தவரல்ல. இயேசுகிறிஸ்து கன்னி மரியாளினாலே **பிறந்தாரே** தவிர, மரியாளினால் **ஜெநிப்பிக்கப்படவில்லை** (மத் 1:16). யோசேப்பின் குமாரன் **எனப்பட்டார்** (லூக் 2:23). ஆனால், கர்த்தராகிய இயேசு நமது பரமபிதாவாகிய சர்வ வல்லமையுள்ள தேவனால் **ஜெநிப்பிக்கப்பட்டார்**.

வாசியுங்கள். அதற்குப் பின் தேவ ஆட்டுக்குட்டியின் **ஜீவனானது** அந்த விசுவாசியை **பூரணப்படுத்தும்படி திரும்புகின்றது.** ஆகவே, "மேலும் கிறிஸ்து உங்களிலிருந்தால் சரீரமானது பாவத்தினிமித்தம் மரித்ததாயும், ஆவியானது நீதியினிமித்தம் ஜீவனுள்ளதாயும் இருக்கும்"(ரோமர் 8:10).

"அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களை உயிர்ப்பித்தார். அவைகளில் நீங்கள் முற்காலத்திலே இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடியாகவும், கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியைசெய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவிக்கேற்றபடியாகவும் நடந்துகொண்டீர்கள். அவர்களுக்குள்ளே நாமெல்லாரும் முற்காலத்திலே நமது மாம்ச இச்சையின்படியே நடந்து, நமது மாம்சமும் மனசும் விரும்பினவைகளைச் செய்து, சுபாவத்தினாலே மற்றவர்களைப்போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம். தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே, அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார், கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள் (எபி 2:1-5).








கொள்வது. 'தந்திரம்' என்பது அறிவும், ஞானமும் என்பது ஆகும். ஒரு ஜீவனை குறித்ததான அறிவும், புரிந்து கொள்ளுதலும் உண்டு.

**சர்ப்பமானது, எல்லா மிருகங்களிலும் உயர்ந்த சிருஷ்டியாயும்,** ஆதாமுக்கு முன்பாக கடைசி சிருஷ்டியாய் இருந்தது. **எல்லா மிருகங்களிலும், பேசக்கூடியதாய் இருந்த ஒரே சிருஷ்டியாய் இருந்தது.** அந்த சர்ப்பம் இன்றும் இருக்குமானால், நிச்சயமாக இன்றும் பேசக்கூடியதாய் இருந்திருக்கும். சாத்தானால் பிடிக்கப்பட்டிருந்த 'கதரேனஸின் நாட்டிலிருந்த மனிதனைப் போல அவனால் பேசமுடிந்திருக்கும் என்று சிலர் வாக்குவாதம் செய்யலாம் (லூக் 8:26-33) அல்லது பிலேயாமோடு பேசுவதற்கு தேவன் பயன்படுத்திய கழுதையைப் போல, சாத்தானும் சர்ப்பத்தை பயன்படுத்தியிருப்பான் என்றும் சொல்லுகிறார்கள். (எண் 22:28-30). ஆனால், கவனிக்க வேண்டிய உண்மை என்னவென்றால், **சர்ப்பம்தான் ஏவாளை வஞ்சித்தது**. மற்றும் தேவன் சர்ப்பத்தை அல்லவா நியாயம் தீர்த்தார்?

சர்ப்பம் அதன் மூல நிலையில் இன்று இல்லை, ஏனெனில் அது சபிக்கப்பட்ட '**பாம்பாக**' மாற்றப்பட்டது - மிருக இராஜ்ஜியத்தில ஒரு கீழானதாய் இருக்கிறது. அவனின் மூல சிருஷ்டிப்பு பாம்புடன் சம்பந்தப்பட்டதாய் இல்லை. நாம் இப்பொழுதெல்லாம் சர்ப்பம் என்று சொன்னாலே பொதுவாக ஒரு நீளமாய், வளைந்து செல்லுகிற பாம்பையே கற்பனை செய்வோம்.

பாரம்பரிய வேதாந்தங்கள், சர்ப்பம் என்பது ஆரம்பத்திலே கால்களும், கைகளும் இராத ஒன்றாய், தன் வாலிலே நின்று கொண்டு இருந்ததாய் நம்பத்தக்கதாய் ஜனங்களின் சிந்தைகளை மரத்துப் போகச் செய்துள்ளது. ஒரு சிலர், அவன் மரங்களிலே வளர்ந்து, நகர்ந்து சென்று பாம்பாக இருந்ததாகவும், ஆனால், நிலத்தில் இருக்கவில்லை என்று துணிவாக மறைமுகமாக சொல்லப்படுகிறது. உலகத்தில் இருக்கும் கிறிஸ்துவத்தின் 'சபை அறிவில்' என்று சொல்லப்படுகிற அறிவற்றக் காரியங்களுக்கு மத்தியில், வேதம் தெளிவாக சர்ப்பத்தைப் பற்றி கூறுகிறது. '**சர்ப்பம்**' **ஆரம்பத்திலே நிமிர் நேரான சிருஷ்டியாய் இருந்தது** என்று கூறுகின்றது. தேவன் படைத்த மிருகங்களிலே, மனித குரங்கு உயர்வான இடத்தில் உள்ளன என்பதை அறிந்திருக்கிறோம். மற்றும், கவனிக்க வேண்டியது. அதற்கு இரண்டு கைகளும், இரண்டு கால்களில் நிற்பதை நாம் காண்கிறோம். சர்ப்பமானது சகல காட்டு மிருகங்களிலும் மிகத் தந்திரமானது என்று வேதம் சொல்லுகிறது. அவன் எல்லா மனித குரங்குகளுக்குள்ளும் மேலானவாகவும் ஆதாமினால் ஆளுகை செய்யப்பட்டனவாகவும் ஊரும் பாம்பு வகையை சேர்ந்தவனாக இருக்க முடியாது. ஏனெனில், பாம்புகள், மிருக இராஜ்ஜியத்தின் கீழானவைகளாய்

ஊர்வன இனத்தைச் சேர்ந்தவைகள்.

மிருகங்களில் கடைசியாகவும், ஆதாமுக்கு முன்பதாக சிருஷ்டிக்கப்பட்டதால், அது மனிதனுக்கு அடுத்த அணி வரிசையில், **ஏறக்குறைய பார்ப்பதற்கு மனிதனைப் போல இருந்தது**. மிருகங்களுக்கும், மனித ஜாதிக்கும் இடையில் 'காணாமல்' போன இணைப்பாக அவன் இருக்கிறான் என்று கூறலாம் (பின்னிணைப்பு 9 பாருங்கள்) அறிவியல் வித்தியாசப்பட்ட பூர்வ மனிதனை "நியாண்டர்தல்" மனிதன், "பீக்கிங்" மனிதன், "குரோ-மேக்னன்" மனிதன் etc... என்று பெயரிடப்பட்டுவைத்துள்ளது. ஆனால் அவன் ஆதாமுக்கு வேலைக்காரனாக இருக்கும்படி சிருஷ்டிக்கப்பட்டான். ஆதாமே அவனுக்கு **சர்ப்பம்** என்று பேரிட்டான். வேதம் சொல்கிறது, தேவன் சிருஷ்டித்த எல்லா சிருஷ்டிகளும் சர்ப்பம் உட்பட எல்லாம் நல்லதாயும், மிகவும் நல்லதாயுமிருந்தது. அவன் பார்ப்பதற்கு ஏறக்குறைய மனிதனைப் போல, உறவாடவும், பேசக் கூடியனவாயிருந்தாலும், ஆதாமைப் போல தேவ சாயலிலும், ரூபத்திலும் அது சிருஷ்டிக்கப்படவில்லை. சர்ப்பத்திற்கு ஆவிக்குரிய 'ஆத்துமா' இருக்கவில்லை.

**கவனிக்க வேண்டியவை**: பரிபூரண அறிவினால் முழுமையாக வளர்ந்த மனிதனாக ஆதாம் சிருஷ்டிக்கப்பட்டான். அவனுக்கு சர்ப்பம் என்று பெயரிடும்படி ஒரு குறிப்பிட்ட தீர்க்கதரிசன வெளிப்பாடு இருந்திருக்க வேண்டும். ஏனெனில், அந்த பெயர் வேதம் முழுவதிலும் பொல்லாதவனாகிய சாத்தானோடு இணைக்கப்பட்டதாயும், அதை தேவன் வீழ்ச்சிக்குப் பிறகு எழுதும்படி பின் நாட்களிலே செய்தார். '**சர்ப்பம்**' என்கிற பெயர் '**சாத்தான்**' என்ற பெயரோடு **ஒன்றிணைந்திருக்கிறது.** சாத்தானுக்கு, சர்ப்பத்துடைய சகல சிந்தையையும், வல்லமையாய் ஆளுகை செய்கிறவனாயிருந்தான். ஆகவே தான், அவன் ஏவாளை அந்த அளவுக்கு நம்பச் செய்து, நயவஞ்சகமானப் பாவத்தில் இறங்கும்படி செய்தான்.

## சில விதைகளின் உயிரின் பிறப்பு


சர்ப்பத்தின் வித்தானது, ஸ்திரீயின் முட்டையோடு **இணைய** முடிந்தது, அநேக ஜனங்களுக்கு இது நடக்கமுடியாத காரியமாய் பார்க்கின்றனர். ஆனால், ஒரு சில மனிதர்கள், ஒரு சில மிருகங்களைக் கொண்டு என்ன செய்திருக்கிறார்கள் என்று



**குதிரை** **கழுதை** **கோவேரிக் கழுதை**



**மூல பாவம்**



தேவனுடைய **சத்துருவாகிய சாத்தான் ஆண்டவருடைய பாதத்தை மாத்திரமே நசுக்கினான். அதாவது, அவரை சாத்தானால் அழிக்க முடியவில்லை. ஆகையால், அவருடைய வேலையைத் தடைசெய்ய முடிந்தது. கன்னி மரியாளால் பிறந்த இயேசுகிறிஸ்து மாமிசத்தில் வெளிப்பட்ட தேவனாயிருந்தார்.** தனக்குரியவனாயிருக்கும் **பாவி மரியாள்** இரத்தமாகிய **சர்ப்பத்தின் பாவத்தை** அவர் கடந்து சென்றார். ஆகவே, அவர் இரத்தம் சுத்தமும், பாவமற்றதுமாயிருந்தது. "இவரோ விசேஷித்த வாக்குத்தத்தங்களின் பேரில் ஸ்தாபிக்கப்பட்ட விசேஷித்த உடன்படிக்கைக்கு எப்படி மத்தியஸ்தராயிருக்கிறாரோ, அப்படியே முக்கியமான ஆசாரிய ஊழியத்தையும் பெற்றிருக்கிறார்" (எபி 8:6). "இயேசு கிறிஸ்துவினுடைய சரீரம் ஒரேதரம் பலியிடப்பட்டதினாலே, அந்தச் சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம்" எபி 10:10. "ஏனெனில், பரிசுத்த-மாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார்" எபி 10:14.

**தேவனுடைய ஆவியினால் நாம் மறுபடியும் பிறவாமல், பரிசுத்தமாக்கப்பட** முடியாது (யோவான் 3:3-8, 11:25, 26, 1பேதுரு 1:2, ரோமர் 3:26, யோவான் 1:9) பாவ மாம்சத்தில் பிறந்து, இந்தப் பூமிக்கு வரும்போது பொய்யைப் பேசி, வெறுப்புணர்வுடனும், பிற பொருளை இச்சிக்கக்-கூடியவர்களாயும், பலவிதமான மாமிச விருப்பங்களும், எல்லாவிதமான பொல்லாத கிரியையை செய்யக்கூடியவர்களாயும் இருக்கிறோம். ஆகவே, **பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானமென்கிற புதிய பிறப்பில்லாமல்** நாம் தேவனுடைய ராஜ்ஜியத்தில் பிரவேசிக்கவும், அதின் **ஜீவனையும்** காணமுடியாது.

## "நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்"

**இரண்டாம் ஆதாமுடைய ஆவியினாலே** நாம் மறுபடியும் பிறந்து (**தேவனுடைய வித்து**) அவருடைய வித்து (ஆவி) **தம்முடைய வார்த்தையினால்,** அந்த **சர்ப்பத்தின் சுபாவத்தை** நமக்குள்ளிருந்து வெளியே எடுக்கின்றார். யோவான் 6:63, 1கொரி 15:14, 1யோ 3:9

நோவாவின் குடும்பம் மாத்திரம், நோவாவின் மேலுள்ள தேவக்கிருபையினிமித்தம் காப்பாற்றப்பட்டார்கள். (ஆதியாகமம் 6:8,18).

**சர்ப்பத்தின் சுபாவம் சகல மாமிசத்தில் உள்ளது**

ஜலப்பிரவாகத்திற்குப் பின்பு உடனடியாக, **சர்ப்பத்தின் சுபாவம்** தன்னை **வெளிப்படுத்த** ஆரம்பித்தது. நோவாவின் மூன்று குமாரர்களில் **காம்** குறிப்பிட்டு தன் **தாயோடு முறையற்ற புணர்ச்சி** செயல்படுத்தினதினால், அதிகமாக இது வெளிப்படுத்தப்பட்டது. நோவா அந்நேரத்தில் குடி போதையில் நிர்வாணமாக தன் கூடாரத்திற்குள் இருந்தான். ஆதி 9:20-23 லேவி 18:20 அதிகாரம் வாசிக்கவும். முக்கியமாக கவனிக்க வேண்டியவை லேவி 18:6-8; 20:11, 17 (பின்னிணைப்பு 6ஐ பாருங்கள்)

யாப்பேத், காம் மற்றும் சேம்-ஐ தவிர வேறெந்த ஒரு வித்தையும் நோவா பிறப்பிக்கவில்லை. "மற்றும் இவர்களாலேயே பூமியெங்கும் ஜனங்கள் பரம்பினார்கள்" (ஆதி 9:18-19) ஆகவே, அந்நாட்கள் முதல் இவ்வுலகத்தில் பிறந்த ஒவ்வொரு நபரும், **சர்ப்பத்தின் சுபாவத்தின் சுதந்திரம்,** இந்த மூன்று மகன்களுக்குள்ளாக தொடரப்பட்டுள்ளது. (பின்னிணைப்பு 3ஐ பாருங்கள்).

ஒவ்வொருவரும் தெய்வீகமாய் இருக்கின்ற **ஆதாமின் சுபாவத்தையும்,** மிருகமும், பொல்லததுமாய் இருக்கின்ற **சர்ப்பத்தின் சுபாவத்தின்** ஒரு பங்கையும் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். **ஒவ்வொருவரும் கலப்பிடமாய்** இருக்கின்றார்கள். நாம் யாவரும் **ஒரே இரத்தத்தில்** உண்டாக்கப் பட்டுள்ளோம். (அப் 17:26) மற்றும் "எல்லோரும் பாவஞ்செய்து, தேவ மகிமையற்றவர்களாகி" (ரோமர் 3:23). இக்காரணத்தின் நிமித்தம், அப்பாவி மிருகங்கள், மனிதனின் ஆத்துமாவின் பரிகாரத்திற்கு, பழைய ஏற்பாடு காலமுழுவதும் பலிகளாக தேவனுக்கு அத்தியாவசியமாயிருந்தது. (வாசிக்கவும் லேவி 17:11 மற்றும் எபி 9:22).

## மனிதனை திரும்பவைக்கும் தேவ வழி

ஏனெனில் "அல்லாமலும் காளை, வெள்ளாட்டுக் கடா இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவர்த்தி செய்ய மாட்டாதே" எபி 10:4.

அவைகளை பலி கொடுத்தவர்களை அது பரிபூரணப்படுத்த முடியவில்லை (எபி 10:1-3). அந்த பலியான மிருகத்தின் ஜீவனானது விசுவாசியைப் பூரணப்படுத்தும்படி, பலி கொடுப்பவனிடத்திற்கு அது திரும்ப வரமுடியவில்லை. ஆகவே, வேறொரு பலி தேவைப்பட்டது.

வேறொரு மேம்பட்ட பலி உண்டு! ஆதி 3:15-ல் சொல்லப்பட்ட **ஸ்திரீயின் வாக்குத்தத்தமான வித்து** வந்திருக்கிறது. தேவக் குமாரனான **இயேசு கிறிஸ்து சர்ப்பத்தின் தலையை** (பிசாசு) நசுக்கும்படியே பிறந்தார்.





பாருங்கள். சிங்கம் - புலி ஒன்று சேர்த்து **லைகரை** உருவாக்கி உள்ளார்கள் - வாரிக் குதிரை – பெண் கழுதை ஒன்று சேர்த்து ஒரு கலப்பிட **சேடாங்கை** (Zedonk) உருவாக்கினார்கள். ஆனால் பொதுவானக் கலப்பிடம் என்பது கழுதை – குதிரை ஒன்றிணைந்து **கோவேறு கழுதையை** உருவாக்-குவது தான்.

### Hybrid 'apemen' could be bred for menial tasks

ROME - An Italian anthropologist says he believes that hybrid "ape-men" could one day be bred for menial tasks or to provide transplant organs.

Professor Brunetto Chi-arelli of the University of Florence told an Italian newspaper and a magazine in interviews published on Monday that the process would involve laboratory fertilisation of a female chimpanzee with human semen.

Both the Corriere Delia Sera newspaper and the magazine L'Espresso quoted Prof Chiarelli as saying an experiment involving hybrid humans had already been conducted in the United States but had been broken off in the early stages. He gave no further details.

A group of leading Roman Catholic intellectuals denounced the idea as against the laws of creation and said such experiments should be banned.

Father Bartholomew Kiely, a Jesuit theologian and biochemist who acted as an adviser to authors of a recent Vatican document condemning genetic manipulation, said there was no doubt in the eyes of the Church that such experiments were not permissible.

- Reuter.

விஞ்ஞானிகள், மனிதனையும், மிருகத்-தையும் **ஒன்று இணைக்க** பார்த்தும், அதில் வெற்றியில்லாமல் போனார்கள். மிருகமும், மனிதனும் ஒன்றிணைந்து உற்பத்தி செய்ய முடியாது. ஆனால், அவர்களுக்குள் இருக்கும் **இரசாயன சம்பந்தம்** அவர்களுடைய நெருக்கமான உறவு முறையை நிரூபிக்-கின்றது. எப்படியோ, மிருகமாகிய சர்ப்பத்துக்கும், ஸ்திரீயாகிய ஏவாளுக்கும் இடையில் ஏதேன் தோட்டத்தில் உறவு உண்டாக்கப்பட்டது. ஆனால், தேவன் ஏதேன் தோட்டத்தில் சர்ப்பத்திற்குரிய உருவமைப்பை முற்றிலுமாக அழித்து, மீண்டும் மிருகம் எவ்விதத்திலும் மனிதனோடு இணைய முடியாதபடிச் செய்தார்.

இப்பொழுது தேவன் அந்தக் கலப்பிடங்களை சிருஷ்டிக்கவில்லை. ஜீவனோடிருக்கிற அந்த இனங்கள் தங்கள் சொந்த ஜாதியைப் பிறப்பிக்கக்கடவது என்று தேவன் கட்டளையிட்டார் (ஆதி 1:11-24). ஆனால், மனிதன் மிருகங்களின் வித்துக்களை கலப்பிடம் செய்தபடியினால், அந்த வித்துக்கு மரணம் உண்டானது. கலப்பிடம் பலன் கொடாததாயும், அது ஜீவனைக் கொடுக்க முடியாததாகவும் இருக்கின்றது. தேவனுடைய பிரமாணத்தை மோசம் செய்து திருத்த நினைத்தால் அதின் பலன் **மரணம்** (பின்னிணைப்பு 10 பார்க்கவும்)

## காயீன் ஒருக் கலப்பிடம்

பிசாசினால் பிடிபட்ட சர்ப்பம் **விபச்சாரம்** செய்த போது, அந்த மிருகத்தின் வித்தானது, அவள் கர்ப்பத்திலே நாட்டப்பட்டு, அவன் முட்டைகளோடு ஒன்றிணைந்து, **கலப்பிடமும், மாறுபட்டதுமான** காயீனை பிறப்பிக்கச் செய்தது. **மரணம் பூமிக்குள் வந்தது**! ஆனாலும் **மரணம்** இயற்கை விதையில் இல்லாமல், **ஆவிக்குரிய** விதையில் இருந்தது. ஏனெனில் மனிதன் முதலாவது ஒரு **ஆவிக்குரியவனாய்** சிருஷ்டிக்கப்பட்டு, பிறகு **களிமண்ணாகிய சரீரத்தில்** வைக்கப்பட்டான். (ஆதி 1:26, 27, 2:7).

**மெண்டலின் பிரமாணம் இப்படி சொல்கிறது - "ஒவ்வொரு தனிநபரும் தான் உற்பத்தி செய்கின்றவர்களுடைய அடங்கிய (அல்) ஆட்கொள்கிற குணாதிசயங்களுடைய பலன் இருக்கின்றது. அந்த நபருக்குள் அவனுடைய தகப்பன்-தாய்க்குள் இருக்கிற எல்லாம் அவனுடைய பிறப்புக்குள் இருக்கின்றது".**

சர்ப்பம்-ஸ்திரீ என்ற உயிரின் பெருக்கமாய் காயீன் இருப்பதால், சர்ப்பத்தின் மகனாய் ஏவாளின் குணாதிசயத்தின் ஒரு பாகத்தை சுதந்தரித்துக் கொண்டான். அது ஆதாமுக்குள் இருந்த தேவனுடைய குணமாகும். நீங்கள் நினைவு கூறவேண்டியது, ஆதாமும், ஏவாளும் தேவனுடைய சாயலிலும், ரூபத்திலும் சிருஷ்டிக்கப்பட்டவர்களாய் இருந்து, வீழ்ச்சிக்குப் பிறகு **பாவம்** அவர்கள் மேல் **சுமத்தப்பட்டது.** தேவ சாயலும், ரூபமும் பாவத்தினால் அவர்களுக்குள் கறைபடுத்தப்பட்டது என்று கூறலாம். அதினால் ஆபேலுக்குப் பதிலாக சேத் மற்றும் எல்லா சந்ததிகளும், ஆதாமுடைய சாயலையும், ரூபத்தையும் மாத்திரமே சுமந்தார்கள் (ஆதி 5:3). ஆனால், காயீன் ஒரு கலப்பிடமானவனாய் இருந்தும், தேவகுமாரனாயிருந்த ஆதாமின் சாயலையும் ரூபத்தையும் சுமக்கவில்லை. அவன் ஒரு கலப்பிடமும், **சேதமடைந்த** மனித தேவ ஜாதியின் சாயலின் ரூபமாய் இருந்தான். **மகிமைக்குரிய சாயலிலிருந்து** விழுவது ஆவிக்குரிய மரணம் ஆகும்.

### கீழ்படியாமையின் பாவம்

ஸ்திரீயானவள் சர்ப்பத்துடன் **விபச்சாரம்** செய்ததால் உலகத்திற்கு **மரணத்தைக்** கொண்டு வந்தாள். அது உண்மையாக ஏவாள் நன்மை-தீமை அறியத்தக்க விருட்சத்தைப் புசிக்கக் கூடாது என்ற தேவ கட்டளைக்குக் கீழ்படியாமல் போனது. (பின்னிணைப்பு 11-பார்க்கவும்)

### சொல்லியல்புகளை பயன்படுத்துவது

"ஜீவ விருட்சம்", "நன்மை-தீமை அறியத்தக்கதான விருட்சம்", "தோட்டத்தின் நடுவே" மற்றும் "புசி" என்கிற சொல்லியல்புகளை





ஸ்திரீகள்) கவர்ச்சிகரமான அழகினால் சோதிக்கப்பட்டு தங்கள் விருப்பத்தின்படி இந்தக் காயீனின் ஸ்திரீகளை தெரிந்து கொண்டு, அவர்களுடனே **சேர்ந்து வாழ்ந்தார்கள்** (ஆதி 6:1-2)

விழுந்து போன தேவ பிள்ளைகளும் மற்றும் மனுஷக் குமாரத்திகளும் **ஒன்று சேர்ந்ததினாலே** உண்டான மரபணு தொடர்பின் இடையூறுகளின் முடிவாக **அநேக இராட்சத பிள்ளைகள் பிறந்தனர்.** (பின்னிணைப்பு 4-ஐ பாருங்கள்) "இராட்சதர்கள்" என்பது உயரமான மற்றும் உருவத்தில் பெரிதான மக்கள் என்று அர்த்தம் மாத்திரமல்ல; அவர்கள் சிந்தைகளிலும், அறிவு கூர்மையுள்ளவர்களாயும் இருந்தார்கள். ஆகவே, அவர்கள் "வல்லவர்கள்", "புகழ்பெற்ற மனிதர்கள்" என்றும் அழைக்கப்பட்டார்கள். ஆனால், "அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே" (ஆதி 6:5) "அவர்கள் **பரம சண்டாளர்களாகவும்** மற்றும் **கறைப்பட்டவர்களாயும்** இருந்தார்கள் மற்றும் அவர்களால் பூமி கொடுமையினால் நிறைந்தது" (ஆதி 6:13). மேலும், **யெகோவாவின் நாமம் ஏனோக்கின் சந்ததியிலிருந்ததைக் காட்டிலும் அவர்களுடைய விக்கிரக ஆராதனையின் வழிபாட்டில் மிகவும் அதிகமாக மாசுப்படுத்தப்பட்டது.** அதற்குப் பின் ஆதாமிலிருந்து ஏழாம் தலைமுறையான ஏனோக்கு, அவபக்திக்கு விரோதமாக தீர்க்கதரிசனம் உரைக்கும்படி எழுப்பப்பட்டான் (யூதா 14,15).

### ஒரே மாமிசம் - இரண்டு ஜனங்கள்

ஜனங்களின் இரண்டு **இனக்கலப்பின்** நிமித்தம், வம்சம் வம்சமாக, ஏனோக்கிலிருந்து நோவாவரை இயற்கையாகவே, **தேவபுத்திரர்களின் குருதிக்கோடு சர்ப்பத்தின் வித்தின் பொல்லாத சுபாவத்தோடு இயல்புமீறியதாய் இருந்தது. அவர்களுக்குள்ளாக தெய்வீக வெளிப்பாட்டின் ஆவிக்குரியத் தன்மை படிப்படியாக குறைந்தது. நீதியின் அடிச்சுவடுகள் குறைய ஆரம்பிக்கும் போது, பொல்லாத குணாதிசயங்கள் அந்த சந்ததிகள் தோறும், இரண்டு ஜனங்கள் ஒரே மாமிசமாகும்மட்டும் பெருகிக் கொண்டேயிருந்தது.** ஜலப்பிரவாகத்திற்கு முன்பதான சந்ததிக்குள் வித்தின் கலப்பிடம், பூமியிலிருக்கும் அனைத்து ஜனங்களும் **பங்கேற்கத்தக்கதாய்,** அது **முழுமையடைந்தது.** சேத்தின் வம்ச வழியில், சுத்தமான நீதியுள்ள முதற்பேரின் கடைசியாக நோவா இருந்தான். (ஆதி 5:28,29) , மேலும் கானானிய மனைவியை அல்லது கலப்பிட வித்துடைய ஸ்திரீயை மணந்து கொண்டான்.

#### ஜலப்பிரவாகத்திற்கு முன்பதாக கலப்பற்ற சர்ப்பத்தின் வம்சம் அழிக்கப்பட்டது

எல்லா கலப்பற்ற சர்ப்பத்தின் ஜனங்கள் (கலப்பற்ற – கானானியர்) கலப்பிடமான சந்ததியுடன் ஜலப்பிரவாகத்தில் அழிக்கப்பட்டுப் போனார்கள்.

**ப்ரபட்டிக் ரெவலேஷன்**

என்பதை இந்த அடிச்சுவடுகள் நமக்கு போதுமான அளவு சாட்சியாய் உள்ளது.

## காயீனின் ஜனங்கள்

ஆதி 4:16-24ல் காயீனின் சொந்த வம்சங்களின் சான்றுகள் உள்ளது. அவன் ஜனங்கள் பெரிதானவர்களாயும், அறிவுத்திறன் உடையவர்களாயும் இருந்தனர். அவர்கள் பட்டணங்களைக் கட்டி, ஆயுதங்களும் செய்து மற்றும் பெரிய காரியங்களை உருவாக்கக்-கூடியவர்களாய் இருந்தார்கள். அவர்களுடைய அந்நாட்களில் அவர்கள் அறிவுப்பூர்வமாகவும், சிந்தைகளில் இராட்சதர்களாகவும், பிரபலமான ஜனங்களாய் இருந்தார்கள். காயீனின் வம்சத்தில் வந்த லாமேக்கின் கொலை செய்த கிரியைகளுக்கு சான்றுகள் உள்ளது. அவன் ஒரு மனிதனுக்கு ஒரு மனைவி என்கிற தேவ சித்தத்திற்கு விரோதமாய் போகக்கூடிய முதல் நபராய் இருந்தான் (ஆதி 2:23-24) அவன் இரண்டு மனைவிகளை திருமணம் செய்தான். (ஒன்றுக்கு மேற்பட திருமணத்தை தேவன் ஜலப்பிரவாகத்திற்குப் பின்பாகத்தான் அனுமதித்தார்). அந்நாட்களில் ஆதாமின் வித்துக்குள்ளும் (சேத் மூலமாக) காயீனுக்குரியவர்களும் ஏற்கனவே கலந்துவிட்டனர். இந்தத் தற்காலிகமான கிருபையின் காலத்தில் இருக்கிற விசுவாசிகள் ஒன்றுக்கு மேற்பட்டதைப் பழக்கமாக்கிக் கொண்டதால் அவர்கள் விபச்சாரம் செய்வதற்கு குற்றவாளிகளாய் இருக்கின்றார்கள் (மத் 19:9, லூக்கா 16:18ஐ வாசிக்கவும்).

## சேத்தின் ஜனங்கள்

ஆதி 5:6-32-ல் பதிவு செய்யப்பட்டுள்ள ஏனோக்கிலிருந்து நோவா வரை இருக்கும் சேத்தின் வம்சங்கள், கானானியர்களைக் காட்டிலும் வேறுபட்டு இருந்தார்கள். அவர்கள் **எளிமையான மக்களும்,** முக்கியமாக **மேய்ப்பர்களாயும்** இருந்தார்கள். அவர்களுக்குள் பொய்யனும், கொலைக்காரனும் பலமணம் செய்தவர்களும் இல்லை.

## வித்துகளின் கலப்புத் திருமணம்

"அந்நாட்களில் **இராட்சதர்** பூமியிலே இருந்தார்கள். பின்பு **தேவகுமாரர் மனுஷ குமாரத்திகளோடு** கூடுகிறதினால், இவர்கள் அவர்களுக்குப் பிள்ளைகளைப் பெற்ற போது, இவர்களும் பூர்வத்தில் பேர்பெற்ற மனுஷராகிய பலவான்களானார்கள்" - ஆதி 6:4

இரண்டு ஜனங்களின் மக்கள் தொகை பெருகினபோது **தேவகுமாரர்கள்** (சேத்தின் புருஷர்) **மனுஷக் குமாரத்திகளின்** (காயீனின்



**மூல பாவம்**

எடுப்போம். எடுத்துக் கொண்ட வார்த்தையை சில நேரம் தியானம் செய்வோம். **மனிதனின் சரீரம் 'தோட்டம்'** என்பதை புரிந்து கொள்ள வேண்டும். **தோட்டத்தின் நடுவே** என்பது **இனப்பெருக்கம் செய்கின்ற பால் அங்கம்.** அந்த **இனப்பெருக்கம் செய்கின்ற பால் அங்கத்தை இரண்டு பிரமாணங்கள்** ஆளுகை செய்கின்றது. (கவனியுங்கள் **தோட்டத்தின் நடுவே, இரண்டு விருட்சங்கள்** நின்றது-பக்கம் பக்கமாக அல்ல) (ஆதி 2-9). அந்த **தெய்வீக வழி** அல்லது **ஜீவனின் பிரமாணத்தை** "ஜீவ விருட்சம்" என்ற அடையாளத்தால் சொல்லப்பட்டது. மாறுபட்ட வழி அல்லது மரணத்தின் பிரமாணத்தை நன்மை-தீமை அறியத்தக்க விருட்சம் என்று அடையாளமாகச் சொல்லப்பட்டுள்ளது. இந்த இரண்டு பிரமாணங்களும் முற்றிலுமாக ஒன்றுக்கு ஒன்று விரோதமாய் இருக்கின்றது. ஒருவன் எப்பொழுது தேவனுடைய பிரமாணத்தைக் காப்பவனாகவோ, உடைப்பவனாகவோ இருந்தால் அவன் அதற்கு ஏற்றபடி அனுபவிக்கிறவனாயிருப்பான். (பின்னிணைப்பு 12 ஐ பார்க்கவும்)

## ஜீவனும் மரணமும்

**தெய்வீக ஜீவனும், சத்தியமும்** நித்தியமானதாயும், தேவனிடத்திலிருந்து வரக்கூடியதாயும் இருக்கின்றது. **மாறுபட்ட வழியும், அறிவும்,** பிசாசினிடத்தில் இருந்து வரக்கூடியதாயும், அவைகள் **மரணத்திற்கு** நேராய் வழி நடத்துவதாயும் உள்ளது. தேவனுடைய ஜீவ வழியையே எப்பொழுதும் அவன் **புரட்டிக் கொண்டிருந்தான்.** எசே 28, ஏசாயா 14:12-15-ல் சாத்தான் விழுவதற்கு முன்பு உன்னத இடங்களில் அவனுடைய ஸ்தானத்தை நமக்கு சொல்கின்றது. அப்பொழுது அவன் லூசிபராக அறியப்பட்டிருந்தான். அவன் ஞானத்தில் முத்தரிக்கப்பட்ட, அழகினால் முடிசூட்டினவனாய் இருந்தான். அவனுக்குரிய அந்தஸ்திலும், ஆஸ்திகளிலும் அவன் தன் ஞானத்தை, மகா உன்னதமானவருக்கு ஒப்பாக்கி, தன்னை உயர்த்தும்படி பயன்படுத்தினான். அவனுக்கு கொடுக்கப்பட்ட ஞானத்தை அவன் புரட்டி அவன் ஆதி மேன்மையிலிருந்து விழுந்தான். அந்நேரம் முதற்கொண்டு அவன், வழியையும், சத்தியத்தையும், ஜீவனையும் எதிர்த்து நிற்கிறவனாய் இருந்தான்.

## எல்லாம் ஒரு தீர்மானத்திற்காக சிருஷ்டிக்கப்பட்டது

தேவன் சிருஷ்டித்த ஒவ்வொன்றுக்கும் ஒரு நோக்கம் உண்டு. அது தமக்கே மகிமை கொண்டு வரக்கூடியதாய் இருக்கின்றது. (எபே.3:11, பிரசங்கி 3:1,17, ஏசாயா 14:26,27) அது போல, மனித சரீரத்தில் ஒவ்வொரு அங்கத்திற்கும் ஒரு தீர்மானம் உண்டு. ஒரு அங்கத்தை தவறாக பயன்படுத்தினால், கர்த்தரின் கண்ணில் அது பாவமாகும். மத் 18:8,9; யாக் 3:10-12 வாசியுங்கள். கற்பனை தெளிவாய் இருக்கின்றது: மனிதன்

சிருஷ்டிகரின் **தெய்வீக ஜீவனின் பிரமாணத்தையும், தீர்மானத்திற்கும்** கீழ்படிய வேண்டுமென்பதே கீழ்படியாமை தெய்வீக கட்டளையின் மீறுதலாய் இருக்கின்றது. மற்றும் அது **சிருஷ்டிகரின் நோக்கத்தையும், தெய்வீக சத்தியத்தையும்** மாறுபாடான வழிக்கு நேராய் நடத்துகின்றது.

## பால் அங்கத்தின் நோக்கம்

யாவரும் ஒப்புக் கொள்கின்றபடி, **ஜீவனை உற்பத்தி செய்வது,** பால் அங்கத்தின் **நோக்கம்.** ஆதாம் தன்னைத்தான் உருவாக்கிக் கொள்ள ஸ்திரீ அவனுக்குக் கொடுக்கப்பட்டாள். **தேவனுடைய திட்டத்தின்படி நியமிக்கப்பட்ட சமயத்திலும், உற்பவ காலத்திலும்** ஆதாமும், அவன் மனைவியும் ஒன்று இணையவேண்டுமென்பது எதிர்பார்க்கப்பட்டதாய் இருந்தது. (பிர 3.1-8) **தோட்டத்தின் நடுவே உள்ள ஜீவ விருட்சத்தைப் புசிப்பது** என்பது **பங்கு பெறுவதாகும்,** மற்றும் அதின் **கனி** என்பது அதின் **பலன் (பரிசு).** அப்படி **பங்கு பெறும்** போது அதின் பலன் **நித்திய ஜீவனுடைய** தேவனுடைய குமாரர்களையும், குமாரத்திகளையும் அது கொண்டு வரும். (கனிகள், பரிசுகள்)

## பால் அங்கம் தவறாக பயன்படுத்தப்பட்டது

எப்படியோ சாத்தான் சர்ப்பத்தின் மூலமாக ஒரு குறிப்பிட்ட சமயத்தில் மற்ற விருட்சத்துடன் பங்கு பெறும்படி உபதேசத்தில் நுழைந்திருக்க வேண்டும். அந்த நன்மை-தீமை அறியத்தக்க விருட்சத்தைப்பற்றி சொல்லி அவள் அதைப் புசிக்கும்படி முடிவிலே சோதித்திருக்கிறான். “அப்பொழுது ஸ்திரீயானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள், அவனும் புசித்தான்”. (ஆதி 3:6)

குறிக்கப்பட்ட நேரத்திலும் அதின் காலத்திலும் **தோட்டத்தின் நடுவிலுள்ள ஜீவ விருட்சத்தை** புசிப்பதற்கு பதிலாக, ஆதாமும், அவன் மனைவியும் **நன்மை, தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை புசித்தார்கள்.** (அதுவும் **தோட்டத்தின் நடுவிலிருந்து**) தேவன் அவர்களை அப்படி செய்யக்கூடாது என்று கட்டளையிட்டிருந்தார்.

"தீமையை நன்மையென்றும், நன்மையைத் தீமையென்றும் சொல்லி, இருளை வெளிச்சமும், வெளிச்சத்தை இருளுமாகப் பாவித்து, கசப்பைத் தித்திப்பும், தித்திப்பைக் கசப்புமென்று சாதிக்கிறவர்களுக்கு ஐயோ! தங்கள் பார்வைக்கு ஞானிகளும், தங்கள் எண்ணத்துக்குப் புத்திமான்களுமாய் இருக்கிறவர்களுக்கு ஐயோ!" (ஏசா 5:20,21)

சர்ப்பத்தின் மாமிச விளக்கத்தினால் அந்தக் கனியைப்





**உண்மையான சத்தியத்திற்குரிய வெளிப்பாட்டைப் பெற்றுக்கொள்ள முடியும்).** தன் தகப்பனைப் போல் காயீனும் பூமியைப் **பண்படுத்தக் கூடியவனாகவும், நிலத்தின் கனியை** தேவனுக்குப் பலியாகக் கொண்டுவந்தான். **சபிக்கப்பட்ட நிலத்தின்** கனியே அவனுடைய **சாதனையும் பெருமையுமாய்** இருந்தது. நெற்றி வேர்வை சிந்தி தன் சொந்த கைகளால் நிலத்தைப் பண்படுத்தினதால், அது தேவனைப் பிரியப்படுத்தும் என்று நினைத்தான். அவனுடைய வழிகள் **சுயநீதிக்குரியதாவும், பொல்லாப்புடையதாயும்** இருந்தன. (1 யோவான் 3:12, ஏசாயா 64:6) காயீன் ஆவிக்குரியவனாய் இருக்கவில்லை. ஆனால், நிச்சயமாக சமய சம்பந்தமானவனாய் (மதம்) இருந்தான்.

தற்காலிகமான, **புறமதம் இல்லாத ஆராதனைகள்,** நிலத்தின் கனி போன்ற பழங்கள், பூக்கள் மற்றும் காய்கறிகள் மற்றும் பலியாகக் கொடுக்கும் பழக்கம். காயீனே அதற்கு **ஸ்தாபகர்** என்று கண்டுகொள்ளப்படுகிறது.

**ஆபேல் உண்மையான மதத்தைப்** பின்பற்றக்கூடியவனாய் இருந்தான். வெளிப்பாட்டினாலே, அவன் தேவன் யார் என்றும் தேவன் அவனிடத்தில் என்ன எதிர்பார்க்கிறார் என்றும் அறிந்திருந்தான். **உண்மையாய் ஆராதிக்கிறவர்கள் தேவனை வெளிப்பாட்டினாலும் ஆவியினாலும் உண்மையினாலும் ஆராதிப்பார்கள்** (யோவான் 4:22-24).

## காயீனின் சாத்தானுடைய அடிச்சுவடுகள்

ஆபேலைக் கொன்ற விஷயத்தில் சர்ப்பத்தின் மகனாக இருந்த காயீன் மூன்றுவிதமான பிசாசின் அடிச்சுவடுகளில் வெளிப்பட்டான். (ஆதி 4:8-9 வாசிக்கவும்). கொலை செய்வதோ, பொய் சொல்லும் குணாதிசயம் தேவனிடத்திலிருந்து வருவதில்லை. அது சாத்தானிடத்திலிருந்து வருகின்றது. (யோவான் 10:10,11,25, எண் 23:19). இயேசு கிறிஸ்து சாத்தானைப் பற்றி சொல்லும்போது அவன் ஆதிமுதலாய் மனுஷகொலை பாதகனாய் இருந்தான், மற்றும் அவன் பொய்யனும் அதறக்குப்பிதாவுமாயிருக்கிறான். (யோவான் 8:44). காயீன் தேவனை நோக்கி எதிர்த்து சத்தமிட்டு நான் என்ன என் சகோதரனுக்கு காவலாளியோ? என்று சொல்லும்போது, அவனுடைய எதிர்த்து நிற்கிற குணாதிசயம் அவனுக்குள் இருந்து வெளிப்பட்டது. தேவகுமாரனாய் இருந்த ஆதாமின் மகனாக காயின் இல்லை




காயீனைப் பெற்று கர்த்தரால் ஒரு மனுஷனைப் பெற்றேன் என்றாள். காயீன் ஆதாமுடைய குமாரனைப் போல அவர்களுக்குத் தெரிகின்றது. ஆனால் இந்த வசனத்திற்குள் இந்த பாகத்திற்குள் ஆழமாகப் போகும்போது அதிகமான வெளிச்சத்தைத் தருகின்றது. ஆதி 1:25-லும் 'அறிந்தான்' என்கிற வார்த்தை நிச்சயமாக கர்ப்பம் தரிக்கும் 'ஞானம்' என்று அர்த்தமாகும் வசனம் 1 மற்றும் 25-ல் ஆதாம் தன் மனைவியை இரண்டு முறை அறிந்தான். ஆனால் மூன்று குமாரர்களைப் பெற்றான். மீதியிருக்கிற நான்காவது பாகத்தை நாம் வாசிக்கும்போது காயீனும் ஆபேலும் அதிகபட்சமாக **குணாதிசயத்தில் வேற்றுமையுள்ளவர்களாய்** காணப்பட்டார்கள். ஆகவே யாரோ ஒருவர் ஆதாமின் மகனாக இருக்கமுடியாது.

எல்லா ஜீவனும், நன்மையோ, தீமையோ தேவனிடத்திலிருந்து வருகின்றது. (ஏசாயா 45:7, அப் 17:28). ஆகவே, தான் ஏவாள் சொன்னாள் "கர்த்தரால் ஒரு மனுஷனைப் பெற்றேன்" (பின்னிணைப்பு 1ஐ பாருங்கள்).

## காயின் - ஆபேலின் மதக் கொள்கை

"சிலநாள் சென்றபின்பு, காயீன் **நிலத்தின் கனிகளைக்** கர்த்தருக்குக் காணிக்கையாகக் கொண்டுவந்தான். ஆபேலும் **தன் மந்தையின் தலையீற்றுகளிலும் அவைகளில் கொழுமையானவைகளிலும் சிலவற்றைக் கொண்டு வந்தான்**" (ஆதியாகமம் 4:3-4a).



ஆபேல் தன் **ஆடுகளின் முதலீற்றை,** தேவனுக்கு பலியிட்டதினால், ஏதேன் தோட்டத்தில மனிதனின் வீழ்ச்சிக்கு வழிநடத்தின சம்பவங்களைக் குறித்து **அறிந்து இருந்தான்**. தேவனிடத்திலிருந்து **வெளிப்பாடும்** பெற்றிருந்தான். தேவனும், அதேபோல் அவன் தன் பெற்றோராகிய ஆதாம், ஏவாளின் **பாவக் குற்றத்தை மூடுவதற்கு,** இரண்டு மிருகத்தின் **இரத்தத்தை** செலுத்தி அப்படி செய்தார். ஆபேலின் காணிக்கை தேவனைப் பிரியப்படுத்திய நீதியுள்ளதொன்றாய் இருந்தது.



ஆனால், சர்ப்பத்தின் மகனாகிய **காயீன்,** அப்படிப்பட்ட வெளிப்பாட்டைப் பெற்றிராதவனாய் இருந்தான். அவன் ஆபேலுடன் வளர்க்கப்பட்டு வந்தாலும், தேவனைக் குறித்து சத்தியத்தையும், அறிவையும் அறிந்திருந்தும் அவன் மெய்யான வெளிப்பாட்டை பெறாதவனாய் இருந்தான்.

**(தேவ குமாரர்களும், குமாரத்திகளும் மாத்திரமே, தேவனுடைய**





புசிக்கும்பொழுது அவள் அதிக **ஞானமுடையவளாவாள்** என்று சிந்திக்க வைத்து, ஸ்திரீயை வஞ்சித்தது. தடைவிதிக்கப்பட்ட அந்த விருட்சத்தின் **கனி, கண்களுக்கு இனிமையானதாயும் ஒரு ஆனந்தமும், மாமிச உணர்ச்சிகளைத் தூண்டும் வகையிலும், இச்சைக்குரியதாயிருந்தது.** ஏனெனில், **அந்த விருட்சம் புசிப்பதற்கு நல்லதும், ஒருவனை புத்திமானாய், (பகுத்தறியத்தக்கவனாய்)** மாற்றும் வகையில் இருந்தது. (அந்த **விருட்சம்** புசிப்பதற்கு நல்லதாய் இருந்தாலும், நிச்சயமாக ஆவிக்குரிய ஆத்துமாவுக்கு ஏற்ற உணவாக இல்லை) (பின்னிணைப்பு 13ஐ பார்க்கவும்).

நன்மை-தீமை அறியத்தக்க விருட்சத்தில் பங்கு பெற்றால், கீழ்படியாமையின் **கனியாகிய காயீனின்** கர்ப்பம் தரிக்கப்பட்டது. உலகத்தில் எல்லா ஜீவன்களும் சுத்தமான உற்பத்திகளாயிருந்த ஒரு இடத்தில், காயீன் ஒரு **கலப்பிடமாய்** இருந்தான். அவன், **முரண்பட்டவனாய்** தேவனுடைய விதிமுறையைக் களைத்து போட்டவனாய் இருந்தான். அவன் **சர்ப்பத்தின் வித்து** (ஆதி 3-15). அவன் சாத்தானால் உண்டான பொல்லாதவன் (1 யோவான் 3-12) தேவனுடையத் திட்டத்தை கெடுக்கும்படி சாத்தானின் திட்டத்தில் பங்காயிருந்தான்.

ஆதாமிலிருந்து எடுக்கப்பட்டதினால் ஆதாமுடைய பங்காக ஏவாள் இருந்தாள் மற்றும் ஆதாம் தன்னை ஏவாளுடன் இணைத்ததால் இருவரும் ஒரே மாமிசம் ஆகவேண்டியதாயிற்று. ஆதாம் ஏவாளுடன் இணைவதற்கு முன்னமே சர்ப்பத்துடன் அவள் விபச்சாரம் செய்யும்படி பிசாசு வைத்தான். சர்ப்பத்துடன் ஏவாள் விபச்சாரம் செய்வதினால், அவளுடைய பால் அங்கத்தை இன்பத்திற்காக பயன்படுத்தி தேவனுடைய தெய்வீகக் கட்டளையை உடைத்தாள். அவள் கறைபட்டதினால் ஆதாமின் மனைவி என்ற தகுதியை இழந்தாள். தேவன் அவள் மேல் நியாயத்தீர்ப்பை கடந்து வரச்செய்திருப்பாரானால், ஆதாம், ஏவாளை என்றென்றும் இழந்திருப்பான் என்று அறிந்திருந்தான். ஆகவே, ஏவாளை மீட்டுக் கொள்ளும்படி ஆதாம், நிச்சயமாக அவளுடைய பாவத்தோடு அவன் தன்னை அடையாளப்படுத்த வேண்டும் (பாவத்தின் சம்பளம் மரணம் - ரோமர் 6:23) அவள் கறைபட்டு போனாள், என்பதை அவன் அறிந்திருந்தும், அவளுடைய பங்காக அவன் இருந்தபடியினால் அவளுடைய பால் புணர்ச்சியுடன் தன்னை அடையாளப்படுத்தும்படி ஆதாம் ஏவாளுடன் இணையவேண்டியதாயிற்று. அப்படியிருந்த போதிலும், ஆதாம், வஞ்சிக்கப்படவில்லை. ஆனால், ஏவாள் வஞ்சிக்கப்பட்டு பாவம் செய்தாள். (1 தீமோ 2-14) ஸ்திரீயானவள், நன்மை, தீமை அறியத்தக்கதான கனியை புசித்ததினால் வஞ்சிக்கப்பட்டு, அதன்பின்பு புருஷனுக்கும் கொடுத்தாள். தன் மனைவிக்காய் ஆதாம் குற்றத்தை ஏற்றுக் கொண்டான்.

**கவனிக்கவும் :** நம்மோடு தன்னை அடையாளம் காட்டும் இரண்டாம்

மனிதரான இயேசு கிறிஸ்து வந்த போது ஆதாமைப் போல இருந்தார். "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே..." (ரோ 5:8), "...தம்முடைய குமாரனைப் பாவமாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்" (ரோ8:3), "நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்" (எபி 4:15, ஏசா 53:5).

ஆதாமும், தன் மனைவியும் நன்மை-தீமை அறியத்தக்க கனியில் பங்கு பெற்றதால் **பாவம் அவர்கள் மேல் சுமத்தப்பட்டதின் பலன் மரணமாய்** இருந்தது. ஆகவே, இந்த முரண்பட்ட அறிவை, தடை செய்யப்பட்ட விருட்சத்திலிருந்து அவர்கள் தெரிந்துகொண்டார்கள். ஆதலால், அதன் பலனை அறுக்கவேண்டியதும், கசப்பான பாத்திரத்தில் குடிக்க வேண்டியதும் ஆயிற்று. (பின்னிணைப்பு 14 ஐ பார்க்கவும்). ஆகவே, தெய்வீக விருட்சம் (தேவனுடைய பூரண பிரமாணம்) ஜீவனை உற்பத்திப் பண்ணக்கூடியது. உறவில் பரிபூரணமாய், தீர்மானமாய் ஆளுகை செய்ய வேண்டியதாயிருந்தது. ஆனால் தேவனுடைய தெய்வீக திட்டம் வெளிப்பட அனுமதிக்கப்படவில்லை. தேவன் அதைக் காத்து வைத்து (ஆதி 3.22-24) ஏறக்குறைய 4000 வருடங்களுக்குப் பிறகு, இயேசு கிறிஸ்து என்னும் நபரின் வழியாகத்தான் கொண்டு வந்தார். கிறிஸ்து இயேசு, தேவனுடைய தீர்மானமும், தெய்வீக **ஆள்தத்துவமுடையவராய்** இருக்கின்றார். **அவரே அந்த வழி, அந்த சத்தியம், அந்த ஜீவனும்** தேவனுடைய **மெய்யான ஞானமுமாய்** இருக்கிறார் (1 கொரி 1-24, நீதி 3.13, 18, 19) அவரை ஏற்றுக்கொள்கிறவர்கள் எல்லோருக்கும், நித்திய ஜீவன் உண்டாகும். (யோவான் 6.47-58) ஜீவ விருட்சம் என்கிற உறவு அவருடன் இல்லாமல் நித்திய ஜீவன் இல்லை.

## மூடப்படுதல்

"அப்பொழுது அவர்கள் இருவருடைய **கண்களும் திறக்கப்பட்டது.** அவர்கள் தங்களை **நிர்வாணிகள்** என்று **அறிந்து** அத்தி இலைகளைத் தைத்து தங்களுக்கு அரைக்கச்சைகளை உண்டு பண்ணினார்கள்" (ஆதியாகமம் 3-7)

ஏன்? அவர்கள், தாங்கள் செய்த குற்றத்திற்காக தங்கள் கண்கள் திறக்கப்பட்டு, தாங்கள் நிர்வாணிகளென்று உணர்ந்தார்கள். ஆதலால் அவர்கள் தங்கள் பால் அங்கங்களை மறைக்க நினைத்தார்கள். அவர்கள் அதைக் குறித்து வெட்கப்பட்டார்கள். (முதல் ஜோடி தாங்கள் நிர்வாணிகள்



## மூல பாவம்

அதற்கு பின் ஏதேன் தோட்டத்தில் இருந்து மனுஷனும் அவனுடைய மனைவியும் துரத்தப்பட்டார்கள். ஏதேன் தோட்டம் என்பது தேவனுக்குப் பிரியமானதாய் இருந்தது. தேவப் பிரமாணத்துடனும் **தேவனுடைய ஒற்றுமையுடனும்** இணைக்கப்படாத எதுவும் அந்த இடத்தில் பிறக்க முடியாது. ஆகவே, ஏவாளின் வயிற்றில் **கர்ப்பம் தரித்த கலப்பிடத்தின்** நிமித்தம் தோட்டத்திலிருந்து அவர்கள் இருவரும் துரத்தப்பட்டார்கள். **முரண்பாட்டின் வித்தாகிய** சர்ப்பத்தின் வித்து அந்தக் கலப்பிடமாய் இருந்தது.

மனிதன் விழுந்து போன காரணத்தின் நிமித்தம் பாடுபட்டு பூமியைப் பண்படுத்தி முட்களையும், குருக்களையும் அகற்றித் தன் உணவைப் பெற்றுக்கொள்ளும்படி களை எடுக்க வேண்டியதாயிற்று. தன் வீட்டு வேலைக்காரனாகிய பூமியைக் **பண்படுத்தும்** சர்ப்ப இனத்தைச் சேர்ந்தவனைத் தொலைத்து விட்டான்.

## ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாய்

ஆதி 3:20 அநேக கிறிஸ்துவர்கள் கவனிக்காமல் போகின்ற ஒரு சுவாரஸ்யமான வசனமாய் இது இருக்கின்றது. இதே போன்று ஒரு சிறிய நிலைப்பாடுகளை கூர்ந்து கவனித்து தியானம் செய்திருந்தால் சர்ப்பத்தின் வித்தின் உபதேசத்தை அநேகர் புரிந்திருக்க முடியும். துரதிருஷ்டவசமாய அநேகர் இதை கவனம் செலுத்தாமல் போகின்றனர்.

"ஆதாம் தன் மனைவிக்கு **ஏவாள்** என்று பேரிட்டான்"

இந்தப்பெயர் சாபம் பிறப்பிக்கப்பட்ட பின்பே வைக்கப்பட்டது. இதற்கு முன்பே அவள் **ஸ்திரீ** என்றுதான் அழைக்கப்பட்டாள் (ஆதி 2:23) 'ஏவாள்' என்றால் 'ஜீவன் கொடுப்பவள்' என்பதாகும். ஏனென்றால் 'ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாய்' (ஆதி 3:23). அவளுடைய முதல் குமாரர்களாகிய **காயீனுக்கும் ஆபேலுக்கும் தாயாய்** இருந்தாள். ஆனால், அவர்களில் **ஒருவன் மாத்திரமே ஆதாமுடையவனாய்** இருந்தான். இருவரும் ஆதாமுடையவர்களாய் இருந்திருந்தார்களென்றால், ஆதாம் தன் மனைவிக்கு ஏவாள் என்று பெயரிட்டு இருக்கமாட்டார். அதற்கு காரணம் ஆணிலிருந்துதான் வித்து வருகின்றது. சரியாக ஆதாமேதான் எல்லாவற்றிற்கும் என்று அழைத்திருக்க வேண்டும். ஆனால் காயீன் அவனுடைய வித்து அல்ல, ஆதாம் அவனை பெற்று எடுக்கவில்லை. சர்ப்பமே செய்தது. ஆதாம் எல்லா ஜீவன்களுக்கும் தகப்பன் அல்ல.

## ஆதியாகமம் - 4

ஆதியாகமம் 4:1-ல் ஒரு வசனம் கிறிஸ்தவர்களை **குழப்புகின்றது.** ஆதாம், தன் மனைவியாகிய ஏவாளை அறிந்தான். அவள் கர்ப்பவதியாகி

அவளுடைய பாவத்திலே அவன் தன்னை அடையாளம் காட்ட வேண்டும். ஆகவே, ஆதாம் எல்லாம் அறிந்தவனாய் ஏவாளின் பாவத்தில் உடன்பட்டான். அவனுடைய அந்தக் கிரியை உலகத்திற்கு **மரணத்தை** கொண்டு வந்தது.

"இப்படியாக ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்தில் பிரவேசித்ததுபோலவும் எல்லா மனுஷரும் பாவம் செய்தபடியால் மரணம் எல்லாருக்கும் வந்தது போலவும் இதுவுமாயிற்று, நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்னும் பாவம் உலகத்திலிருந்தது, நியாயப்பிரமாணம் இல்லாதிருந்தால் பாவம் எண்ணப்படமாட்டாது. அப்படியிருந்தும், **மரணமானது ஆதாம்முதல் மோசேவரைக்கும், ஆதாமின் மீறுதலுக்கொப்பாய்ப் பாவஞ்செய்யாதவர்களையும் ஆண்டுகொண்டது, அந்த ஆதாம் பின்பு வந்தவருக்கு முன்னடையாளமானவன்.**" (ரோமர் 5:12-14).

**ஆதாம் வரக்கூடியவருக்கு ஒரு மாதிரியாய் இருந்தார்**. அது எப்படி ஆகும்? ஆதாம் ஏவாளுடைய மீறுதலுடன் தன்னை அடையாளம் காட்டினதின் நிமித்தம் தன் மனைவியை தனக்காக **மீட்டுக்கொண்டான்** ஆதாம் முதலாவது இச்சையோ பாவம் அறிந்தவனாகவோ இருந்ததில்லை என்பதை நினைவு கூறுங்கள். அதே போல் இயேசு கிறிஸ்துவும் கடைசி ஆதாமாக விழுந்துபோன தன்னுடைய மணவாட்டியுடன் தன்னை **அடையாளப்படுத்திக் கொண்டு** அவள் தேவனுக்கு முன்பதாக நீதியாகும்படி அவளுக்காகப் **பாவமானார்.** விழுந்துபோன மனிதனோடுகூட **தன்னை அடையாளம் காட்டுவதினால்** கடைசி ஆதாம் (இயேசு கிறிஸ்து) **மீட்பின் கிரியையால்** மனிதனை **ஜீவனுக்கு** திருப்பிக் கொண்டு வந்தார். **இயேசு கிறிஸ்துவின் விலாவிலிருந்து** கல்வாரியிலே தண்ணீரும் இரத்தமும் புரண்டு வந்ததால் தேவன் அவருக்கு ஒரு மணவாட்டியை உருவாக்கினார். (ரோமர் 5:12-15, 1கொரி 15:21, 22, 45 வாசியுங்கள்). ஆமென்! (**மாதிரியும் மாதிரி படிவ மூலம்** இதற்கு மேலே ஒன்றும் தெளிவு படுத்த முடியாது). நாம் ஏதோ ஒரு மரத்தின் கனியோடு அல்ல **ஜீவ விருட்சத்தோடும் ஜீவனுள்ள ஞானம் நிறைந்த தேவனோடும்** ஒப்புரவாக்கப்பட்டு இருக்கிறோம்!








என்று அறியும்படி ஆப்பிள்களும், பேரிக்காய்களும் புசித்ததே காரணம் என்றால், இன்று வீதிகளிலும், கடலோரங்களிலும் அலையும் அரை-நிர்வாண ஸ்திரீகளுக்கும் தருவது அவசியம்) தேவன் ஆதாமிடத்தில் கேட்ட கேள்வி… நீங்கள் நிர்வாணிகள் என்று உங்களுக்கு அறிவித்தவன் யார் ? இது எதைக் காட்டுகின்றது என்றால், ஆதாம் தன் **பால் அங்கத்தால் செய்த குற்றமுள்ள கிரியையை மூடிக்கொண்டு** இருந்தான் என்பதை காட்டுகிறது. (மத் 5.29-30 வாசிக்கவும்). அது வாயாக இருந்திருக்குமானால் அதை மூடியிருப்பான். ஒருவேளை தேவன் அவனை இவ்விடத்திலே கேள்வி கேட்டிருப்பார். உன் வாயை யார் உனக்கு மூடச் சொன்னது? அதினால் என்ன தவறு இருந்தது? தொடக்கூடாது என்று சொன்னக் கனியை கடித்து புசித்தாயா? (ஜனங்கள் முகாந்திரமில்லாமல், ஏதோ ஒரு கெட்டவார்த்தை பேசின பிறகு ஓ… என்று சொல்லி, தங்கள் வாயை, தங்கள் கைகளால், மூடுவதை நீங்கள் ஒருவேளை பார்த்திருப்பீர்கள்)

**குறிப்பு :** ஆதி 2:25ல் கொடுக்கப்பட்டுள்ள 'நிர்வாணி' என்ற வார்த்தை ஆதி 3:7-11 வேறுபட்டதாய் காணப்பட்டது. இரண்டாவது, மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தை எபிரேய பாஷையில் எய்ரோம் அரம் (ARAM) என்கிற வார்த்தையின் இணைப்பில் வரக்கூடியதாய் இருக்கின்றது. அது மிகவும் கீழ்த்தரமாய் பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆனால், வெறும் காய்கறி இலைகளால் ஆதாமும் ஏவாளும் தங்களை மூடிக் கொண்டது போதுமான அளவிற்கு இல்லாதிருந்தது. அவர்களுக்கு பரிகாரம் தேவைப்பட்டது. ஏவாளின் பாவ சாயலில் **இரத்தம்** சம்பந்தப்பட்டிருந்தது. மனித ஜாதியில் இரத்தம் ஒரு **அன்னிய பொருளினால் ஊடுருவி பரவியது.** அதின் முடிவு ஒரு **கலப்பிட கீழ்தரமான காயீன்** என்ற சிருஷ்டியை உருவாக்கினது. (ஆதாம் தேவனுடைய உயர்ந்த சிருஷ்டியாய் இருந்தான். அவன் தேவ சாயலிலும், ரூபத்திலும் சிருஷ்டிக்கப்பட்டவனாய் இருந்தான். ஆனாலும், ஆதாமின் வம்சங்கள் காயீனின் வம்சங்களுடன் கலந்து வளர ஆரம்பித்த போது, அந்த தேவனுடைய சாயலும், ரூபமும் பழுதடைந்தது. அதற்கு பிறகு மனித ஜாதி, மிருக ஜாதியின் ஒரு பாகம் ஆனார்கள்).

மனுஷனும், அவனுடைய மனுஷியும் உடுத்துவதற்கு தேவன் பாவப்பட்ட மிருகங்களின் தோல்களை எடுத்து ஆடைகள் செய்ய வேண்டியது ஆயிற்று. இந்த செயல்முறையில் இரத்தம் சிந்தப்பட்டது. (ஆதி 3:21) (லேவி 4, எபி 9:22, 2கொரி 5:21 ஐ வாசிக்கவும்) பாருங்கள், **ஆதாமும் ஏவாளும் பங்கு பெற்ற அந்தக்கனி ஒரு இயற்கை மரத்துக்குரியதல்ல.** ஒரு இயற்கை மரத்தின் கனியை அவர்கள் புசித்திருந்தால் ஆதாமும், ஏவாளும் தங்களுடைய நிர்வாணத்திற்குப் பதிலாக தங்கள் வாய்களை மூடி இருக்க வேண்டும். ஆபிரகாமுடன் கூட தேவன் **உடன்படிக்கை** செய்த போது,

தேவன் **நுனித்தோலிலிருந்து** எதிர்பார்த்தது **இரத்தமே**! (இந்தக் கேள்விகளை சிந்தித்துப் பாருங்கள் 1. பாவம் எங்கே ஆரம்பித்தது? 2. ஏன் புதிய உடன்படிக்கையில் இருதயத்தின் விருத்தசேதனமாய் இருக்கின்றது?)

ஆதாமும், ஏவாளும் தங்களுடைய நீதியிழந்து தேவனுடைய பார்வையிலே ஆவிக்குரிய நிர்வாணிகளாய் இருந்தது உண்மைதான். ஆனாலும் அவர்களுடைய மாமிச நிர்வாணமே தங்களை பாவத்துக்கேற்ப, வெட்கப்படும்படிக்கு அத்தி இலையால் தங்கள் பால் உற்பத்தி அங்கங்களை மூடவும், தேவனிடத்தில் இருந்து ஒளியவும் செய்தது.

### தேவனின் நீதியும், நியாயத்தீர்ப்பும்

"வேறே சேதமுண்டானால், ஜீவனுக்கு ஜீவன், கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல், கைக்குக் கை, காலுக்குக் கால், சூட்டுக்குச் சூடு, காயத்துக்குக் காயம், தழும்புக்குத் தழும்பு பழி கொடுக்கவேண்டும் " - யாத் 21:23-25

"ஏனெனில், தேவதூதர் மூலமாய்ச் சொல்லப்பட்ட வசனத்திற்கு விரோதமான எந்தச் செய்கைக்கும் கீழ்ப்படியாமைக்கும் நீதியான தண்டனை வரத்தக்கதாக அவர்களுடைய வசனம் உறுதிப்படுத்தப்பட்டிருக்க,..." - எபி 2:2 (வெளி 13:10-ஐ பாருங்கள்).

## சர்ப்பத்தில் இருந்து பாம்பு வரை


நியாயத்தீர்ப்பை தேவன் கடந்து வர செய்யும் போது, சர்ப்பத்தை அவர் அழைக்கவில்லை. **பிசாசு** அவனுக்குத் **தலையாக** இருந்தான். அதற்குப் பதிலாக பூமியில் இருந்த மற்ற சிருஷ்டிகளுக்கு அவனை **சபித்தார்.**

நிமிர் நேரான மிருகத்தில் இருந்து சர்ப்பமானது சபிக்கப்பட்ட **வயிற்றினால்** ஊர்வன வகையைச் சேர்ந்த ஒரு **பாம்பாக மாற்றப்பட்டது**! கால்களும், கைகளும் இராமல் போனதால், ஒவ்வொரு முறை அது புசிக்கும் போதெல்லாம் மண்ணே அவனுடைய உணவான ஒரு பாகமாயிற்று. "உன் வாழ்நாள் எல்லாம் நீ மண்ணையே புசிப்பாய்" என்பதே சாபமாயிற்று. சர்ப்பத்தின் பாவத்தினுடைய சாபம் மற்ற பாம்புகளும், சர்ப்பத்தின் வகை என்கிற பேரை சுமக்க வேண்டியதாயிற்று. அவன் சாபத்திற்கு முன்பல்ல, பின்பதாகவே வயிற்றில் ஊர்கிறவனவானான் என்று நினைவு கூறுங்கள் (பின்னிணைப்பு 15-பார்க்கவும்).

ஆதியாகமம் 3:15-ல் உனக்கும் ஸ்திரீக்கும், உன் **வித்துக்கும்,** அவள் **வித்துக்கும்** பகையை உண்டாக்குவேன் என்று தேவன்








**ஆம், ஆதாமின் மனைவி சர்ப்பத்தினாலே முழுமையாக வஞ்சிக்கப்படவும் கறைபடுத்தப்படவும்**, தமது கீழ்படியாமையினால் அவள் ஸ்திரீகள் எல்லோரையும் ஆபத்தான நிலைக்கு கொண்டு வந்தாள் என்று சொல்லலாம். இப்பொழுதும் கூட தேவ ஆவியினால் பிறந்தவர்கள். தங்களுடைய புருஷர்களுக்கும், கீழ்ப்படிய வேண்டும். (எபேசியர் 5:22-24) ஸ்திரீக்கு புருஷன் தலையாக (கிறிஸ்து சபைக்கு தலையாக) இருப்பது போல் ஆகும். தங்கள் புருஷமார்களை அசட்டை பண்ணி, கீழ்ப்படியாமல் அவர்களை ஆண்டு கொள்கிறவர்களாயிருந்து, தேவனுடைய தெய்வீக பிரமாணத்தை அவமரியாதை செய்கின்றனர்.

### ஆதாமின் சாபம்

ஆதாம் மேல் தேவன் தந்த சாபம், ஆதாமின் பால் அங்கத்தின் மேல் சுமத்தப்பட்டதாய் அல்லாமல் அது நிலத்தின் மேல் உண்டானதாய இருந்தது. (ஆதி 3:17-19) ஏனெனில், பிரமாணத்தை மீறின விஷயத்தில். அவன் வஞ்சிக்கப்படவில்லை. ஆனால், ஏவாளோ வஞ்சிக்கப்பட்டிருந்தாள். (1தீமோ 2:14). ஆதாம் அவளுக்கு செவிசாய்த்து அவளுடைய பாவத்திற்கு மாத்திரம் உடன்பட்டான்.

அவன் தன் மனைவிக்கு செவிசாய்க்கும்போது அவன் என்ன செய்கிறான் என்பதை அறிந்திருந்தான். அவனுடைய இடைப்பகுதியிலிருந்து அவள் எடுக்கப்பட்டதினால் அவனுடைய பாகமாய் அவள் இருந்தாள். அவளுடைய பாவத்தினால் அவள் தொலைந்து விடுவாள் என்று அவன் அறிந்திருந்தான். ஆகவே அவளை மீட்டுக்கொள்ளும்படி

**வேதனையோடு அதிகமாய் பெருக்கப்பட்டுள்ளது**). அதுமுதல் ஒவ்வொரு ஸ்திரீயும் 28 நாட்களுக்கு ஒரு முறை அல்லது ஒரு வருடத்தில் 13 முறை கர்ப்பம் தரிக்கும் காலம் அவளுக்கு உண்டு. இந்த ஒவ்வொரு காலத்துடன் கூட, சரீரம் மிகுந்த வேதனையும், உணர்ச்சி வசப்பட்ட மன உளைச்சலும் கலந்ததாய் இருக்கின்றது.

மெய்யாகவே "ஏனெனில் தேவதூதர் மூலமாய் சொல்லப்பட்ட வசனத்திற்கு விரோதமான எந்த செய்கைக்கும் கீழ்ப்படியாமைக்கும் நீதியான தண்டனை வரத்தக்கதாக அவர்களுடைய வசனம் உறுதிப்படுத்தப்பட்டிருக்க". (எபி 2:2).

ஏவாள் தோட்டத்தின் நடுவில் இருந்த **மாறுபட்டதும்** இன்பம் தருவதும், நன்மை தீமை அறியத்தக்கதான விருட்சத்திற்கு பதிலாக, **தெய்வீக ஜீவ விருட்சத்தை** அவள் புசித்திருந்தால், இவைகள் எல்லாம் தவிர்க்கப்பட்டு இருக்கும். **இன்பம் தரும் பாலியல்** உறவே, அவளுடைய வேதனைக்கும், கர்ப்பத் தரிப்பு பெருவதற்கும் காரணமாயிற்று. இது தெய்வீக சித்தத்திற்கும், தேவனுடைய தீர்மானத்திற்கும் **முரண்பாடாயிருந்தது** (பின் இணைப்பு 14 ஐ பார்க்கவும்).

"**உன் ஆசை** உன் புருஷனைப் பற்றியிருக்கும்" என்கிற இந்த சொல் தொடர்பு நிச்சயமாகவே **ஏவாள்** முன்பதாக தன் **ஆசையை** வேறு ஒருவனுக்கு ஒப்புக்கொடுத்திருந்ததை தெரிவிக்கின்றது. "அப்பொழுது ஸ்திரீயானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து..." (ஆதி 3:6)

**ஏவாள் தன் ஆசையை முதலாவது சர்ப்பத்திற்கு ஒப்புக் கொடுத்தாள்** என்பதில் இதைக் காட்டிலும் தெளிவானது வேறு ஒன்றுமில்லை.


பரிசுத்த பவுல் சபையின் **கன்னித்தன்மை** குறித்து தன் போதனைகளில் அறிவிக்கும்போது, ஏவாள் சர்ப்பத்தினால் வஞ்சிக்கப்படும் காரியத்தை சொல்லி உள்ளார்.

"நான் உங்களைக் கற்புள்ள கன்னிகையாகக் கிறிஸ்து என்னும் ஒரு புருஷனுக்கு ஒப்புக்கொடுக்க நியமித்தபடியினால் உங்களுக்காக தேவ வைராக்கியமான வைராக்கியங் கொண்டிருக்கிறேன். ஆகிலும் சர்ப்பமானது தன்னுடைய தந்திரத்தினாலே ஏவாளை வஞ்சித்தது போல உங்கள் மனதும் கிறிஸ்துவைப் பற்றிய உண்மையினின்று விலகும்படி கெடுக்கப்படுமோவென்று பயந்திருக்கிறேன்" (2 கொரி 11:2-3).

(கிரேக்க வார்த்தை 'EXAPATAO' முழுமையாக வஞ்சிக்கப்படுவது)








தீர்க்கதரிசனம் உரைத்தார். இந்த தீர்க்கதரிசன வார்த்தையின்படி, சர்ப்பத்துக்குத் தன் **வித்தும்,** ஸ்திரீக்கும் அவளுடைய வித்தும் இருக்கின்றது என்பதை **நிரூபிக்கின்றன.**

**ஸ்திரீயின் சாபம்**

அவர் ஸ்திரீயை நோக்கி "நீ **கர்ப்பவதியாய் இருக்கும்போது உன் வேதனையை மிகவும் பெருகப்பண்ணுவேன்.** வேதனையோடு பிள்ளை பெறுவாய். **உன் ஆசை உன் புருஷனைப் பற்றி இருக்கும்.** அவன் உன்னை **ஆண்டு கொள்வான்**" என்றார் (ஆதி 3:16).

இந்த வசனத்தின் முதலாம் பாகம், பால் அங்கம், பாவ செயலுக்கு குற்றமுள்ள ஒரு அங்கமாய் இருப்பதாய் நமக்கு புரிய வைக்கின்றது. ஸ்திரீயின் அந்த பாகமே, தேவன் சபித்ததாய் இருந்தது. அவள் கர்ப்பவேதனையை அவர் பெருகப் பண்ணினார். (மிருகங்களின் ஆராய்ச்சி நமக்கு என்னத்தைக் காண்பிக்கிறது என்றால், அறிவியல் அதிகமாய் உயர்ந்த மிருகம் எதுவோ, அதின் கர்ப்பம் பிரசவிக்கும் தன்மைகளை தேவன் குறைத்திருக்கிறார். **ஸ்திரீ கர்ப்பம் பிரசவிக்கும் தன்மையோ மிகுந்த**

# "தன் இனத்தைப் போன்ற வித்து"

